# இந்து ஒளி

# HINDU OLI

அகில இலங்கை இந்து மாமன்றக் காலாண்டிதழ்
Quarterly of All Ceylon Hindu Congress

தீபம் - 16 சுடர் - 02



## மகா சிவராத்திரி

## சிறப்பு மலர்

கர வருடம் தை - பங்குனி வெளியீடு January - March 2012

# இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் வைரவிழா - 11.02.2012



←

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆரம்பகால அங்கத்துவ சங்கமான இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் வைரவிழா பூர்த்தி வைபவத்திற்கு 11.02.2012 பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியிலிருந்து ஊர்வலமாக பிரமுகர்கள் வரவழைத்து வரும் காட்சி.

விழா மேடையில் (இ-வ): திரு. ந. மன்மதராஜன், திரு. ஐ. இராசரத்தினம், பேராசிரியர் முத்தமிழ்ப் பேரரசி, ஞானவித்தகி சரஸ்வதி இராமநாதன், திருமதி ஸ்ரீபவன் நீதியரசர் க. ஸ்ரீபவன், திரு.ச. இராமச்சந்திரன், நீதியரசர் சு. ஸ்ரீஸ்கந்தராஜா, திருமதி. ஸ்ரீஸ்கந்தராஜா, திரு. கணேசராசா, கலாநிதி த. முத்துக்குமாரசாமி, திரு. கே. ரி. இராஜரத்தினம், செல்வி சாந்தினி வேலுப்பிள்ளை. →





←

பழனி ஆதீனம் குரு மகா சந்நிதான சீர்வளர்சீர் திருப்பெருந் தவத்திரு சாது சண்முக அடிகளார் அவர்களை இந்து வித்தியா விருத்திச் சங்கப் பொருளாளர் திரு. வே. கந்தசாமி கௌரவிக்கிறார். அருகில் சங்கச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன்.

வரண் பாளயம் ஆதீனம் திருநாவுக்கரசு மடம் சீர்வளர்சீர் திருப்பெருந்தவத்திரு சிவாச்சல அடிகளாரை இந்து வித்தியா விருத்திச் சங்க ஆளுநர் சபை உறுப்பினர் திரு. சின்னத்துரை தனபாலா கௌரவிக்கிறார். →



உ
சிவமயம்

# பஞ்சபுராணங்கள்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

பண் : தக்கேசி (சுந்தரமூர்த்தி நாயனார் அருளியது)

கோல மால்வரை மத்தென நாட்டிக்
கோளரவு சுற்றிக் கடைந்தெ ழுந்த
ஆல நஞ்சுகண் டவர்மிக இரிய
அமரர் கட்கருள் புரிவது கருதி
நீல மார்கடல் விடந்தனை யுண்டு
கண்டத் தேவைத்த பித்தநீ செய்த
சீலங் கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.

## திருவாசகம்

(மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது)

யானே பொய்யென் நெஞ்சும் பொய்யென் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந் துறுமாறே.

## திருவிசைப்பா

பண்: பஞ்சமம் (கண்டராதித்தர் அருளியது)

களிவான் உலகில் கங்கை நங்கை
காதலனே அருளென்
றொளிமால் முன்னே வரங்கிடக்க
உன்னடி யார்க்கருளும்
தெளிவா ரமுதே தில்லை மல்கு
செம்பொனின் அம்பலத்துள்
ஒளிவான் சுடரே உன்னை நாயேன்
உறுவதும் என்று கொலோ.

## திருப்பல்லாண்டு

பண்: பஞ்சமம் (சேந்தனார் அருளியது)

மன்னுகதில்லை வளர்க நம்பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய்மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோனடியோ
முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவிய றுக்க நெறி தந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

(சேக்கிழார் பெருமான் அருளியது)

ஆலமே யமுதமாக வுண்டுவா னவர்க்களித்துக்
காலனைமார்க் கண்டற்காக் காய்ந்தனை யடியேற்கின்று
ஞாலநின் புகழேயாக வேண்டுநான் மறைகளேத்துஞ்
சீலமே யாலவாயிற் சிவபெருமா னேயென்றார்.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

# இந்து ஒளி

தீபம் – 16 சுடர் – 02

கர வருடம் மாசித் திங்கள் 8ஆம் நாள்

20.02.2012

சுந்தரமூர்த்தி நாயனாரின் வார்த்தைகளில் "வெய்யவினை யாயவடியார் மேலொழித் தருளி வையம்மலி கின்ற....." எனப் போற்றப்பட்ட ஸ்ரீகௌரி சமேத திருக்கேதீச்சரப் பெருமானின் திருத்தலத்தில் இந்த இந்து ஒளி சுடர் (தீபம் 16 – சுடர் 02) மஹாசிவராத்திரி தினத்தன்று ஏற்றப்பட இருக்கின்றது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் முறையாக அமைந்த திருப்பதி திருக்கேதீச்சரம். கேது, மயன், மகாதுவட்டா, மண்டோதரி, இராமன், அகத்தியர் முதலிய பெருந்தவத்தோர்கள் குறை நீங்க வழிபட்டு அருள் பெற்றுயர்ந்த வரலாறுடைய தலம் இது. தேவர்கள் இங்கு புரட்டாதி மாத பூர்வபட்ச சதுர்த்தி திதியில் அர்த்த சாமப்பூசை செய்வதாகவும் ஓர் ஐதீகம் உண்டு.

கிறிஸ்துக்கு முன் ஆறாம் நூற்றாண்டில் விஜயன் இத்திருத்தலத்திற்கு வந்து சேரும் முன் இலங்கையில் திருக்கேதீச்சரம் உட்பட ஐந்து சிவத்தலங்கள் இருந்த பெருமையைப்பற்றி கலாநிதி போல் ஈ பீரிஸ் மற்றும் ஜே. டபிள்யூ. பெனட், காசிச் செட்டி பி.ஜே. பெரரா முதலிய சரித்திர ஆராய்ச்சியாளர்கள் எடுத்துரைக்கின்றனர்.

இப்படிச் சரித்திரப்புகழ் பெற்ற திருத்தலத்தை ரூபா 360 மில்லியனுக்கு மேல் செலவழித்து புனருத்தாரணம் செய்ய இந்திய அரசாங்கம் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் 17.10.2011 இல் செய்யப்பட்டு இன்னும் ஒரு சில தினங்களில் அந்த புனருத்தாரண வேலைகள் மாமல்லபுர கலைவிற்பன்னர் களினால் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது.

ஸ்ரீகௌரி சமேத திருக்கேதீச்சரப் பெருமானை இந்த மஹாசிவராத்திரி தினத்தில் வழிபட்டு மூன்று தசாப்தங்களுக்கு மேல் சோதனைகளாலும் வேதனைகளாலும் தொடர்ந்தும் வாடும் எங்கள் சகோதர சகோதரர்களின் துயரும், குறைகளும் நீங்க வேண்டிப் பிரார்த்திப்போமாக.

# இந்தச் சுடரில்...


- பஞ்சபுராணம் 01
- யாழ்ப்பாணத்தில் நல்லை ஆதீன........ 05
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கட்டுரைப்போட்டி........ 07
- திருக்கேதீச்சரமும் நாவலர் அவர்களும்........ 08
- திருக்கேதீச்சர மரபுகளும்........ 11
- திருக்கேதீச்சர ஆலயம் 15
- மனிதகுல மேன்மையின் திறவுகோலாக........ 26
- சிவதத்துவமும் சிவமூர்த்தியின்........ 28
- சித்தமழகியார் பாடரோ நம் சிவனை........ 31
- அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொங்கல் செய்தி 33
- பெரிய புராணம் உணர்த்தும் பக்திநெறி........ 35
- சிந்தனை கதைகள் 36
- காரைக்காலம்மையார் 40
- நாவலரின் இலக்கணப் பணிகள் 41
- சைவமும் நாவலரும் 42
- நல்லை நகர் நாவலர் 45
- மாசிமகமும் அருட்கவி சீ. விநாசித்தம்பியும்........ 46
- நாவலப்பிட்டி இந்து மன்றம் நடத்திய சைவசமய எழுச்சி விழா 47


**அடுத்த சுடர்**

**நந்தன வருடம்**

**சித்திரை-ஆனி**


ISSN : 2012-9645


## வாழ்த்து

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மை தரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி யஞ்சலி செய் சிற்பாம்


# இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
கர வருடம் தை பங்குனி இதழ்
20.02.2012



ஆசிரியர் குழு :
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
சிவஸ்ரீ ம. பாலகைலாசநாத சர்மா
கலாநிதி சைவஞானபானு செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்
திரு. கந்தையா நீலகண்டன்
திரு. த. மனோகரன்



| | |
|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா 50.00 |
| வருடாந்தச் சந்தா [உள்நாடு] | ரூபா 200.00 [தபாற் செலவு தனி] |
| வருடாந்தச் சந்தா [வெளிநாடு] | US டொலர் 10 |



**அகில இலங்கை இந்து மாமன்றம்**
A.C.H.C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு – 2, இலங்கை.
இணையத்தளம் : http:/www.hinducongress.lk
மின்னஞ்சல் : hinducongress@gmail.com
தொலைபேசி எண் : 0112434990, தொலைநகல் : 0112344720



இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில்
தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள்
ஆக்கியோன்களுடையதே.



HINDU OLI
Issue of
**ALL CEYLON HINDU CONGRESS**
THAI _ PANKUNI - 20.02.2012



**Editorial Board :**
Prof. A. Shanmugadas
Sivasri M. Balakailasanatha Sarma
Dr. Aru. Thirumurugan
Mr. Kandiah Neelakandan
Mr. D. Manoharan



| | |
|---|---|
| Price : | Rs. 50.00 |
| Annual Subscription (Inland) | Rs. 200.00 (Postage Exclusive) |
| Annual Subscription (Foreign) (Including Postage) | U. S. $ 10.00 |



**ALL CEYLON HINDU CONGRESS**
**A.C.H.C. Bldg.**
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo - 2, Sri Lanka.
Website : http://www.hinducongress.lk
E-Mail : hinducongress@gmail.com
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720


Next Issue :
SITHIRAI - AANI


**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**

# 07.02.2012 அன்று நடந்த நல்லை ஆதீன கட்டிடத் திருப்பணி இரண்டாம் கட்டட வேலை ஆரம்ப நிகழ்வு



ஆதீன, பிரித்தானிய திருப்பணிக் குழுத்தலைவர்
திரு. சு. பாலசிங்கம் கும்பத்தைத் தலையில் எடுத்து
கட்டிட இடத்திற்கு கொண்டு வருகிறார்.
அவருடன் குழுப் பொருளாளர் திரு. வே. சிவசுந்தரம்
பூசைத்தட்டுடன் வருகிறார்.



நிலை வைப்பு ஆரம்ப நிகழ்வில் நல்லை ஆதீன
முதல்வரும், கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களும்



வாசல் நிலை வைக்கத் தயார்.
திருவாளர்கள் நீலகண்டன், தேவசகாயம், சிவசுந்தரம்,
பாலசுந்தரம் ஆகியோருடன் ஆதீன முதல்வரும்,
ஆறு. திருமுருகன்.



வாசல் நிலைக்கு வணக்கம்.

## 07.02.2012 அன்று நடந்த நல்லை ஆதீன கட்டிடத் திருப்பணி இரண்டாம் கட்டட வேலை ஆரம்ப நிகழ்வு



குழுத்தலைவர் திரு. சூ. பாலசிங்கம் நிலையை எடுத்து நிறுத்தும் காட்சி.




மாமன்ற சமூக நலன் குழுத்தலைவர் திரு. சி. தனபாலா, கொழும்பு சைவமுன்னேற்றச் சங்கத்தின் அன்பளிப்பாக ஒரு தையல் இயந்திரத்தை வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த ஓர் அன்னைக்கு அன்பளிப்பு செய்கிறார்.



ஆதீனத்தில் நடந்த கூட்டத்தில் பொதுச் செயலாளர் திரு. க. நீலகண்டன் விளக்க உரை



செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் உரையாற்றுகிறார்.

# யாழ்ப்பாணத்தில் நல்லை ஆதீனத்துக்கான புதிய கட்டிட வேலைகளும் பத்திரிகையாளர் சந்திப்பும்

யாழ் மண்ணிலிருந்து
அ. கனகசூரியர்

இப்பொழுது நடைபெற்று வரும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் கட்டிட புனருத்தாரண வேலைகளின் இரண்டாம் கட்டத்தின் ஆரம்பமாக தைப்பூசத்தினமான கடந்த பெப்ருவரி 7ஆம் திகதியன்று நிலை வைக்கும் வைபவமும், அதனைத் தொடர்ந்து அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் ஆதீன மண்டபத்தில் பத்திரிகையாளர் சந்திப்பும் இடம்பெற்றது. இதனை நடாத்தி வைத்த இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் பின்வருமாறு தகவல் தருகிறார்.

"இலங்கையிலுள்ள ஒரேயொரு சைவ ஆதீனமான நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக்கட்டிடம் பழமையானதாகவும், வசதி குறைந்த நிலையிலும் இருந்ததால் அதனை மீள்நிர்மாணம் செய்யும் வகையில் புதிய கட்டிடத்தை அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட இந்த திருத்த வேலைகள், கடந்த நவம்பர் மாதம் 7ஆம் திகதியன்று நடந்த புதிய கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்துடன் ஆரம்பமானது.

கட்டிட புனருத்தாரண நிர்வாகக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் திரு. அ. தேவசகாயம், அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன், மாமன்ற சமூகநலன் குழுத்தலைவர் விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா ஆகியோரும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டு பேசினார்கள். ஆதீனக் கட்டிட புனருத்தாரண வேலைகளுக்கு நிதியுதவி வழங்கி வரும் இங்கிலாந்திலுள்ள நிர்வாகக் குழுவைச் சேர்ந்த அதன் தலைவர் திரு. எஸ். பாலசிங்கம், உபதலைவர் வைத்தியகலாநிதி எஸ். சோமசேகரம், உப செயலாளர் திரு. ந. சச்சிதானந்தன், பொருளாளர் திரு.வே. சிவசுந்தரம், ஒருங்கிணைப்பாளர் திரு. அ. தேவசகாயம் ஆகியோரும், அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளர், மாமன்ற சமூகநலன் குழுத் தலைவர் உட்பட மாமன்ற பிரதித்தலைவர் திரு. மா. தவயோகராஜா, பொருளாளர் திரு. வே. கந்தசாமி, மாமன்ற கட்டிடக்குழுத்தலைவர் திரு. எஸ். ரி. எஸ். அருளானந்தன் ஆகியோரும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து இங்கிலாந்தில் வாழும் சைவ அன்பர்கள் பலர் ஒன்றிணைந்து இந்த அறப்பணிக்கான நிதியுதவி முதலான சகல ஏற்பாடுகளையும் செய்து வருகிறார்கள். இந்த செயற்பாட்டுக்காக இங்கிலாந்தில் நல்லை ஆதீன கட்டிட புனருத்தாரண நிர்வாக குழுவொன்று தெரிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. திரு. எஸ்.பாலசிங்கம் குழுவின் தலைவராகவும், வைத்தியகலாநிதி எஸ்.சோமசேகரம் உபதலைவராகவும் வைத்திய கலாநிதி கணன் ஸ்ரீதரன் செயலாளராகவும் ந.சச்சிதானந்தன் உபசெயலாளராகவும் வே.சிவசுந்தரம் பொருளாளராகவும் திரு. செ.செல்வராசா உபபொருளாளராகவும் கலாநிதி அ.தேவசகாயம், திரு. தா.யோகநாதன் ஆகியோர் ஒருங்கிணைப் பாளர்களாகவும் நிர்வாகக் குழுவில் இணைந்திருந்து செயலாற்றி வருகிறார்கள். இக்குழுவினர் இங்கிலாந்திலுள்ள சைவாலயங்கள் மற்றும் தனியார்களிடமிருந்தும் நிதியுதவிகளைப் பெற்று ஆதீனக் கட்டிடப் பணிக்கு உதவி வருகிறார்கள். இவர்களது இந்த சிறப்பான பணி பெரிதும் போற்றப்படவேண்டியதாகும். எதிர்வரும் ஆவணி மாதத்தில் இடம்பெறவிருக்கும் நல்லைக்கந்தனின் வருடாந்த மகோற்சவத்துக்கு முன்பதாக ஆதீனக்கட்டிட வேலைகள் அனைத்தும் நிறைவுபெறும் என்பதையும் மகிழ்ச்சியுடன் சொல்லிவைக்க விரும்புகிறோம். அகில இலங்கை இந்துமாமன்றம் இதற்கான இணைப்பாளராகவிருந்து கட்டிடப்பணி செயற்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில் உதவி வருகிறது. இந்துமாமன்றத் தலைவர் மனிதநேயமாமணி வி.கயிலாசபிள்ளை தலைமையில் மாமன்ற உறுப்பினர்கள் அடங்கிய இணைப்புக் குழுவொன்றும் மாமன்றத்தினால் தெரிவுசெய்யப்பட்டிருப்பதுடன் இக்குழு ஆதீனக்கட்டிட வேலைகளைக் கவனித்தும் வருகிறது. கட்டிட வேலைகளை மேற்கொள்ளும் பொறுப்பை ஊரெழு ஜெயசன்ஜன் கட்டிட நிர்மாண நிறுவனத்திடம் இந்து மாமன்றம் ஒப்படைத்துள்ளது.

யாழ் மண்ணுக்கு ஒரு சிறப்புண்டு. மண்ணின் உணர்வு தனித்துவமானது. நல்லை ஆதீனம் பலப்படுத்தப்படவேண்டும் என்பதற்காக அனைவரும் உதவ முன்வந்திருப்பது போற்றப்படவேண்டியது. இந்துமாமன்றம் தமிழ் மக்களுக்காக பல சந்தர்ப்பங்களில் குரல் கொடுத்து வந்துள்ளது. சமயப் பணிகளுடன் இணைந்து மக்களது தேவைகளை அறிந்து சமூகநலப்பணிகளையும் நாடளாவிய ரீதியில் நீண்டகாலமாகவே இந்து மாமன்றம் செய்து வருகிறது. போர்க்காலச் சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்டு வன்னி நலன்புரி முகாம்களில் மக்கள் தங்கியிருந்த வேளைகளில் இந்துமாமன்றம் அவர்களுக்கு பலவகையிலும் உதவியிருக்கிறது. பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கும் நிதியுதவி செய்து வருகிறோம்.

இந்து மாமன்றத்தின் யாழ் பிராந்திய பணிமனையிலும் சைவவித்தகர் பயிற்சி நிலையமொன்றை அமைத்து அதனூடாக யாழ் மண்ணில்

சைவவித்தகர்களை உருவாக்கும் வகையில் இந்து மாமன்றம் செயற்பட்டு வருகிறது. செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் யாழ் மண்ணில் இயங்கிவரும் சிவபூமி அறநிலைப்பணிகளுக்கும் இந்துமாமன்றம் ஆதரவளித்து வருகிறது. அனைவரையும் ஒன்றிணைத்து நல்ல பணிகளைச் செய்வதற்கு இந்து மாமன்றம் என்றென்றும் விரும்புகிறது'' என்கிறார் கந்தையா நீலகண்டன்.

''நல்லை ஆதீனம் இலங்கையின் ஒரேயொரு சைவ ஆதீனமாக விளங்குகிறது. ஏனைய மதத்தவர்களின் பீடங்கள் அழகாகவும், நேர்த்தியாகவும் இருக்கும் போது பழமை வாய்ந்ததாகவும் வசதிகள் குறைந்த நிலையிலும் இருக்கும் நல்லை ஆதீனக்கட்டிடத்தை திருத்தியமைக்க வேண்டும் என்பது பலரது விருப்பமாக இருந்தது. இக்குறையைப் போக்கும் வகையில் இங்கிலாந்திலுள்ள சைவ அன்பர்கள் ஒன்றிணைந்து எடுத்துக் கொண்ட பெருமுயற்சி போற்றுதற்குரியது. கடந்த நவம்பர் மாதத்தில் இங்கு இடம்பெற்ற அடிக்கல் நாட்டும் வைபவத்தை தொடர்ந்து, இரண்டாம் கட்ட வேலைகளின் ஆரம்பமாக நிலை வைக்கும் நிகழ்வு இன்று நடைபெறுகிறது. நல்லை ஆதீனம் இயங்கும் இந்தக் கட்டிடம் நல்லூர்கந்தன் ஆலயத்தை நிர்வகித்துவரும் மாப்பாண முதலியார் பிறந்து வளர்ந்த வீடாகும். இது பின்னர் பல தர்மகாரியங்களைச் செய்து வந்துள்ள புத்தூர் மழவராயர் குடும்பத்திற்கு கைமாறியது. வாடகை வீட்டில் இயங்கி வந்த நல்லை ஆதீனத்தை சிறப்பான வகையில் நடத்திச் செல்வதற்காக அப்போது ஆதீன முதல்வராகவிருந்த முதலாவது குருமகா சந்நிதான சுவாமிகளுக்கு 1966ஆம் ஆண்டில் மழவராயர் குடும்பத்தினர் இந்தக்கட்டிடத்தை அன்பளிப்புச் செய்தார்கள். அதன் பின்னர் இங்கு குருபூசைகள், பிரார்த்தனை சமய நிகழ்வுகள் என்பன நடைபெற்ற வந்ததால் ஒரு தெய்வீக நிலை உருவானது. இவ்வாறு செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் நல்லை ஆதீன திருப்பணி வேலைகளின் நிலை வைக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசும்போது கூறினார்.

ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கும்போது, ''எமது நாட்டில் ஏனைய மதத்தினரின் செயற்பாடுகளுக்கு பலவகையிலும் உதவிகள் கிடைக்கும்போது, எங்கள் மதத்திற்கு கிடைப்பது குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். இந்த நிலையில் இங்கிலாந்து வாழ் சைவப்பெருமக்கள் ஆதீனப் புனருத்தாரணப் பணிகளுக்கு செய்து வரும் பேருதவி சிறப்பாகப் போற்றப்படவேண்டியதாகும். இதுபோலவே, ஆதீனத்தின் வளர்ச்சிக்கும் பல்வேறு பட்ட பணிகளுக்கும் அனைவரும் பங்களிப்புச் செய்து உதவ வேண்டும். ஆதீனக் கட்டிட வேலைகள் நிறைவுபெற்ற பின்னர் குருமார்களுக்கான வேதாகம பயிற்சி, சைவசித்தாந்த வகுப்புகள், யோகாசனப் பயிற்சி போன்ற பலவற்றை செயற்படுத்துவதற்கு ஆதீனம் திட்டமிட்டுள்ளது'' என்றார்.

இங்கிலாந்தில் இயங்கும் நல்லை ஆதீன கட்டிட புனருத்தாரண நிர்வாகக் குழுவின் தலைவர் எஸ்.பாலசிங்கம் பேசும்போது ''இந்தியாவில் இயங்கும் ஆதீனங்களுக்கு பலவகையான சொத்துக்கள் இருக்கின்றன. அதன் மூலம் வருமானமும் கிடைக்கிறது. ஆனால் இங்குள்ள நல்லை ஆதீனத்திற்கு அத்தகைய வசதிகள் இல்லை. நல்லை ஆதீனத்தை நல்ல வகையில் புனரமைப்புச் செய்து இங்கு சைவப்பண்பை வளர்க்கவும், அதனூடாக சைவ வாழ்க்கை நெறியினை அமைத்துக் கொள்ளவும் குறிப்பாக சைவப்பாரம்பரிய முறைப்படி இளஞ்சந்ததியினரை வழிப்படுத்தவும் ஏற்ற வகையிலான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கு புலம்பெயர் மக்களாகிய நாங்கள் விரும்பியிருக்கிறோம்''. என்று குறிப்பிட்டார்.

ஆதீனக் கட்டிடப் பணிகளுக்கு நிதியுதவி வழங்கிவரும் இங்கிலாந்து நல்லை ஆதீனக்கட்டிட புனருத்தாரண நிர்வாகக்குழுத்தலைவர் எஸ்.பாலசிங்கம் மேலும் விளக்கம் தரும்போது ஆதீன கட்டிட வேலைகள் நிறைவடைந்து இயங்கத் தொடங்கிய பின்னர் யாழ் மண்ணில் மக்கள் சைவப் பண்புடனான வாழ்க்கை நெறியினையும் குறிப்பாக இளம் சந்ததியினர் சைவப் பாரம்பரிய முறைகளையும் பின்பற்றுவதற்கு ஏற்றவகையிலான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கு விரும்பியிருக்கிறோம். இந்து மாமன்றத்தின் சார்பாக மூன்று உறுப்பினர்களும் ஆதீனத்தின் சார்பாக யாழ் மண்ணிலிருந்து மூன்று உறுப்பினர்களும் இங்கிலாந்திலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களும் அடங்கிய ஆலோசனை சபையொன்று உருவாக்கப்பட்டு அதன் ஊடாக. எதிர்காலத்தில் ஆதீனத்தின் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்'' என்று குறிப்பிட்டார்.

நல்லை ஆதீன கட்டிட புனருத்தாரண நிர்வாகக் குழுவின் ஒருங்கிணைப்பாளரான அ.தேவசகாயம் பின்வருமாறு சொல்கிறார்.

''இங்கிருந்து புலம்பெயர்ந்து வாழும் நாங்கள், லண்டனில் பல சைவ மாநாடுகளை நடத்தியிருப்பதுடன் பல ஆதீன தலைவர்களையும் பல அறிஞர்களையும் அழைத்து பேசவைத்துள்ளோம். நல்லை ஆதீன தலைவர் வந்து பேசும் போது ஆதீனத்தின் குறைபாடுகளை யெல்லாம் எடுத்துச் சொல்வார். புலம்பெயர் நாடுகளில் வந்து சமயத்தை வளர்க்கும்போது எங்கள் சொந்த மண்ணில் இருக்கும் ஆதீனத்தை கவனிக்க வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது. சர்வதேச ரீதியாக வாழ்ந்துவரும் அனைத்து சைவ மக்களையும் ஒன்றிணைத்து நிதியுதவிபெற்று ஆதீன புனருத்தாரண வேலைகளைச் செய்வதற்கு ஏற்கனவே நினைத்திருந்தோம். கடந்தகால போர்ச்சூழ்நிலைகள் அதற்கு சாதகமாக அமையவில்லை. இந்தப் பெரும்பணி இங்கிலாந்து வாழ் சைவ மக்களுக்கு மாத்திரம் உரியதல்ல. உலகம் வாழ் அனைத்து சைவ மக்களுக்கும் உரியது. ஆதீனப் புனருத்தாரணப் பணிகளுக்கு இந்து மாமன்றம் முதுகெலும்பாகவிருந்து எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிவருகிறது. இதற்காக இந்து மாமன்றத்திற்கும், ஏற்கனவே ஆதீனம் இயங்குவதற்கு காணியையும் கட்டிடத்தையும் அன்பளிப்பாக கொடுத்து உதவிய புத்தூர்

மழவராயர் குடும்பத்தினருக்கும், இங்கிலாந்து வாழ் சைவ மக்கள் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்'' என்கிறார் அ.தேவசகாயம்.

கட்டிட புனருத்தாரண நிர்வாகக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் அ.தேவசகாயம் அகில இலங்கை இந்துமாமன்றப் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் மாமன்ற சமூகநலன் குழுத்தலைவர் விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா ஆகியோரும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டு பேசினார்கள். ஆதீனக் கட்டிட புனருத்தாரண வேலைகளுக்கு நிதியுதவி வழங்கிவரும் இங்கிலாந்திலுள்ள நிர்வாகக் குழுவைச் சேர்ந்த பல உறுப்பினர்களும் அகில இலங்கை இந்து மாமன்ற உறுப்பினர்களும் மேற்படி வைபவத்தில் கலந்து கொண்டார்கள்.

இந்து மாமன்றத்தின் சமூக நலத்திட்டத்தின் கீழ் போர்க்காலச் சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வறுமைக்கோட்டின் கீழ்வாழும் மக்களுக்கான வாழ்வாதார உதவியாக இரண்டு குடும்பப் பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வும் மேற்படி வைபவத்தின் இறுதியில் இடம்பெற்றது. கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம் இந்த இரு தையல் இயந்திரங்களையும் அன்பளிப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வத்துளு ஓயா, புளிச்சாங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய தாக்குதலும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் நடவடிக்கையும்

புளிச்சாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபையினர் (29.01.2012) இரவு 7.00 மணியளவில் ஆலயத்தில் சிவராத்திரி சம்பந்தமான கூட்டமொன்றை நடத்திக் கொண்டிருந்தபோது விஷமிகள் சிலர் ஆலயத்துள் நுளைந்து திடீர் தாக்குதலை நடத்தியதுடன், ஆலயத்தின் மண்டபத்திலிருந்த பொருட்களை சேதப்படுத்தியதோடு ஆசிரியர் ஒருவரை வாளால் வெட்டியும் அராஜகம் புரிந்துள்ளனர். என நிர்வாக சபை தொலைநகல் மூலம் அகில இலங்கை இந்துமாமன்றத்திற்கு அறிவித்திருந்தது.

இதற்கு மாமன்றப் பொதுச்செயலாளர் கந்தையா நீலகண்டன் அவர்கள் பொலிஸ்மா அதிபர், புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சு மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பவற்றுக்கு உடன் அறிவித்து கண்டனத்தைத் தெரிவித்து, இதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார். அதேவேளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசனும் உடன் உரிய நடவடிக்கை எடுத்தார். இதன் பயனாக முந்தலம பொலீஸ் பொறுப்பதிகாரி இந்த கலகக்காரர்களை சட்டப்படி கைது செய்திருப்பதாகவும் இவர்களை நீதிமன்றத்தில் விசாரணைக்கு நிறுத்த நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் தொலைநகல் மூலம் அறிவித்திருந்தார்.

## அகில இலங்கை இந்து மாமன்றம் பாடசாலை மட்டத்தில் நடத்திய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவுதின கட்டுரைப் போட்டி முடிவுகள்.

### மேற்பிரிவு :- நாவலரின் இலக்கணப்பணி

**முதலாம் பரிசு (3000 ரூபா)**
செல்வன் செங்கதிர்ச்செல்வன் சேயோன்
- யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

**இரண்டாம் பரிசு (2000 ரூபா)**
செல்வி. ச. ஹெலன் ஜனனி
- கொறவில தமிழ் மகா வித்தியாலயம், அப்கொட்

**மூன்றாம் பரிசு (1000 ரூபா)**
செல்வி பா. பாலினி – றிபேக் கல்லூரி, சாவகச்சேரி

**ஆறுதல் பரிசுகள்**
செல்வி. கெ. கவியோசினி – பெண்கள் உயர்தரப் பாடசாலை, கண்டி
செல்வன். வே. குகதாசன் – சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி, மன்னார்

### மத்திய பிரிவு :- சைவமும் நாவலரும்

**முதலாம் பரிசு (3000 ரூபா)**
செல்வி என். கமலினி – புனித ஜோசேப்பர் தமிழ் மகா வித்தியாலயம், மஸ்கெலியா

**இரண்டாம் பரிசு (2000 ரூபா)**
செல்வி கோ. ஜனகமகள் – தேத்தாதீவு மகா வித்தியாலயம், களுவாஞ்சிக்குடி

**மூன்றாம் பரிசு (1000 ரூபா)**
செல்வி காயத்திரி தேவசுதன் – விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்

**ஆறுதல் பரிசுகள்**
செல்வி விஜிதா சுரேஸ்குமார் – மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை
செல்வி சு. வசந்தமலர் – லொயினோன் தமிழ் வித்தியாலயம், பொகவந்தலாவ

### கீழ்ப்பிரிவு - நல்லைநகர் நாவலர்

**முதலாம் பரிசு (3000 ரூபா)**
செல்வி . யு. சங்கீதா – லொயினோன் தமிழ் வித்தியாலயம், பொகவந்தலாவ

**இரண்டாம் பரிசு (2000 ரூபா)**
செல்வி. க. ஹம்ஷாயினி – இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம், வவுனியா

**மூன்றாம் பரிசு (1000 ரூபா)**
செல்வன் ஆ. அபிநந்தன்
- யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

**ஆறுதல் பரிசுகள்**
செல்வன் சு. மாதவன் – கொழும்பு இந்துக் கல்லூரி, கொழும்பு-04
செல்வி ம. லக்சனா – கற்சிலைமடு அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை, ஒட்டுசுட்டான்

# திருக்கேதீச்சரமும் நாவலர் அவர்களும்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை



கருதநின்ற கேதீச்சரங் கைதொழக் கடுவினை
யடையாவே

திருக்கேதீச்சரம் திருகோணமலைக்கு வெகு வெகு காலத்தால் முந்தியது. திருக்கேதீச்சரப் பழைமை சரித்திரத்துக்கோ, அகழ்வாராய்ச்சிகளுக்கோ எட்டாதது. புராணேதிகாசங்களால் ஒருவாறு ஊகிக்கப்பாலது.

ஒரு கற்பத்தில் மேரு மலையின் மூன்று சிகரங்கள் தென் கடலில் வீசப்பட்டன. அவற்றுள் ஒரு சிகரம் இந்திரன் ஆணையால் தேவதபதியான விசுவகன்மாவால் இலங்காபுரியாக அமைக்கப் பட்டது.

மற்றொரு சிகரம் திருக்கேதீச்சரம். அச்சிகரத்தைக் கொண்டு விசுவகன்மாவின் மூத்த புதல்வனான மகாதுவட்டா, ஒரு சிறு நகரஞ் செய்து அதன் மத்தியில் ஒரு சிவஸ்தலத்தையும் அமைத்தான்: நகரம் அவன்பெயரால் மகா துவட்டாபுரம் எனப்பட்டது. அதுவே மாதோட்டம் என மருவிற்று. மத்தியில் அமைத்த சிவஸ்தலம் சிகரத்தின் பெயராகிய திருக்கேதீச்சரம் என வழங்குகின்றது.

மாதோட்டத்தோடு கூடிய திருக்கேதீச்சரம் வேறு: இலங்கை வேறு. இரண்டும் ஒரு காலத்தில் உண்டானவை.

மூன்றாஞ் சிகரம் கந்த மாதனம். இது இராமர் அணைகட்டிய போது நிலப்பரப்பாக அமைக்கப் பட்டது.

கால அடைவில் கந்த மாதனம் இராமேசுவரத்தோடும், மாதோட்டத்தோடு கூடிய திருக்கேதீச்சரம் இலங்கையோடும் இணைந்து விட்டன.

மற்றொரு கற்பத்தில் இமாசல கைலாசத்தின் மூன்று சிகரங்கள் தக்ஷிண பூமியில் வீசப்பட்டன. அவற்றுள் ஒன்று திருகோணமலை. அது இலங்கையில் வீழ்ந்தது. மற்றவை திருக்காளத்தியும், திரிசிராப்பள்ளியுமாம்.

மூன்றுந் தக்ஷிண கைலாசங்கள்.

திருக்கோணமலையைக் கைலாசம் என்று வழங்குவது போல, மேரு சிகரமாகிய திருக்கேதீச்சரத்தை அவ்வாறு வழங்குவதில்லை.

மகா துவட்டாவுக்கு இருவர் தம்பியவர். ஒருவர் மநு: மற்றையவர் மயன். மயன் புதல்வி மந்தோதரி. நித்திய கன்னிகைகள் வரிசையைச் சேர்ந்த உத்தமி மந்தோதரி: இராவணன் மனைவி. இராவணன் மணக்கும் போது அவள் வயிற்றிற் சிவகர்ப்பமாயிருந்து இலங்கையிற் பிறந்தவள் சீதை. இவ் வரலாறு இடைப்பிற வரலாயினும் இங்கே அறியத் தக்கது.*

---

* இங்கே காட்டப்பட்ட வரலாறுகளுக்கு ஆதாரம், ஈழ மண்டல சதகத்திலுள்ள "சுருதி பயில் அறிஞன் துவட்டா" என்று தொடங்குந் திருக்கேதீச்சரப் பாடலும், "தென் கயிலையாகியொளிர் திரிகோணமலை" என்ற பாடலும் அவற்றின் உரையுமாம். சதக மியற்றி உரையுஞ் செய்தவர் பௌராணிகரும், உரையாசிரியருமான ம. க. வேற்பிள்ளை. இவர் நாவலரின் மாணவராவர்.

வெகு காலத்துக்கு முன்னமே திருக்கேதீச்சரத் தலம் மண் மழை பெய்து மணல் மூடிப் பின் காடாய் விட்டது என்று கர்ண பரம்பரைக் கதையுமுண்டு.

சமய குரவர்களாகிய மூவர் நாயன்மார் காலத்திலும் திருக்கேதீச்சரம் காடாகவே யிருக்கலாம்: தேவாரப் பாடல்களிற் காணப்படும் திருக்கேதீச்சரம் அவர்கள் அகக் காட்சியிற் காட்சியளித்ததாகலாம் எனக் கருதலாம்.

"கருத நின்ற கேதீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே" என்ற ஞானசம்பந்தம் பிள்ளையார் வாக்கில் கருத நின்ற கேதீச்சரம் கருத்தகத்தே கண்ட மறைந்த கேதீச்சரம் என்னலாம்.

திருக்கேதீச்சரம் சம்பந்தப் பிள்ளை-யாராலும் சுந்தரமூர்த்தி நாயனாராலும் பாடப்பட்ட பெருமை வாய்ந்தது. திருக்கேதீச்சரம் என்னும் நாமம் திருநாவுக்கரசர் திருநாவால் உச்சரிக்கப் பட்டது. மந்திர சக்தி வாய்ந்தது. இவ் வாற்றால் தனக்குத் தானே இணையாய தனிச் சிறப்பு வாய்ந்த புனிதத் தலம் திருக்கேதீச்சரம்.

புனிதம் மிக்க தைவிக சிவத்தலங்கள் வழிபடும் பக்குவர்கள் அருளிய காலத்தில் மறைவதும், பக்குவர் சிலரின் தவ விசேடத்தினால் ஒரு பாகமோ முழுவதுமோ வெளிப்படுவதும் இயற்கை என்று அறிந்தோர் கூறக் கேட்டதுண்டு.

எத்தனையோ நூற்றாண்டுகள் கழித்து, சென்ற நூற்றாண்டு மத்தியில் ஒரே ஒரு ஆறுமுக நாவலர் இருதயத்தில் திருக்கேதீச்சர எண்ணம் கருக்கொண்டது. "யாழ்ப்பாணச் சமய நிலை" என்ற துண்டுப் புத்தகத்தில் இறுதிப் பந்தி,

> சைவ சமயிகளே! தேவாரம் பெற்ற சிவஸ் தலங்களுள் இரண்டு இவ்விலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்றாகிய திருக்கோண மலைக்குச் சம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிக மொன்றிருக்கின்றது. மற்றொன்றாகிய திருக் கேதீச்சரத்துக்கு திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றுஞ் சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பதிக மொன்றும் இருக்கின்றன. இத் திருக்கேதீச்சரம் வட மாகாணத்தின் கண்ணுள்ள மன்னாருக்கு அதி சமீபத்திலிருக் கின்ற மாதோட்டத்திலுள்ளது. இத் திருக்கேதீச் சரம் அழிந்து காடாகக் கிடக்கின்றதே! புதிது புதிதாக இவ் விலங்கையில் எத்தனையோ கோயில்கள் கட்டப்படுகின்றனவே! நீங்கள் இந்த மகா ஸ்தலத்தைச் சிறிதும் நினையாத தென்னையோ! இவ்விலங்கையிலுள்ள விபூதி தாரிகள் எல்லாருஞ் சிறிது சிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந்தொகைப் பொருள் சேர்ந்து விடும்! இதை நீங்கள் எல்லீருஞ் சிந்தித்து இத்திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின் அருட் கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வார்.

எனக் கூறிச் சைவர்களை ஊக்கப்படுத்துகின்றார் நாவலர் பெருமான்.

திருக்கேதீச்சர நிலம் அரசாங்கச் சொத்தாய் வடமாகாண அதிபதியின் அதிகாரத்தில் இருந்தது. நாவலரின் இளமைக் காலத்தில் "டைக்கும்" மத்திய காலத்தில் "றசலும்" மாகாண அதிபதிகளாயிருந்து நாவலருக்கு உறுதுணை புரிந்தவர்கள். அவர்கள் காலத்தில் திருக்கேதீச்சர எண்ணம் கருக்கொண்டிருக்கு மாயின், நாவலர் பெருமானே விதிப்படி சிவாலயம் எடுத்துப் பூசைக் கிரமம் முதலியன பற்றிப் பத்ததியுஞ் செய்து வைத்திருப்பார்.

றசலைத் தயாநிதி என்கின்றார் நாவலர். றசலுக்குப் பின் வந்தவர் துவைனம். திருக்கேதீச்சர நிலத்தை துவைனம் மூலம் நாவலர் பெற விரும்ப வில்லை. காரணம் துவைனத்தின் உத்தியோக நடை முறையில் நாவலருக்கு அருவருப்பு உண்டாயிருக்க வேண்டுமென்று ஊகிக்கலாம்.

பெரியோர்கள் நீதி நெறிக்குப் புறம்பானவர் களிடம் எதையும் பெற விரும்புவதில்லை. அதற்கு எத்தனையோ உதாரணங்கள் உள. நீதிக்குப் புறம்பானவர்களின் உதவி, எடுத்த கருமத்தை மாசுபடுத்தும் என்பதைப் பெரியோர்கள் நன்கு அறிவார்கள்.

நாவலரின் அந்நிய காலத்தில் துவைனத்தின் அநீதி மிகப் பிரகாசமாயது. மழையின்றிய பஞ்ச காலத்திலும், பேதி நோய்க் காலத்திலும், ஏழைகளுக்குக் கிடைக்க வேண்டிய அரசாங்க உதவிகளை துவைனமும், கீழுள்ளவர் களும் அப்படியே உறிஞ்சிவிட்டார்கள்.

சமயம்! சமயம்!

இது நல்ல சமயம்!

வெகு சனத் துரோகம்!

என்ற துண்டுப் புத்தகங்கள் துவைனத்தின் மீது நாவலர் கொடுத்த வச்சிர குலிசங்கள்.

யாழ்ப்பாணத்துக் கச்சேரி அநீதி, பொய், கோள் முதலிய புத்தகங்கள் படிப்பிக்கிற கலீசு (College) அதற்குத் தலைவர் (Principal) துவைனந் துரை: உபாத்தியாயர்கள் "பாவந் தோன்றிய நாளையிற் றோன்றிய பாதகன்" ஆகிய முதலியார் முதலிய சில உத்தியோகத்தர்கள்: அவைகள் படிப்பிக்கிற தாலுகாப் பள்ளிக் கூடங்கள் (Taluk Schools) சில தலைமைக்காரர்களுடைய தானங்கள்.

ஏழைகளுக் கிரங்கி இவ்வாறெழுதிய நாவலர் பெருமானின் தைரியம் பற்றி என்ன நினைக்கலாம். மேற் காட்டிய மூன்று கட்டுரைகளும் நாவலர் பிரபந்தத்தில் உள்ளவை. யாவரும் படித்து நாவலர் யார் எத்தகையினர்! என்பதை ஊன்றி உணரக் கடவர்கள். நாவலர் குடியேற்ற நாட்டு மந்திரி பரியந்தம், துவைனத்தின் ஊழல்களை எடுத்துக் காட்டி வாதித்தார். துவைனம் தம் மீது ஏற்றும் குற்றங்களைப் பரிகரியாத வழி உத்தியோக இழப்பு ஒன்றோ உடற்றண்டமும் பெறும் நிலை நேர்ந்தது. துவைனம் செய்வதறியாது திகைத்தார்.

இந்நிலையில் நாவலர் பெருமானுக்கு அழைப்பு வந்து விட்டது. நாவலர் மறைந்தார் என்ற வார்த்தை கேட்ட அக்கணமே, துவைனத்திற்கு விழிப்புணர்ச்சி உண்டாயது. கச்சேரிக்கு விடுதலை அளித்து, கச்சேரி உத்தியோகத்தர் அனைவரையும் நாவலர் பெருமானின் இறுதிச் சடங்கில் பங்கு பற்றச் செய்தார். அடுத்த சில ஆண்டுகளுக்குள் திருக்கேதீச்சர நிலத்தை அந்நிய மதத்தர் கைப்படாமல் வெகு திறமையாகச் சைவர்களுக்கே ஆக்கி வைத்தார் துவைனம். நாவலர் பெருமான் துவைனத்தைக் கேளாமலே காரியம் நிறைவேறியது.

நாவலர் பெருமானின் தவ சக்தி இருந்தவாறு!

# இரத்மலானை இல்லப்பிள்ளைகளின் ஜனவரிமாத பிறந்தநாள் விழா

இரத்மலானை சக்தி இல்லப்பிள்ளைகளின் ஜனவரி மாத பிறந்த தின விழா (15-01-2012) ஞாயிற்றுக்கிழமை பொங்கல் தினத்தன்று மாலை 5.00 மணிக்கு சக்தி இல்லத்தில் ஆரம்பமானது. இவ் விழாவிற்கு மாமன்றத் தலைவர், பிரதித்தலைவர், பொதுச் செயலாளர், விடுதிக்குழுச் செயலாளர், இவர்களோடு சமூகநலன் குழுத் தலைவர் மற்றும் முகாமைப் பேரவை உறுப்பினர்கள், இந்து வித்தியாவிருத்திச் சங்கத் தலைவர் இவர்களோடு புறக்கோட்டை அரிமாசங்க உறுப்பினர்கள் என பலரும் வருகை தந்திருந்தனர். விழா இல்லப்பிள்ளைகளின் வேத பாராயணத்துடன் ஆரம்பமானது. பிறந்த நாளைக் கொண்டாடும் ஒன்பது பிள்ளைகளுக்கும் பிரத்தியேகமாக ஆசனங்கள் போடப்பட்டு அவர்கள் முன்னால் மேசையில் கேக்குகள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன.

ஆரம்பத்தில் பிள்ளைகளை உற்சாகப்படுத்தும் நோக்கில் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் விடுகதை கேட்டு பிள்ளைகளை பதில் கூறுமாறு கேட்டுக் கொண்டார். இல்லப்பிள்ளைகள் விடுகதை ஒவ்வொன்றுக்கும் உற்சாகமாகப் பதிலளித்தனர். அதனைத் தொடர்ந்து இரத்மலானை இந்துக் கல்லூரியில் தங்கள் தங்கள் வகுப்பில் அதிக புள்ளிகளைப் பெற்ற பிள்ளைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. பரிசுகளை இரத்மலானை இந்துக் கல்லூரி இளைப்பாறிய அதிபர் திரு என். மன்மதராசனும், புதிய அதிபர் திரு தி. கணேசராஜாவும் பரிசில்களை வழங்கி ஆசீர்வதித்தனர். அதனைத் தொடர்ந்து இல்லப்பிள்ளை களின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

இரத்மலானை விடுதி மாணவிகள் இருவரும் மாணவனும் பங்குபற்றிய இவ் வரவேற்பு நடனம் கண்களுக்கு விருந்தாக விருந்தது. நிகழ்வில் தொடர்ந்து இரத்மலானை இந்துக்கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் திரு மன்மதராஜன் அவர்களையும் புதிய அதிபர் தி. கணேசராஜா அவர்களையும் கௌரவிக்கும் முகமாக மலர்மாலை அணிவித்து பாராட்டுத் தெரிவித்தனர். திரு. மன்மதராஜன் இந்துக்கல்லூரிக்கு ஆற்றிய சேவைகளையும், தொண்டினையும் பொதுச் செயலாளர் விபரமாக விளக்கினார். அதே வேளை புதிதாக பதவியேற்றிருக்கும் கணேசராஜா அவர்களும் கல்லூரிக்கு சிறந்த பங்களிப்புச் செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். திரு. தி. கணேசராஜா பேசும்போது தனது பணி கல்விப்பணி மட்டுமல்ல, சமூகப்பணியும் இணைந்ததாக இருப்பதையிட்டு மகிழ்வதாகவும் இக்கல்லூரியின் பின்புலன் நன்கு தெரியும் எனவும் கூறி பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் கல்லூரியை மீளவும் பெற்று இந்துப்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக பல்வேறு பணிகளையாற்றி வரும் இந்து வித்யாவிருத்திச் சங்கம், அகில இலங்கை இந்து மாமன்றம் ஆகியவற்றின் பணிகளுக்கு தன்னாலான முழு ஒத்துழைப்பையும் தருவதாகவும் கூறினார்.

இறுதியாக பக்திப் பாடல் ஆங்கிலப் பாடல் என்பவற்றை சக்தி இல்லப் பிள்ளைகள் பாடினார்கள், WHEN THE SUN SHINE எனும் ஆங்கிலப் பாடலை நான்கு மாணவிகள் இனிய குரலோடும், சிறந்த உச்சரிப்போடும், நல்ல மெட்டுடனும் பாடி அனைவரின் கரகோசத்தையும் பெற்றனர். பிறந்த நாளைக் கொண்டாடும் பிள்ளைகளுக்கு கேக் வெட்டி கரகோசத்தின் மத்தியில் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

# திருக்கேதீச்சர மரபுகளும் ஐதீகங்களும்

பேராசிரியர் வி. சிவசாமி
ஓய்வுநிலை சமஸ்கிருத மொழிப்பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



ஈழத்திருநாட்டிலே புராதன காலம் தொட்டுச் சைவம் நிலவி வருகின்றது. இங்குள்ள சிவத்தலங்களிலே திருக்கேதீச்சரமும் திருக்கோணேஸ்வரமும் புராதன வரலாற்றுப் புகழ்பெற்றவை. இவ்விரு திருத்தலங்களுக்கும் சிறப்பு வாய்ந்த மரபுகளும் ஐதீகங்களும் நிலவிவருகின்றன. மேலும் இவை மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றின் சிறப்பும் வாய்ந்தவையாம்.

திருக்கேதீச்சரம் பற்றி விபரமாக அறிதற்கான நம்பகமான வரலாற்று மூலங்கள் அதிகம் இல்லாவிடினும் தமிழ், சங்கதம், பாளி, சிங்களம் முதலிய மொழிகளிலுள்ள தொல்லியற் சின்னங்கள் சிலவும் வெளி நாட்டாசிரியர் குறிப்புகள் சிலவும் இத்திருத்தலம் பற்றி அறிதற்கு ஓரளவு துணை புரிகின்றன.

புராதன காலத்திலே திருக்கேதீச்சரம் மகாதுவட்டாபுரம் என அழைக்கப்பட்டதாகவும் அப்பெயரே மாதோட்டம், மாந்தோட்டை, மாந்தை என மருவி வந்துள்ளதாகவும் ஒரு சாரார் கருதுவர். இவ்விடம் புராதன பாளி, சிங்கள நூல்களில் மஹாதித்த, மஹாதித்த பட்டணகாம, மஹாதித்த பட்டண, மஹாவுடு எனவும் அழைக்கப்பட்டு வந்துள்ளது. மஹாதித்த என்னும் சொல் வடமொழியிலுள்ள மஹாதீர்த்தம் எனும் பதத்திலிருந்து வந்திருக்கலாம். அவ்வாறாயின் இஃது பெரிய தீர்த்தம் உடைய இடமாக விளங்கிற்று எனலாம். இத்தலத்திலுள்ள பாலாவித் தீர்த்த விசேடம் தேவார முதலிகளை நன்கு கவர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பௌத்த மரபுகளிலும் இவ்விடம் சைவசமயச் செல்வாக்குக் கூடுதலாக நிலவிய இடமாகக் கூறப்படுவதும் மேற் குறிப்பிட்ட கருத்தினை மேலும் அரண் செய்கின்றது. பொதுவாக நோக்கும் போது மாந்தையினைப் புராதன இலங்கையின் முக்கியமான ஒரு துறைமுக நகராகவும் திருக்கேதீச்சரத்தினை அங்கு மிளிர்ந்த பிரடல்லியமான சிவத்தலமாகவும் கொள்வதே பொருத்தமானதாகும். இலங்கையின் மரபுவழி வரலாற்றினைக் கூறும் மகாவம்சம், சூளவம்சம் ஆகியன மாதோட்டத்திற் கூடாக விசயன் காலந்தொட்டு இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலே நிலவி வந்துள்ள தொடர்புகள் சிலவற்றைக் குறிப்பிடுதல் கண்டு சுட்டற்பாலது.

## பௌராணிகர் மரபுகள்

தமிழகத்திலுள்ள பிரதான கோவில்கள் சிலவற்றிற்கு இருப்பதைப் போன்று திருக்கேதீச்-சரத்திற்கும் பழைய புராணமொன்று

இருந்திருக்கலாம். சேர். பொன். இராமநாதன் இதன் சிறப்புக் கூறும் புராணமொன்று இருந்து மறைந்து விட்டதாக 1887 இல் இலங்கை வேத்தியல் ஆகிய சங்கத்திலே "போக்" திருக்கேதீச்சரம் பற்றி வாசித்த கட்டுரையொன்று இதுபற்றி விமர்சிக்கும் போது குறிப்பிட்டுள்ளார்.[1] வடமொழியிலுள்ள ஸ்காந்த புராணத்தின் பகுதியாம் தக்ஷிண கைலாச மஹாத்திமியத்திலே ஸ்ரீ கேதீஸ்வர க்ஷேத்திர வைபவம் என்ற பிரிவிலே திருக்கேதீச்சரச் சிறப்புப் பௌராணிகர் ரீதியிலே கூறப்பட்டுள்ளது.[2]

> பெருமை வாய்ந்த தஷிணகைலாஸம் என்னும் திருக்கோணாசலத்திலே சிவபெருமான் உமையம்மையாருடன் பிரயஷமாக இருத்தலினாலும் மாதோட்டம் என்னும் திருக்கேதீஸ்வரத்திலே அடியார்க்கருள் புரியும் நோக்கமாகக் கௌரியம்பிகை நேத்திரானந்தம் கொள்ளப் பஞ்ச கிருத்திய நடனஞ் செய்து கொண்டிருத்தலினாலும் இவ் இலங்கா தேசமானது 56 தேசங்களிலும் சிறந்ததாக விருக்கின்றது. இதற்கொப்பான தேசம் பிறிதொன்றுண்டானதுமில்லை. இனி உண்டாவதுமில்லை.[3]

என முக்காலம் உணர்ந்த சூதமுனிவர் நைமிசாரணிய முனிவர்களுக்கு எடுத்துரைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. மேலும்,

> எவ்வருணத்தினனாயினும் எக்குலத்தினனாயினும் பாலாவித் தீர்த்தத்திலே மூழ்கித் திருக்கேதீஸ்வர தரிசனம் செய்வானேல் போகம் மோட்சம் இரண்டையும் பெறுவான். இத்தலத்துக்கிணையான புண்ணிய ஷேத்திர முன்னுண்டானதும் இனியுண்டாவதுமில்லை.[4]

என்றும் இப்பகுதியிற் கூறப்பட்டுள்ளது. சைவப் பௌராணிகர் மரபில் இலங்கையிலுள்ள இரு சிவத்தலங்களின் பெருமையுஞ் சிறப்பும் எவ்வாறமைந்தன என்பதற்கு முற்கிளந்த பகுதிகள் சான்றாவன. இந்நூலினைத் தழுவி 1970 இல் அச்சுவேலி சிவஸ்ரீ ச. கு. வைத்தீஸ்வரக் குருக்கள் திருக்கேதீச்சரப்புராணம் பாடியுள்ளார் என்பது ஈண்டு நினைவு கூரத்தக்கது.

ஆதிசேடனும் வாயுதேவனும் புரிந்த கடும் போரின் விளைவாகப் பிடுங்கப்பட்டு வெவ்வேறு இடங்களில் விழுந்தனவும் கயிலைமலையின் சிகரங்களுமே திரிகூடமலை, கந்தமாதனம், திருக்கேதீஸ்வரம் ஆகியன என்று புராணங் கூறும். மேலும் திருக்கேதீஸ்வரம் தென்கைலாசம் எனவும் ஆங்கு வழங்கப்பட்டது. கேதீச்சரம் என்ற பெயர் ஏற்படுவதற்குக் கேதுபகவான் வழிபட்டமை காரணமாகக் கூறப்படுகின்றது. கேதுபகவான் கேதீஸ்வர அஷ்டகம்[5] பாடித்துதித்துத் திருவருள் பெற்றாராம். இவ்வஷ்டகத்திலே கேதீஸ்வரச் சிறப்பும் அம்மையப்பர் மகிமையும் ஒருங்கே கூறப்படுகின்றன. மகாதுவட்டாபுரம் என்ற பெயர் தோன்றுவதற்குத் தேவதச்சன் மகாதுவட்டா இங்கு சிவபிரானையும் கௌரியம்பாளையும் பூசித்தித் திருவருள் பெற்றமை காரணமாகக் கூறப்படும். தசரத இராமன் இராவணனைக் கொன்றதால் ஏற்பட்ட பரமஹத்தி பாவம் நீங்கத் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம் ஆகிய தலங்களில் லிங்கப் பிரதிட்டை செய்து சிவபிரானை வணங்கினான் என்றும் கூறப்படுகின்றது. இங்கு அகத்திய முனிவர் முறையே பத்தும் ஒன்பதும் ஆகிய சுலோகங்கள் கொண்ட துதிகளாற் சிவபிரானை வணங்கித் திருவருள் பெற்றார் எனப்படும். அகத்தியர் பாடிய பத்துச் சுலோகமமைந்த துதி கேதீஸ்வர தசகம்[6] எனப்படும். இவ்விரு துதிகளும் கேதீஸ்வர அஷ்டகமும் கேதீச்சரம் பற்றிய தேவாரப் பதிகங்களை நினைவூட்டுகின்றன என்று கூறல் ஈண்டு பொருத்தமாகும்.

மாதகல் மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலையில் விஜயன் மேற்குத் திசையிற் பழுது பட்டுக் கிடந்த திருக்கேதீஸ்வரத்தைப் புதுப்பித்தான் என்று கூறப்பட்டுள்ளது.

## வரலாற்று மரபுகள்

மகாவம்சமும் மகாவம்சமகாவும் திருகோணமலையிலும் வேறிரு இடங்களிலும் இருந்த சிவலிங்கத்தலங்களை அழித்தனவாகக் கூறும் மகாசேனனின் (கி. பி. 276 - 303) மகனும் இலங்கைப் பௌத்தர்களின் புனிதச் சின்னங்களிலொன்றான "தந்ததாது" இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட காலத்தில் ஆட்சி பரிந்தவனுமாகிய ஸ்ரீ மேகவண்ணன் (கி. பி. 303 - 331) காலத்திலே திருக்கேதீச்சரத்தில் அழகிய கோயில் ஒன்றிருந்தது என்று தந்ததாதுவின் வரலாற்றினைக் கூறும் தாடாவம்சம் கூறுகின்றது.[7]

கி. பி ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தரும் கி. பி. எட்டாம் நூற்றாண்டில்

வாழ்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளும் திருக்-கேதீச்சரம் பற்றித் தனித்தனியே பதிகங்கள் பாடியுள்ளனர். சமகாலத்திலும் அதற்கு முன்னரும் இத்தலத்தின் சிறப்புத் தமிழகத்திலே நன்கு நிலவிமையினாலேயே தேவாரம் பாடிய நாயன்மார் பாமாலை சூட்டினர். அப்பர் சுவாமிகளின் தேவார மொன்றிலும் கேதீச்சரம் பற்றிய குறிப்புளது.

அநுராதபுரகாலப் பிற்பகுதிக்குரிய இரு சிங்களக் கல்வெட்டுக்கள் மூலம் இலங்கையின் தலைநகரமாக விளங்கிய அநுராதபுரத்திலும் தென் கோடியிலுள்ள கதிர்காமத்திலும் வாழ்ந்த பௌத்தர் மத்தியிலும் கேதீச்சரம் பெற்றிருந்த பெருமதிப்பும் சிறப்பும் தெளிவாகின்றன. அநுராதபுரக் கல்வெட்டில் ஜேதவன ஸ்தூபிக்கு வழங்கப்பட்டுள்ள தானம் ஒன்றினைமீறியவர்கள் மஹாவுது (மஹாதீர்த்தம்) எனுமிடத்தில் ஆட்டினைக் கொன்ற பாவங்களை அடைவர் என்றும்[9] கதிர்காமக் கல்வெட்டிற் குறிப்பிட்ட விதிகளை மீறுவோர் மஹாதொடியிலே (மஹா தீர்த்தத்திலே) பசுக்களைக் கொன்றோரின் பாவங்களை எய்துவர் என்றும்[10] கூறப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் கி. பி பத்தாம் நூற்றாண்டில் இலங்கையின் தலைநகரிலும் தென்கோடியிலும் இத்தலம் புனித இடமாய்க் கருதப்பட்டமை தெளிவாம். எச். எல்லாவல பௌத்தர்களிலும் சைவர்களுக்கே இஃது அதிமுக்கியமான புனித இடமாக விளங்கிற்று என எடுத்துக் காட்டியுள்ளார்.

கி. பி பத்தாம் நூற்றாண்டின் கடைக் கூறில் இலங்கையிற் சோழர் ஆட்சி நிலைபெற்ற போது திருக் கேதீச்சரமும் அவர்களுடைய ஆதரவினைப் பெற்றது. பத்தாம், பதினோராம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த இரு சோழர் கல்வெட்டுகளில் மாதோட்டத்திலே திகழ்ந்த ராஜராஜேஸ்வரம், திருவிராமிஸ்வரம் ஆகிய இரு கோவில்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றுள் ராஜராஜேஸ்வரம் திருக்கேதீச்சரத்திற்கு அளிக்கப்பட்ட புதிய பெயராக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

பன்னிரண்டாம் நூற்றாண்டிலே நாயன்மார் வரலாற்றினைப் பக்திச் சுவை ததும்பக் காப்பிய வடிவிலமைத்துக் கூறிய சேக்கிழார் சுவாமிகள் திருக்கோணேஸ்வரம் திருக்கேதீஸ்வரம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.[12]

கி. பி பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஏற்பட்ட இரண்டாம் பாண்டியப் பேரரசின் ஆதிக்கத்தின் விளைவாகத் திருக்கேதீஸ்வரம் சைவரான பாண்டியப் பெருமன்னரின் ஆதரவினைப் பெற்றது. பாண்டிய கல்வெட்டுகள் திருக்கேதீஸ்வரத்தில் இதுவரை கிடையாதபோதும் இக்காலத்திற்குரிய கட்டடப்பகுதிகள் சில இருப்பதாகக் கருதப்படு கின்றது. மேலும் முதலாம் சுந்தரபாண்டியன் காலத்துச் சிதம்பரம் கல்வெட்டொன்றிலே திருக் கேதீச்சரம் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது.

பாண்டியருக்குப் பின் ஆதிக்கம் பெற்ற விசயநகரப் பெருமன்னர் இலங்கையின் செல்வாக்கின் போது திருக்கேதீச்சரமும் இவர்களுடைய ஆதரவைப் பெற்றிருக்கலாம் என்று வரலாற்றாசிரியர் கருதுவர்.

கி. பி பதினாறாம் நூற்றாண்டில் மன்னார்ப் பகுதி போர்த்துக்கேயர் ஆட்சிக்குட்பட்டது. அராலி விசுவநாத சாஸ்திரியாரின் சம்பவக் குறிப்பிலே திருக்கேதீச்சரத்தின் ஒரு பகுதியினை 1540 இற் கடல் கொண்டமையும் பூசைகள் வழக்கம் போல கி. பி 1589 வரை நடைபெற்றமையும் குறிப்பிடப் பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.[13] மன்னாரைப் போர்த்துக்கேயர் அடிமைக்கொண்டது 1590 இல் என்பது கவனிக்கத்தக்கது. போர்த்துக்கேயருக்கு முன்பே திருக்கேதீச்சரம் புகழ் மங்கிற்று என ஒரு சாரார் கருதினும் அவர்களின் ஆதிக்க மேற்பட்டதின் விளைவாகவே இத்தலம் அழிவுற்றது எனலாம். திருக்கேதீச்சரம் பற்றிப் போர்த்துக்கேயர் விரிவாகக் குறிப்பிடாத போதும் மறைமுகமான குறிப்புகள் உள்ளன. குவேறோஸ் சுவாமிகள் தமது நூலில் மன்னார்ப் பகுதியில் ஒளித்துவைக்கப் பட்டிருந்த பெரிதும் சிறிதுமான இருபது சைவ விக்கிரகங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.[14] இவை உருக்கப்பட்டுக் கிறிஸ்தவ தேவாலய மணியொன்று செய்யப் பயன்படுத்தப்பட்டன. இவை திருக்கேதீச்சரத்தைச் சேர்ந்தனவாகலாம். கூத்தோ எனும் போர்த்துக்கேய ஆசிரியர் இப்பகுதியில் மிகப் பெரிய உருக்குச் சங்கிலி யொன்று கிடைத்தமை பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.[15] ஊர்காவற்றுறையிலுள்ள ஹமென்ஹில் கோட்டை யிலுள்ள சாசனம் பொறிக்கப்பட்ட தூண்[16] டச்சுக் காரரினால் மாதோட்டத்திலிருந்து கொண்டு வரப் பட்டதனை நோக்கும் போது சில பகுதிகளாவது டச்சுக் காரர் காலத்தில் எஞ்சியிருந்தமையினை ஊகிக்கலாம்.

1872 இலே நாவலர் பெருமான் திருக்கேதீச்சரத்தின் மகிமையினை யாழ்ப்-பாணத்துச் சைவமக்களுக்கு நினைவூட்டினார். இதைத் தொடர்ந்து திருக்கேதீச்சரம் பற்றி ஈழத்துச் சைவப் பெருமக்களும் வேறு சிலரும் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக 1903 இல் புதிய கோவில் உருவாகித் தொடர்ந்து வளர்ந்து வருகின்றது.


குறிப்புகள்

1. JRAS, CB, Vol. X, No. 35, p. 114 (1887)
2. (அ) தக்ஷிணகைலாச மஹாத்மியம் மூலம்: வித்துவான் சி. நாகலிங்கம் பிள்ளை பதிப்பு கலி. 5030, விபவ சித்திரை மாதம்: அத்தியாயம் 2.

   (ஆ) ஸ்ரீமத் தக்ஷிணகைலாஸ மஹாத்மியஸ்தித ஸ்ரீ கேதீஸ்வர ஷேத்திர வைபவம், மூலம், க. ஸ. வைத்தியநாதசிவம் எழுதிய தமிழுரையுடன், கும்பகோணம், 1915: 3 அத்தியாயங்கள்.
3. மேற்படி ப. 7.
4. மேற்படி பக். 12 - 13
5. மேற்படி அத்தியாயம் 2.
6. மேற்படி அத்தியாயம் 3.
7. Dathawamasa V:V.I.
8. ஆறாம் திருமுறை, திருவீழிமிழலைத் திருத்தாண்டகம்.
9. Epigraphia zeylonica Vol.III, pp. 132 - 133.
10. Epigraphia zeylonica Vol. III, pp. 222- 225.
11. H. Ellawala: Social History of Early Ceylon, 1969, p. 118.
12. பெரியபுராணம், திருஞானசம்பந்தர் புராணம், 890
13. G. S. Navaratnam, A Short History of Hinduism in Ceylon, 1964, pp. 41-42.
14. Queyroz, Fr. Fernao de. The Temporal and the Spiritual Conquest of the Island of Ceylon, Book IV Colombo, 1930. p. 665
15. JRAS, CB Vol. 20, No. 60, p. 83.
16. K. Indrapala, (Ed.) Epigraphia Tamilica, Vol. I, Part I, pp. 10-13.


## விநாயகர் சஷ்டி விரதம்

அகில இலங்கை இந்து மாமன்ற பிரார்த்தனை மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானுக்கு (30.12.2011) வெள்ளிக்கிழமை விநாயக சஷ்டியை முன்னிட்டு விஷேட அபிஷேக, ஆராதனைகள் இடம் பெற்றன. விநாயகர் சஷ்டி தினத்தன்று விரதமிருந்து ஆனைமுகனை பூஜிப்பது அல்லல்களைப் போக்கும் எனவும், விநாயகர் அருளால் விரும்பியவை அனைத்தும் கிட்டும் என புராணங்கள் கூறுகின்றன. திரு டப்சி கனகரத்தினம் அவர்களின் அனுசரணையில் இடம் பெற்ற விநாயகர் அபிஷேகத்தினை சிவஸ்ரீ விஸ்வநாராயண சர்மா, சிவஸ்ரீ சண்முகரட்ணசர்மா ரதீசன் குருக்கள், சிவஸ்ரீ அமிர் தேஸ்வர சர்மா கோவிந்தராஜசர்மா ஆகியோர் நடாத்தினார்கள் மாமன்ற அங்கத்தவர்கள் அநேகர் வருகை தந்து சிறப்பித்தார்கள்.

## மார்கழி திருவாதிரை

திருவெம்பாவை மார்கழித்திருவாதிரைக்கு முன்வரும் ஒன்பது தினங்களிலும் இடம் பெறும். சிவனாருக்குரிய மிகச் சிறப்பு வாய்ந்த தினங்கள் இவை. திருவாதிரையோடு சேர்த்துப் பத்து நாட்களும் சிவ வணக்கத்திற்கும், திருவாசகம் ஓதுவதற்கும் மிகச் சிறந்த நாட்களாகும். திருவாதிரை சிவ பெருமானது நட்சத்திரமாகும். மார்கழி திருவாதிரையான (8.1.2012) ஞாயிறு, அகில இலங்கை இந்து மாமன்ற பிரார்த்தனை மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு விஷேட அபிஷேக, ஆராதனை பூஜை வழிபாடுகள் சிறப்பாக இடம் பெற்றது. மாமன்ற பொதுச் செயலாளர் திரு கந்தையா நீலகண்டன் அவர்களின் அனுசரணையில் இடம் பெற்ற மார்கழி திருவாதிரையின்போது மாமன்ற உறுப்பினர்கள், அடியார்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

# திருக்கேதீச்சர ஆலயம்

## ஒரு தத்துவ நோக்கு

**வி. கயிலாசபிள்ளை**

தலைவர், அறங்காவல் குழு . திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை

தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்



சைவசமயம் மிகவும் புராதனமானது. வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டது. புராதன காலத்தில் சைவசமயம் உலகின் பல பகுதிகளிலும் பரவியிருந்துள்ளது. இதன் தொன்மைக்கு பழைய நூல்கள், வரலாற்றுக் குறிப்புகள், அகழ்வாராய்ச்சி-கள் முதலியன சான்றாக உள்ளன. இன்று தென் இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்களில் பெரும்பாலானோர் சைவசமயத்-தையே கைக்கொண்டு வருகின்றனர். இச் சமயத்தின் தத்துவக் கொள்கைகள் சைவ சித்தாந்தம் என வழங்கப்படுகின்றன. சுருதி (நூல்), யுக்தி (கருதல்), அனுபவம் (காட்சி) ஆகியவற்றால் ஆராய்ந்து பெறப்பட்ட, தெளிவான முடிவுகளே சைவசித்தாந்தக் கொள்கைகளாகும். வடமொழி-யிலுள்ள வேதங்களில் பொதுவாகவும் சிவாகமங்களில் சிறப்பாகவும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. தமிழில் உள்ள பல இலக்கியங்களும் சைவசித்தாந்தக் கருத்துக்-களை உள்ளடக்கியுள்ளன. இவற்றுள் பன்னிரு திருமுறைகள் முக்கியமானவை. பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தை அருளிச் செய்த திருமூலர் என்னும் சிவயோகியாரே, சித்தாந்தக் கொள்கைகளைச் சாத்திரவடிவில், தமிழில் முதலில் கூறியவராவார். பின்பு சித்தாந்தக் கொள்கைகளை விளக்கும் பதின்நான்கு நூல்கள் தமிழில் இயற்றப்பட்டுள்ளன. இவற்றுள் மெய்கண்டதேவா இயற்றிய சிவஞானபோதம் என்னும் நூல் முக்கியமானதாகும். இவை சைவசித்தாந்த சாத்திரங்கள் என்றும், மெய்கண்ட சாத்திரங்கள் என்றும் வழங்கப்படுகின்றன.

சைவசித்தாந்தக் கொள்கைப்படி பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்கள் அநாதியாகவே உள்ளன. உமாபதி சிவாச்சாரியார் சிவப்பிரகாசம் என்னும் தமது நூலில்,

> பலகலை ஆகமம் வேதம் யாவையிவும்
> கருத்துப் பதி, பசு, பாசம் தெரித்தல்

என்று கூறியுள்ளார். வேதங்கள், ஆகமங்கள், மற்றும் உள்ள நூல்கள் ஆகிய யாவற்றினதும் நோக்கம் பதி, பசு, பாசம் என்பவை பற்றி விளக்குதலாகும்.

பதி: அறிவிக்காமலே அறியும் பொருள். உயிருக்-குயிராயிருந்து அநாதியே பாசத்தினால் பந்திக்கப்-பட்டு வருந்தும் பசுக்களின் பந்தத்தை நீக்கி நித்திய ஆனந்தத்தை அவற்றிற்கு அருளுதற் பொருட்டு திருவருட்சக்தியோடு பின்னமின்றி நின்று உதவுவது. கருணையே வடிவாயுள்ளது. உலகத்துக்கு கருத்தாவாயுள்ளது. பதியைக் குறிக்க கடவுள், இறைவன் முதலிய பல சொற்கள் வழங்கப்படுகின்றன. சைவர்கள் பதியைச் சிவபெருமான் என்று குறிப்பிடுவர்.

பசு: அறிவித்தால் அறியும் பொருள். பசுக்கள் எண்ணில்லாதன. அநாதியே பாசத்தினால் பிணிக்கப்பட்டு வருந்துவன. தமக்கு ஒரு தலைவரை உடையன. அத்தலைவராகிய பதியின் அருளால் பல பிறவிகளை எடுத்து, படிப்படியாக அறிவு விளக்கம் பெற்று ஈற்றில் திருவருளின் துணையால் மெய்ஞ்ஞானம் பெற்று பாசத்தின் பிணிப்பு நீங்கி, பதியைச் சார்ந்து முத்தியடைவன. சார்ந்ததன் வண்ணமாதல் பசுவின் இயல்பாகும். ஆன்மா, உயிர் முதலிய பெயர்களும் பசுவைக் குறிக்கின்றன.

பாசம்: அறியும் இயல்பற்ற சடப்பொருள். ஆணவம், கன்மம், மாயை எனப் பாசம் மூவகைப்படும். ஆணவம் செம்பிற் களிம்பு போல, அநாதியே பசுக்களில் கலந்து நின்று, அவற்றின் மெய்யறிவை மறைக்கின்றது. இதுவே, பசுக்களின் துன்பங்களுக் கெல்லாம் காரணமாயுள்ள நோயாகும். இந்த நோயை நீக்கும் பொருட்டே இறைவன் உலகைப் படைத்து, பசுக்களுக்குப் பிறவியைக் கொடுக்கிறார். பிறவி எடுத்த உயிர்கள் ஆணவ முனைப்போடு செய்யும் நல்வினை, தீவினைகள் கன்மம் என அழைக்கப்படும். இந்த நல்வினை, தீவினைகளுக்கு ஏற்பவே ஆன்மாக்களுக்குப் பல்வேறு பிறவிகள் அமைகின்றன. மாயை உடம்பும், உடற் கருவிகளும், உலகமும், உலகத்துப் போகப் பொருட்களும் தோன்றுதற்கு முதற் காரணமாயுள்ளது. ஆன்மாவைப் பீடித்துள்ள ஆணவம் என்னும் அழுக்கை நீக்க மாயை உதவுகிறது. (ஆடையிலுள்ள அழுக்கை நீக்கச் சேர்த்த சவர்க்காரம் போல உள்ளது மாயை). அதனால் இது துணைமலம் எனப்படும். இது அழுக்குமாய், மூலமான அழுக்கை நீக்கும் சாதனமுமாய் இருக்கிறது. ஆணவத்தின் சார்பாய் நின்று மெய் அறிவு பெறாதபடி மயக்குவதும், திருவருளின் சார்பாய் நின்று மெய அறிவு பெற உதவுவதும், ஆகிய இரு செயல்களையும் புரிகிறது. பாசம், தளை, பந்தம், கட்டு, மலம் முதலிய பெயர்களும் பாசத்தைக் குறிக்க வழங்கப்படுகின்றன.

பாசங்களால் பந்திக்கப்பட்டு அவற்றை ஆன்மா சார்ந்திருக்கும் நிலை பெத்த நிலை எனப்படும். பாசச் சார்பு நீங்கிச் சிவத்தைச் சார்ந்திருக்கும் நிலை முத்திநிலை எனப்படும். பெத்தநிலை நீங்கி முத்திநிலை அடைதலே உலக வாழ்க்கையின் நோக்கமாகும். இந்த நோக்கை அடைவதற்கு ஆன்மாக்களுக்கு பதியின் திருவருள் துணை வேண்டும். பசுபதியாகிய சிவபெருமானை அறிந்து வழிபட்டு முத்தி இன்பம் பெற்று உய்தற்குக் கருவியாதலால் மனிதப் பிறப்பே மிகுந்த அருமையுடையது. சைவசமயம் உயிர்கள் சார்ந்ததன் வண்ணமாகும் தன்மையுடையன என்பதை வலியுறுத்துகிறது. உய்தற்குரிய உயிர், மெய்ச் சார்பு எது என்பதனை உணர்ந்து, பொய்ச் சார்பு கெட ஒழுகுதல் வேண்டும். சைவசித்தாந்தம் இதற்கான நான்கு நெறிகளைத் தெரிவிக்கிறது. இவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாகும். இவை பற்றிச் சைவசித்தாந்த சாத்திரங்கள் விரிவாக விளக்கியுள்ளன.

சிவபெருமானே எமது உண்மைச் சார்பு என்பதை உணர்ந்து செயற்படும் போது, எமக்கு அவரிலே அன்பு ஏற்படுகிறது. கடவுள் வழிபாட்டிற்கு அன்பு அவசியமானது. எமக்கு எம்மோடு தொடர்பு உடையவராய், எமக்கு இனியவராய் உள்ளவர்களிடத்தில் இயல்பாக அன்பு ஏற்படுகிறது. "அநாதியே மலத்தினாலே மறைக்கப்பட்டுள்ள அறிவும், தொழிலும் உடையவர்களாய்த் தம்வயத்தர் அல்லாதவர்களாய் உள்ள பசுக்களாகிய நம்மோடு, அநாதியே இரண்டறக் கலந்து நின்று, நமக்கெல்லாம் நித்தியானந்தப் பெருஞ் செல்வத்தைத் தந்தருள விரும்பி, தந்தொழில்கள் எல்லாம் தம்பயன் சிறிதும் குறியாது, நம்பயன் குறித்த தொழில்களாகவே கொண்டு, பெத்தநிலையிலே தாம் நம் உள்ளே மறைந்து நமக்குப் பின்னாகியும், முத்திநிலையிலே நம்மைத் தம்முள்ளே அடக்கித் தாம் நமக்கு முன்பாகியும் இப்படியே என்றும் உபகரிக்கும் இயல்புடைய பெருங் கருணைக் கடலாகிய பசுபதி சிவபெருமான் ஒருவரே. ஆதலால் அவர் ஒருவரே நம்மோடு என்றும் தொடர்புடையவராய், நமக்கு நம்மினும் இனியவராய உள்ளவர். அவருக்கே நாமெல்லாம் உடைமைப் பொருள். அவருக்கே நாமெல்லாம் மீளா அடிமை. ஆதலினால், அவரிடத்திற்றானே நாமெல்லாம் அன்பு செய்ய வேண்டும். பசுக்களாகிய நம்முடைய இலக்கணங்களையும், நம்மைப் பந்தித்த பாசங்களின் இலக்கணங்களையும், பசுபதியாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களையும், எத்துணையும் பெரிய சிவபெருமான் எத்துணையும் சிறிய நமக்கெல்லாம் இரங்கி எளிதுவந்து ஓயாது என்றும் உபகரிக்கும் பெருங் கருணையையும், இவ் வியல்பின் அநந்த கோடியில் ஒரு கூறாயினும்

உடையவர் பிறர் ஒருவரும் நமக்கில்லாமையையும் சிந்திக்கச் சிந்திக்க நமக்கு அச் சிவபெருமானிடத்து அன்பு விளையும்" என்று ஆறுமுக நாவலர் தமது இரண்டாம் சைவ வினாவிடையில் "அன்பியல்" என்னும் பகுதியில் குறிப்பிட்டுள்ளார்.

சிவபெருமான் மீது அன்பை வளர்ப்பதற்கு திருக்கோயில் வழிபாடு சிறந்த சாதனமாகும். சைவசமயம் திருக்கோயில் வழிபாட்டுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கிறது. சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகளைப் பின்பற்றுவோரும் திருக்கோயில் வழிபாடு செய்துள்ளனர். எமது சமயகுரவர்கள் நால்வரும் பல தலங்களுக்கும் யாத்திரை சென்று திருப்பதிகங்கள் பாடி வழிபட்டு எமக்கெல்லாம் வழிகாட்டியுள்ளார்கள்.

திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவன் அங்கே

என்று சைவசித்தாந்த சாத்திர நூலாகிய சிவஞான சித்தியார் கூறுகிறது. எங்கும் நிறைந்துள்ள இறைவன் திருக்கோயில்களில் தயிரில் நெய் போல் விளங்கி அருள்புரிவார். அதிலும் பசு கரணங்கள் எல்லாம் சிவகரணங்களாகப் பெற்ற சிவஞானிகளாகிய எமது சமய குரவர்களின் பாடல் பெற்ற திருக்கோயில்களில் சிவசாந்நித்தியம் மிகவும் சிறப்பாக விளங்கும். திருக்கோயிலில் மனம், மொழி, மெய் என்னும் மூன்றினதும் தூய்மை பேணி வழிபடல் வேண்டும்.

ஆன்மாக்கள் தமது தலைவனாகிய இறைவனின் அருளினாலேயே பாசத்தின் பிணிப்பிலிருந்து நீங்க முடியும். சைவசித்தாந்த மரபில் சிவபெருமானின் திருவருளையே சிவனது திருவடி என வழங்குகிறோம். உமாதேவியாராகவும் வழிபடுகிறோம். சிவாலய வழிபாடும், சிவனடியாராகிய சிவஞானிகளை வழிபடுவதும் கடவுளையோ ஞானிகளையோ மகிழ்விப்பதற்கல்ல. எமது சார்ந்ததன் வண்ணமாயிருக்கும் இயல்பை, தீமையிலிருந்து நன்மைககும், இருளில் இருந்து ஒளிக்கும், அஞ்ஞானத்திலிருந்து ஞானத்திற்கும் மாற்றிக் கொண்டு வருதற்கே ஆகும்.

எமது சமயகுரவர் காட்டிய பக்தி (அன்பு) நெறியே சிவமாம் தன்மை அடைவதற்கு மிகவும் பாதுகாப்பானதும் நிச்சயமானதுமான வழியாகும். சிவபிரான் மீது அன்பு, சிவனடியார் மீது அன்பு, சிவன் கோயில் கொண்டுறையும் சகல சீவராசிகள் மீதும் அன்பு என அன்பு நெறி விரிந்து செல்லும். சிவபக்தியுடன் சீவகாருண்ணியத்தையும் சைவசமயம் வலியுறுத்துகிறது. அப்பர் சுவாமிகள் "தயா மூலதன்மம் என்னும் தத்துவத்தின் வழி நின்று தாழ்ந்தோர்க்கெல்லாம் நலம் கொடுக்கும் நம்பி" என்று சிவபெருமானைப் போற்றுகின்றார். திருமூலர் திருமந்திரத்தில் "அன்பே சிவம் ஆவது" எனக் குறிப்பிடுகிறார்.

அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

அன்போடுருகி அகம் குழைவார்க்கன்றி
என் பொன் மணியினை எய்த ஒண்ணாதே
- திருமந்திரம

உண்மையில் அன்பின்றிச் செய்யும் எந்த வழிபாடுகளும் பயனற்றவையாகும. சைவ சமயத்தின் அடிப்படை அன்பேயாகும்.

சிவபெருமான் தமது மெய்யடியார்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் ஆகிய சைவசமய குரவர்கள் மூலம் நாம் உய்யும் பொருட்டு அருளிய கொடையே தேவாரமும், திருவாசகமும் ஆகும். இவை தமிழ் வேதம் எனப்படும். தமிழ் நிலத்திலுள்ள பல சிவத்தலங்களுக்கும் சென்று எமது சமய குரவர்கள் திருப்பதிகங்கள் பாடி வந்துள்ளனர். அவர்களின் திருவுளக் கருத்து அத்தலங்களில் உள்ளோர் அத்தலத் திருப்பதிகங்களை நாள் தோறும் அன்புடன் ஓதி இறைவனை வழிபட வேண்டும் என்பதாகும். இத்திருப்பதிகங்கள் மந்திரங்களாகும். பாடல்களில் குறிக்கப்படும் சிவனின் திருவுருவங்களும், செயல்களும் உயிர்களுக்குப் போகம்,வினை நீக்கம், மோட்சம் என்னும் பயன்களை விளைவிக்கும் ஆற்றல் உடையவை ஆகும். "தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே" என்னும் அப்பர் திருவாக்கினால் இறைவன் தோத்திரவடிவிலும் இருப்பது பெறப்படும்.

சைவசமய குரவர்களின் பாடல் பெற்ற சிவாலயங்களுள் எமது ஈழநாட்டிலுள்ள திருக்கேதீச்சரம் ஒன்றாகும். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருடைய திருப்பதிகம் ஒன்றும்,

சுந்தரமூர்த்தி நாயனாருடைய திருப்பதிகம் ஒன்றும் இவ்வாலயத்தின் மீது பாடப்பட்டுள்ளன. திருக்கேதீச்சர தேவாரப் பதிகங்கள் இரண்டும் எமக்குக் கிடைத்த திருவருள் பொக்கிஷங்களாகும். திருநாவுக்கரசு நாயனாரும் தமது திருவீழிமிழலை தேவாரப் பதிகத்தில் திருக்கேதீச்சரத்தைக் குறிப்பிட்டுள்ளார். "பொன்னிறமுள்ள திருமேனியில் விபூதி அணிந்தவர். பூணூல் பூண்டவர். பாம்பை ஆபரணமாகக் கொண்டவர். உயிர்கட்கெல்லாம் இன்பத்தை என்றும் வழங்குபவர். ஒரு காதில் குண்டலம் அணிந்தவர்" என்று சிவபெருமானின் திருக்கோலத்தையும், இயல்பையும் கூறி, இவரே திருக்கேதீச்சரம் முதலிய பல தலங்களில் இருந்து திருவருள் பாலிக்கிறார் என்றும் தம்மை "மாதுயரம் தீர்த்து உய்யக் கொண்டார்" என்றும் குறிப்பிடுகிறார்.

பூதியணி பொன்னிறத்தர் பூணநூலர்
பொங்கரவர் சங்கரர் வெண் குழையோர் காதர்
கேதீச்சரம் மேவினார் கேதாரத்தார்
கெடிலவட அதிகை வீரட்டத்தார்
மாதுயரம் தீர்த்தென்னை உய்யக் கொண்டார்
மழபாடி மேய மழுவாளனார்
வேதி சூடி யுள்ளார் மீயச் சூரார்
வீழி மிழலையே மேவினாரே.

திருஞானசம்பந்தர் : தென் இந்தியாவிலுள்ள இராமேஸ்வரம் சிவாலயத்தை, சிவனடியார் கூட்டத்துடன் வந்து தரிசித்திருந்த போது, இக்கரையில் ஈழவளநாட்டிலுள்ள திருக்கோணமலையிற் கோயில் கொண்டுள்ள சிவபெருமானைத் துதித்துப் பதிகம் பாடி, மாதோட்ட நன்னகரில் விளங்கும் திருக்கேதீச்சரப் பெருமானின் பாதங்களையும் நினைந்து திருப்பதிகம் பாடிப் பணிந்து மகிழ்ந்தார். இதனை சேக்கிழார் சுவாமிகள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

அந்நகரில் அமர்ந்தங்கண் இனிது மேவி
ஆழியுடை சூழ்ந் தொலிக்கும் ஈழம் தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்த செங்கண்
மழவிடையார் தமைப் போற்றி வணங்கிப் பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட்டத்திற்
திருக்கேதீச் சரத்தண்ணல் செய்ய பாதம்
உன்னிமிகப் பணிந் தேத்தி யன்பரோடும்
உலவாத கிழி பெற்றார் உவகை யுற்றார்

திருஞானசம்பந்தர் அருளிய பதிகத்தின் முதற் பாடலிலேயே சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள் உண்மை உய்த்துணரக் கூடிய முறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடலில் சிவபெருமான் முப்புரங்களையும் அழித்த வரலாற்றைக் குறிப்பிடுகிறார். புராணக் கதைகளுள் பல தத்துவக் கருத்துக்கள் பொதிந்துள்ளன. "முப்புரமாவன மும்மலகாரியம்" என்பது திருமூலர் வாக்கு. மும்மலவலி நீக்கமே முத்திப்பேறு அடைவதற்குரிய தகுதி என்னும் சிந்தனையை திரிபுரதகனம் என்னும் அருட்செயல் உருவக முறையில் விளக்குகிறது. அநாதியே ஆன்மாவைப் பந்தித்து நிற்கும் பாசத்தை நீக்க வல்லவர் முழுமுதற் கடவுளான சிவபெருமானே என்பதும், அவருடைய திருவருளின் துணை பெற்று ஆன்மா பாசநீக்கம் பெறும் என்பதும் உய்த்துணரத்தக்கது. சிவவழிபாடு உள்ளவர் என்றும் காக்கப் பெறுவர். திரிபுரங்களை நீறுபட்டழியச் செய்த சிவபெருமான் என்றும் உறைகின்ற தலமாதலால், அதனை வழிபடுவோருக்குப் பகையாக உள்ள வினை நீறு படுதல் நிச்சயம் என்பதும் பெறப்படும்.

விருது குன்றமா மேருவில் நாணர
வா அனல் எரி அம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளும்
கருதுகின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே.

இதைத் தொடர்ந்து வரும் பாடல்களிலும் சிவபெருமானின் இயல்புகள் பற்றியும், புராணங்களில் கூறப்பட்டுள்ள அவரின் திருவிளையாடல்கள் பற்றியும் குறிப்பிடுகிறார்.

பாடுதலோடு வீணையை இசைப்பவர், பற்பல வரலாற்றை உடையவர், எருதை வாகனமாக உடையவர், பஞ்ச கிருத்திய நடனம் செய்பவர். ஆலகால நஞ்சை உட்கொண்டு கழுத்தில் நிறுத்தி, அதனால் கருமையான கண்டத்தை உடையவர். உமைபாகமாக உள்ளவர், பிறை சூடிய சடையை உடையவர், கழலும் சிலம்பும் ஒலிக்கும்படி திருநீற்றைப் பூசிக் கொண்டு திருக்கூத்து ஆடுபவர். தாருகாவனத்துப் பெண்கள் இடும் பிச்சையை ஏற்று உண்பதற்கு விருப்பம் உடையவர் போல அவர்கள் வீடுகள் தோறும் சென்றவர். திருநீறும் புலித்தோலும்

அணிந்தவர். முத்தலை வேலைக் கையில் கொண்டவர். பூணூல் அணிந்தவர். சடையிலே கங்கையைத் தரித்தவர். பழைய காலத்தில் சனகாதி நான்கு முனிவர்களுக்கு அறம் உரைத்தவர். திருக்கயிலை மலையைப் பெயர்த்து எடுக்க முயன்ற இராவணனைச் செருக்கு அழியும் படி செய்து, பின் பிழையையுணர்ந்து அவன் பணிந்து வேண்ட அவனுக்கு அருள் செய்தவர். பிரம விட்டுணுக்கள் அடிமுடிதேடச் சோதிவடிவாக நின்றவர். கயாசுரனாகிய மதமயக்கத்தையுடைய யானையைக் கொன்று அதன் தோலைப் போர்த்தவர் என்று பாடல்கள் தோறும் குறிப்பிட்டு அன்பு கனியப் பாடியுள்ளார்.

ஆன்மாக்களின் நன்மைக்காக சிவபெருமான் செய்த திருவிளையாடல்கள், அவரே முழுமுதற் கடவுள் என்பதையும் அளவிலா ஆற்றல் உடையவர் என்பதையும், கருணை வள்ளல் என்பதையும் விளக்குவனவாயுள்ளன. இத்தகைய இறைவன் திருக்கேதீச்சர ஆலயத்தில் என்றும் விரும்பியுறைவதைக் குறிப்பதன் மூலம் இவ்வாலயத்தின் மூர்த்திச் சிறப்பைக் கூறுகிறார். "கேழல் வெண் மருப் பணிந்த நீண் மார்பர் கேதீச்சரம் பிரியாரே", "தொண்டர் நாடொறுந் துதி செயவருள் செய்கேதீச்சரமதுதானே", "உன்னி அன்பொடும் அடியவர் இறைஞ்சுகேதீச்சரத்துள்ளாரே", "தேவி தன்னொடுந் திருந்துகேதீச்சரத் திருந்த வெம் பெருமானே".

இப்பதிகத்தின் நான்காம் பாடலில் "முடிகள் சாய்த்து அடி பேணவல்லார்" என்னும் தொடரில் "முடிகள் சாய்த்தல்" என்பது யான், எனது என்னும் செருக்கறுத்து சிவனோடு ஒற்றுமைப்பட்டு நிற்றலைக் குறிக்கும். "அடி பேணல்" என்பது அவ்வாறு நின்று சிவனருளால் அன்றி ஒன்றையும் அறிந்து இயற்றிடாமையைக் குறிக்கும். இவ்வாறு செய்ய வல்லவரின் பாசங்கள் நீங்கி விடும் என்பது சித்தாந்தக் கருத்தாகும். மெய்கண்ட தேவர் "இறைபணி நிற்க, மலம், மாயை தன்னொடு வல்வினை இன்றே" என்று சிவஞானபோதம் பத்தாம் சூத்திரத்தில் கூறியுள்ளார்.

பொடி கொள் மேனியர் புலியதள் அரையினர்
விரிதரு கரத்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர் நூலினர்
மறிகடல் மாதோட்டத்து
அடிகள் ஆதரித் திருந்தகே தீச்சரம்
பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல்லார்தம்மேல்
மொய்த்தெழும் வினைபோமே.

இப்பதிகத்தின் ஐந்தாம் பாடலில் சிவஞானிகளினது சிறப்பும் அவர்கள் பிறப்பறுத்து வீடுபேறு அடையும் திறமும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் இரட்டுற மொழிதல் மூலம் சிவபெருமானையும் சிவனடியாரையும் குறிக்கும் பகுதியும் படித்து இன்புறத்தக்கது.

நல்லர் ஆற்றவும் ஞானநன் குடையர் தம்
மடைந்தவர்க்(கு) அருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப்(பு) இறப்பிலர்
மலிகடல் மாதோட்டத்(து)
எல்லையில்புகழ் எந்தைகே தீச்சரம்
இராப்பகல் நினைந் தேத்தி
அல்லல் ஆசறுத்(து) அரனடி இணைதொடும்
அன்பராம் அடியாரே.

முத்து முதலிய வளங்கள் மிகுந்த கடற்கரையிலுள்ள மாதோட்டம் என்னும் ஊரிலுள்ள முடிவிலாத புகழையுடைய, எமக்குத் தந்தையாகிய சிவபெருமான் விளங்கி நிற்கும் திருக்கேதீச்சரத்தை இரவும் பகலும் சிந்தித்துத் துதித்தலால், துன்பத்துக்குக் காரணமாகிய மல மாயை கன்மங்களை முற்றிலும் கழுவி, சிவபெருமானுடைய இரண்டு திருவடிகளையும் மெய்யன்பால் வணங்கி இன்புறும் நிலையைப் பெற்றுள்ள அடியார்கள் உலகிற்கு உறுதியைக் கூறுதலில் மிகவும் நல்லவர். குற்றமற்ற மெய்யுணர்வையுடையவர். தம்மைப் புகலாக அடைந்த பக்குவர்களுக்கு முதல்வன் திருவருளை விளங்கச் செய்ய வல்லவர். நிலவுலகத்திலும் விண்ணுலகத்திலும் பிறந்து இறப்பார் அல்லர்.

"அன்பராம் அடியார்" என்னும் தொடரில் அன்பு என்றது அயரா அன்பையும் அதன் விளைவாகிய பேரின்பத்தையும் குறித்து நின்றது. "அயரா அன்பின் அரன் கழல் செலுமே" என மெய்கண்ட தேவர் சிவஞான போதம் 11ஆம் சூத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இப்பாடலில் "நல்லர் ..... பிறப்பிறப்பிலர்" என்னும் பகுதியில்

ஆற்றவும் நல்லர்

சிவன் : ஆன்மாக்களுக்கு என்றும் நன்மையே செய்பவர் (பேரருள் உடையவர்)

சிவனடியார் : உலகிற்கு உறுதியைக் கூறுதலில் மிகவும் நல்லவர் (உதாரணம்: தோத்திர சாத்திர நூல்கள் இயற்றல்)

ஞானம் நன்கு உடையவர்

சிவன் : ஞானமே வடிவாய் உள்ளவர் (எல்லாம் அறிபவர்)

சிவனடியார் : குற்றமற்ற மெய்யுணர்வை உடையவர்.

தம்(மை) அடைந்தவர்க்கு அருள் ஈயவல்லவர்

சிவன் : தம்மை அடைந்த அன்பர்களுக்கு அருளைச் செய்ய வல்லவர். (பக்குவம் அடைந்த உயிர்களுக்கு முத்தி கொடுக்க வல்லவர்)

சிவனடியார் : தம்மை புகலாக அடைந்த பக்குவர்க்கு முதல்வன் திருவருளை விளங்கச் செய்ய வல்லவர்.

பார்மிசை வான் (மிசை) பிறப்பு இறப்பு இலர்

சிவன் : நிலவுலகத்திலும் விண்ணுலகத்திலும் பிறந்து இறப்பார் அல்லர் (என்றும் மாறுதல் அடையாது உள்ளவர். நித்தியர்)

சிவனடியார் : நிலவுலகத்திலும் விண்ணுலகத்திலும் (இனிப்) பிறந்து இறப்பார் அல்லர். (முத்தி அடைவர்)

கோயில் இருக்கும் தலத்தின் சிறப்பை "கனை கடற்பொழிலணி மாதோட்டம்", "உயர்தரு மாதோட்டம்", "மறிகடல் மாதோட்டம்", "வாழையம் பொழில் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டம்", "வண்டு பண் செய்யும் மாமலர் பொழில் மஞ்ஞை நடமிடு மாதோட்டம்", "பொன்னிலங்கி முத்தும் மாமணிகளும் பொருந்திய மாதோட்டம்", "மாவும் பூகமும் கதலியும் நெருங்கு மாதோட்டம்", "மாடெலா மணமுரசெனகக் கடலின(து) ஒலிகவர் மாதோட்டம்" என்று இயற்கை அழகும், அஃறிணை உயிர்களும் மகிழ்ந்து வாழும் தன்மையும் உடைய திருத்தலத்தின் சிறப்பை விவரிக்கின்றார். இங்கு வழிபடுவதால் அடையும் பயனை "கடுவினை அடையாவே", "கெடுமிடர் வினைதானே", "அருவினை அடையாவே", "மொய்த்தெழும் வினை போமே" எனவும் குறிப்பிடுகிறார். பத்தாம் பாடலில் "மத்தயானையை மறுகிட உரிசெய்து போர்த்தவர் மாதோட்ட(து) அத்தர் மன்னுபாலாவியின் கரையிற் கேதீச்சரம் அடைமின்னே" என நம்மெல்லோரையும் அழைத்து வழிப்படுத்துகின்றார். பதிகம் ஓதுதலின் பயன் கூறும் இறுதிப் பாட்டில் "அன்பர்களே இத்திருப்பாடல்களைப் பாடுங்கள். பரகதி (முத்தி) பெறலாம்" என்று கூறி முடிக்கின்றார்.

மாடெலா மண முரசெனக் கடலின(து)
ஒலி கவர் மாதோட்டத்(து)
ஆடல் ஏறுடை அண்ணல் கேதீச்சரத்(து)
அடிகளை அணிகாழி
நாடுளார்க் கிறை ஞானசம்பந்தன் சொல்
நவின்றெழு பாமாலை
பாடலாயின பாடுமின் பத்தர்கள்
பரகதி பெறலாமே

சுந்தரமூர்த்தி நாயனார் : சேரமான் பெருமாள் நாயனாருடன் இராமேஸ்வரத்தில் சிவபெருமானை வணங்கிக் கொண்டு தங்கியிருந்த போது திருக்கேதீச்சர நாதர் மீதும் பதிகம் பாடி வணங்கினார். சேக்கிழார் தமது திருத்தொண்டர் புராணத்தில் பின்வருமாறு கூறுகிறார்:

மன்னுமிரா மேச்சரத்து மாமணியை முன் வணங்கிப்
பன்னு தமிழ்த் தொடை சாத்திப் பயில்கின்றார் பாம்பணிந்த
சென்னியர் மாதோட்டத்துத் திருக்கேதீச் சரஞ் சார்ந்த
சொன்மலர் மாலைகள் சாத்தித் தூரத்தே தொழுதமர்ந்தார்

சுந்தரமூர்த்தி நாயனார் தனது பதிகத்தின் முதற் பாடலிலே திருக்கேதீச்சரப் பெருமானின் மூர்த்திப் பிரபாவத்தை விபரிக்கிறார்.

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானை யுரி போர்த்த மண வாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான் திருக்கேதீச் சரத்தானே

சங்கைக் கரத்தில் தாங்கிய விட்டுணுவை தமது இடபவாகனமாக்கிக் கொண்டவரும், மத நீரால் நனைந்த வாயையும் மதிமயக்கத்தினையும் உடைய செருக்குள்ள (கயாசுரனாகிய) யானையின்

தோலை உரித்துப் போர்த்துக் கொண்ட உமைமணாளரும், (திருமால், பிரமன் முதலிய) இறந்தவர்களுடைய எலும்பை அணிபவரும் ஆகிய சிவபெருமான், அன்பர்கள் தொழும் பாலாவி ஆற்றங்கரைமேல், திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியுள்ளார்.

இப்பாடலில் சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள் உண்மை உய்த்துணர வைக்கப்பட்டுள்ளது. மதயானையின் தோலை உரித்துப் போர்த்தமை, அகங்காரத்துக்குக் காரணமான ஆணவத்தின் வலியை அடக்கியமையைக் குறிப்பதாகும். ஆணவத்தின் பிணிப்பினால், வருந்திக் கொண்டிருக்கும் ஆன்மாக்களின் வருத்தத்தை நீக்குவதற்காகவே கருணைக் கடலாகிய சிவபெருமான் ஐந்தொழில்களையும் தமது திருவருட்சக்தியுடன் பின்னமின்றி நின்று செய்கின்றார். சிவனது வடிவம் கருணையே யாகும். கருணையையும் சிவனையும் பிரிக்க முடியாது. உமாபதி சிவாசாரியார் தான் இயற்றிய சித்தாந்த சாத்திரங்களில் ஒன்றாகிய திருவருட்பயன் என்னும் நூலில் பின்வருமாறு கூறியுள்ளார்:

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ் சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்

சுந்தரமூர்த்திநாயனார் இப்பாடலில் சிவபெருமான் உமை மணவாளனாக விளங்குவதைக் குறிப்பிடுகிறார். சிவபெருமான் இவ்வாறு விளங்குவது ஆன்மாக்கள் மீது கொண்டுள்ள பெருங்கருணை காரணமாகவேயாகும். இதனால் ஆன்மாக்கள் முத்திநிலை அடைவதற்கு முதலில் வேண்டப்படும் பாச நீக்கத்தை அருளும் ஆற்றல் உள்ள முழுமுதற் கடவுள் சிவபெருமான் ஒருவரே என்பதும் அவர் அங்ஙனம் செய்வதற்குக் காரணம் அவருடைய கருணையே என்பதும் தோன்ற "மத்தம் மதயானையுரி போர்த்த மணவாளன்" என்று குறிப்பிடுகிறார். பிறப்பு, இறப்பு இல்லாத பரம்பொருளாய் உள்ளவர் பசுபதியாகிய சிவபெருமான் ஒருவரே. புராண இதிகாசங்களில் போற்றப்படும் ஏனைய தேவர்கள் பிறப்பு, இறப்பு உள்ள ஆன்மவர்க்கத்தைச் சேர்ந்தவர்களே என்பதை விளக்க "செத்தார் எலும்பணிவான் திருக்கேதீச்சரத்தானே" எனக் கூறுகிறார்.

சில்லாண்டிற் சிதையும் சில தேவர் சிறு நெறிசேராமே
பல்லாண்டென்னும் பதம் கடந்தானுக்கே பல்லாண்டு
கூறுதுமே

(திருப்பல்லாண்டு)

பிறப்பிலி பிஞ்ஞகன் பேரருளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்

(திருமந்திரம்)

என்னும் சைவத் திருமுறைக் கூற்றுக்களும் இங்கு நினைவுகூரத்தக்கன.

பக்தி மார்க்கத்தில் நின்று சிவபெருமானை வழிபடும் சிவனடியார்களுக்கு மாதொரு பாகனான இறைவனின் வடிவம் அளவற்ற இன்பத்தைக் கொடுப்பதாகும். ஆன்மாக்கள் மீது இறைவன் என்றும் பொழிந்து கொண்டிருக்கும் பேரருளை நினைவூட்டும் இவ்வடிவம் பேரழகு வாய்ந்தது. மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்திலுள்ள "அன்னைப் பத்து" என்ற பதிகத்தில்

நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத் திருப்பரால் அன்னே யென்னும்
சித்தத் திருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தா ஆனந்தரால் அன்னே யென்னும்

என்று குறிப்பிட்டுள்ளார். அர்த்தநாரீஸ்வரர் வடிவம் (தையல் பாகத் திருமேனி) கேவல நிலையில் ஆணவத்தோடு அத்துவிதமாகிக் கிடந்த ஆன்மா, சுத்த நிலை எய்தி சிவனோடு அத்துவிதமாவதற்கு ஏதுவாக சகல நிலையில் செலுத்துவதற்கான உலகத் தோற்றத்திற்கு மூலம் என்பதால் மாணிக்கவாசக சுவாமிகள் அதனை "தொன்மைக் கோலம்" எனக் குறிப்பிடுகின்றார்.

தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும்
பால் வெள்ளை நீறும் பசுஞ் சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந் தூதாய் கோத்தும்பி

(திருவாசகம் - திருக்கோத்தும்பி)

இந்த திருக்கோலத்தின் இடப்பாகத்தில் பட்டாடையும், தோடும், சந்தனமும், பச்சைக் கிளியும், வளையல் அடுக்கும் உடைய அம்மையின் காட்சி, வலப்பாகத்தில் புலித்தோலும், குண்டலமும் திருநீறும், சந்தனமும், சூலமும் உடைய அப்பனின் காட்சி. அம்மையும் அப்பனும் ஒரு திருமேனி.

யிலேயே காணப் பெறும் சிறப்பை இவ்வடிவத்தில் கண்டு மகிழலாம். அக்கினியும் சூடும் போலவும், சொல்லும் பொருளும் போலவும், சிவமும் சக்தியும் பிரிவின்றி உள்ளமையை விளக்கும் கோலம். கருணையே வடிவான இறைவனின் தன்மையை நினைந்து நெக்குருகச் செய்யும் தேவி பாகமாயுள்ள இயல்பை எமது சமய குரவர்கள் அருளிச் செய்த திருமுறைகளில் பலவிடங்களிலும் காணலாம். கௌரி அம்மையோடு திருக்கேதீச்சர நாதர் அமர்ந்திருக்கும் திறம் "படவேரிடை மடவாளொடு", "பங்கஞ் செய்த மடவாளொடு", "பையேரிடை மடவாளொடு", "பானத்துறு மொழியாளொடு", "பட்டவரி நுதலாளொடு" பாலாவியின் கரைமேல் திருக்கேதீச்சரத்தில் சிவபெருமான் என்றும் வீற்றிருக்கின்றார் என்று இப்பதிகத்தில் அழகாகக் கூறப்பட்டுள்ளது. மேலும், சிவபெருமானின் இயல்புகளாகவும், திருவிளையாடல்கள் ஆகவும் வேதங்களிலும், புராணங்களிலும் சொல்லப்பட்டுள்ளவற்றைக் கருத்திற் கொண்டு "சுடுவார் பொடிநீறும்", "நல்ல துண்டப் பிறை கீழும் கடமார்களியானையுரியணிந்த கறைக் கண்டன்", "பங்கஞ் செய்த பிறைசூடினன்", "செங்கண் அரவசைத்தான்", "கண்மேலொரு கண்ணான்", "தெரியும் மறை வல்லான்", "செய்ய சடைமுடியான்", "எனத்(து) எயிளறிந்தான்" என்று குறிப்பிடுகின்றார்.

இப்பதிகத்தின் எட்டாவது பாடலில் சைவ சித்தாந்தத்தில் கூறப்படும் சிவபெருமானின் எண்வகை மூர்த்தங்களையும் உணர்த்தும் வகையில் "அட்டன்" என்று குறிப்பிடுகின்றார். (அட்ட மூர்த்தங்கள்: நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா) சிவபெருமானே தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத முழுமுதற் கடவுள் என்பதை உணர்த்த "சிட்டன்" (மேலோன்) என்றும் குறிப்பிடுகின்றார்.

> அட்டன்அழ காகஅரை தன்மேல் அரவு ஆர்த்து
> மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்ட நன்னகரில்
> பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
> சிட்டன்நமை ஆள்வான்திருக் கேதீச்சரத் தானே

ஒன்பதாவது பாடலில் அயன், அரி, அரன் என்னும் மும்மூர்த்திகளுக்கும் காரணமாய் உள்ளவர். சக்தி, சிவம் என்னும் இரு வடிவம் கொண்டவர். முக்கண்களையுடைய மூர்த்தி, ஒளிவடிவினர் ஆகிய சிவபெருமான் என்று திருக்கேதீச்சர இறைவனின் பெருமையை விவரிக்கிறார். (இறைவனது வலக் கண்ணில் இருந்து அயனும், இடக்கண்ணில் இருந்து அரியும், நெற்றிக் கண்ணில் இருந்து உருத்திரனும் தோன்றினர் என்று புராணம் கூறும்)

> மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
> மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரில்
> பாவம்வினை அறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
> தேவன்எனை ஆள்வான்திருக் கேதீச்சரத் தானே

மாதோட்ட நகரினது இயற்கை எழிலையும், சிறப்பையும், "வங்கம் மலிகின்றகடல் மாதோட்ட நன்னகர்", "வரியசிறை வண்டு யாழ்செய்யும் மாதோட்ட நன்னகர்", "வையம்மலிகின்றகடல் மாதோட்ட நன்னகர்", "வானத்துறு மலியும் கடல் மாதோட்ட நன்னகர்", "மட்டுண்டு வண்டாலும் பொழில் மாதோட்ட நன்னகர்", "மாவின் கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்னகர்" என்று இலக்கிய நயம் பொங்க விவரித்துள்ளார். இதனால் தலச்சிறப்பு கூறப்பட்டுள்ளது.

இப்பதிகத்தில் ஒன்பது பாடல்களில் பாலாவி தீர்த்தம் குறிப்பிடப்பட்டுள்ளது. பாலாவியின் கரைமேல் திருக்கேதீச்சரப் பெருமான் கோயில் கொண்டு இருக்கும் திருவருட்சிறப்பு மிக அழகாகக் கூறப்பட்டுள்ளது. "பத்தாகிய தொண்டர் தொழு பாலாவி", "பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவி" என்று இத்தீர்த்தத்தின் சிறப்பு கூறப்பட்டுள்ளது.

இப்பதிகத்தை பக்தியுடன் பாராயணம் செய்வோர்க்கு எய்தும் பயன் இறுதிப் பாடலில் தெரிவிக்கப்படுகின்றது.

> கறையார் கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
> சிறையார்பொழில் வண்டியாழ் செயுங் கேதீச்சரத் தானை
> மறையார் புகழூரன்அடித் தொண்டன்னுரை செய்த
> குறையாத் தமிழ் பத்துஞ்சொலக் கூடா கொடுவினையே

கருமை நிறம் பொருந்திய கடல் சூழ்ந்த உப்பளங்கள் உள்ள மாதோட்டம் என்னும் நகரிலே, சிறகுகள் பொருந்திய வண்டுகள் யாழின் இசை போன்ற இசையைச் செய்யும் சோலைகளின் நடுவில் உள்ள திருக்கேதீச்சரத்தில் குடிகொண்டு எழுந்தருளிய சிவபெருமானை, மறைகளை ஓதும் புகழை உடைய, ஆரூரன் ஆகிய அடிமைத் தொண்டன் பாடிய, திருவருள் குறைவின்றி மிகுவதற்குச் சாதனமாகிய, தமிழ்ப் பாடல்கள்

பத்தினையும் பாடி வழிபட்டால் அவ்வாறு வழிபடுவோரை கொடியனவாகிய வினைகள் வருத்தாது கழியும்.

திருக்கேதீச்சரம் : மிகவும் புராதனமான சிவத்தலமாகும். இலங்கையிலுள்ள மன்னார் மாவட்டத்தில் மாந்தை என்னும் பிரிவிலே பாலாவி தீர்த்தக் கரையிலே இத்தலம் அமைந்துள்ளது. இங்கு கோயில் கொண்டிருக்கும் இறைவன் பெயர் திருக்கேதீச்சரநாதர். இறைவி பெயர் கௌரி அம்மை, தீர்த்தம் பாலாவி, தலவிருட்சம் வன்னி.

முன்னொரு கற்பத்திலே தென்கடலில் வீசப்பட்ட மேருமலைச் சிகரங்கள் மூன்றினுள் ஒன்றே திருக்கேதீச்சரம் என்று புராண வரலாறு கூறுகின்றது. இங்கு மகாதுவட்டாவின்னால் ஒரு நகரமும் அதன் நடுவில் சிவாலயமும் அமைக்கப்பட்டன. அதனால் இந்த நகரம் மகாதுவட்டாபுரம் என அழைக்கப்பட்டது என்றும் பின்னர் அதுவே மாதோட்டம் என மருவிற்று எனவும் கூறுவர். இவ்வாலயத்தில் கேது வழிபட்டதால் கோயில் "கேதீச்சரம்" என அழைக்கப்பட்டது. இத்தலத்தில் இதிகாசங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அகத்திய முனிவர், இராமர், இராவணன், மண்டோதரி, அருச்சுனன் முதலியோர் வழிபட்டுள்ளனர் எனவும் கருதப்படுகிறது.

மாதோட்டம் முற்காலத்தில் சிறந்த துறைமுகமாக விளங்கியது. மாந்தைத் துறைமுகம் என அக்காலத்தில் அழைக்கப்பட்டது. உரோமர், பாரசீகர், அரேபியர், சீனர், இந்தியர் முதலிய பல தேசத்தவர்களுடன் வர்த்தகத் தொடர்புகள் மாந்தைத் துறைமுகத்துக்கு இருந்துள்ளன. அங்கு கண்டெடுக்கப்பட்ட பழைய நாணயங்கள் இவற்றைப் புலப்படுத்துகின்றன.

ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளில் திருக்கேதீச்சர ஆலயச் சூழல் அமைந்திருந்த சிறப்பை எமது சமய குரவர்கள் தமது தேவாரப் பதிகங்களில் குறிப்பிட்டுள்ளனர். அன்றிருந்த மாந்தைத் துறைமுகம், பாலாவி ஆறு, மாதோட்ட நன்னகர் ஆகியவற்றின் அழகும் சிறப்பும் மனத்துக்குப் பரவசமூட்டும் வகையில் அவர்களின் பதிகங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. ஆறு, கடல், சோலை முதலியவற்றோடு கூடிய இயற்கைச் சூழலில் ஆலயம் அமைந்திருந்த வனப்பும், பக்தி நெறியில் நின்ற சிவனடியார்கள் முடிகள் சாய்த்து, அடி பேணி, இராப்பகல் நினைந்து ஏத்த உமைமணவாளனாக திருக்கோயிலில் திடமாக உறைந்து, உயிர்களுக்கெல்லாம் பேரருள் புரிந்து கொண்டு, திருக்கேதீச்சரத்தை என்றும் பிரியாது உறையும் சிவனின் பெருமையும் இத்திருப்பதிகங்களில் பக்திச் சுவைசொட்ட விளக்கப்பட்டுள்ளன. திருக்கேதீச்சர ஆலயம் இலங்கையில் ஆட்சி புரிந்த அரசர்களினதும் சோழ, பாண்டிய அரசர்களினதும் ஆதரவுடன் சிறப்புடன் விளங்கி வந்தது.

இலங்கை வாழ் சைவத் தமிழ் மக்களின் வாழ்வு, தாழ்வு என்பவற்றிற்கேற்ப திருக்கேதீச்சரம் உயர்ந்தும், தாழ்ந்தும் வந்துள்ளது (அல்லது) திருக்கேதீச்சரத்தின் உயர்வு தாழ்வுகளுக்கேற்ப இலங்கை வாழ் சைவத் தமிழ் மக்களுக்கு வாழ்வும் தாழ்வும் ஏற்பட்டன எனலாமோ? பதினாறாம் நூற்றாண்டின் மத்தியில் ஏற்பட்ட கடற்கோளினாலும், அந்த நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் போத்துக்கேயரினால் ஆலயம் இடிக்கப்பட்டதாலும், மாதோட்டத்தின் சில பகுதிகள் கடலுள் மூழ்கியும், ஆலயம் அழிந்தும் விட்டன. சில ஆண்டுகளின் பின் அப்பகுதிகளில் மண்மாரி பெய்து மண்மூடியது. பின் அப்பகுதி காடாகிவிட்டது. இலங்கையும் அந்நியரின் ஆட்சிக்கு உட்பட்டுவிட்டது.

திருக்கேச்சரத்தின் தனிச்சிறப்பு "கோயிலோ, உருவமோ, பூசையோ இன்றி மூன்று நூற்றாண்டுக்கு மேலான காலம் தமிழ் வேதமாகிய தேவாரத் திருவுருவில் மட்டுமே கேதீச்சரநாதர் உறைந்திருந்தார் என்பதாகும்" (கி. பி. 16ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஆலயம் அழிவுற்றதிலிருந்து கி. பி. 19ம் நூற்றாண்டு இடைப்பகுதி வரை திருக்கேதீச்சரம் என்ற பெயரையே இலங்கைச் சைவமக்கள் கேளாது வாழ்ந்திருந்த இருள் செறிந்த காலமாகும். இக்காலப் பகுதியில் இலங்கை அந்நியராட்சிக்கு உட்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது).

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தாம் எழுதி வெளியிட்ட "யாழ்ப்பாணச் சமயநிலை" என்னும் துண்டுப் பிரசுரத்தின் இறுதியில் இலங்கைச் சைவ மக்களுக்கு பின்வருமாறு ஒரு வேண்டுகோள் விடுத்தார்: "சைவசமயிகளே! தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களுள் இரண்டு இவ் விலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்றாகிய திருகோண-

மலைக்குச் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றிருக்கின்றது. மற்றொன்றாகிய திருக்கேதீச்சரத்துக்கு திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றுஞ் சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பதிகம் ஒன்றும் இருக்கின்றன. இத்திருக்கேதீச்சரம் வடமாகாணத்தின் கண்ணுள்ள மன்னாருக்கு அதி சமீபத்திலிருக்கின்ற மாதோட்டத்திலுள்ளது. இத்திருக்கேதீச்சரம் அழிந்து காடாகக் கிடக்கின்றதே! புதிது புதிதாக இவ்விலங்கையில் எத்தனையோ கோயில்கள் கட்டப்படுகின்றனவே. நீங்கள் இந்த மகாஸ்த லத்தைச் சிறிதும் நினையாத தென்னையோ! இவ்விலங்கையிலுள்ள விபூதி தாரிகள் எல்லாருஞ் சிறிது சிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந் தொகைப் பொருள் சேர்ந்துவிடும். இதை நீங்கள் எல்லோருஞ் சிந்தித்து இத்திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின் அருட்கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வார்."

இவ்வாறு திருக்கேதீச்சரத்து நினைவை சைவ மக்களுக்கு மீண்டும் ஏற்படுத்திய பெருமை நாவலர் பெருமானுக்கே உரியதாகும். இதைத் தொடர்ந்து பல சைவ அன்பர்களின் முயற்சியால், பழைய கோயில் இருந்த இடம் கண்டு பிடிக்கப்பட்டு, அங்கு ஒரு சிறிய கோயில் அமைக்கப்பட்டு 1903ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. காலப் போக்கில் திருப்பணி வேலைகள் செய்து ஆலயத்தைச் சிறப்பான முறையில் நிர்வகிக்கும் நோக்கில் 1948ஆம் ஆண்டில் திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபை நிறுவப்பட்டது. (இலங்கை சுதந்திரம் பெற்றதும் 1948ல் என்பது குறிப்பிடத்தக்கது). சில திருப்பணிகள் செய்த பின் 1952ல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்னரும் தொடர்ச்சியாகப் பல திருப்பணிகள் செய்யப்பட்டு வந்ததுடன், யாத்திரை செய்வோர் தங்குவதற்கு வசதியாக பல மடங்களும் அமைக்கப்பட்டன. இவற்றோடு தபாற் கந்தோர், குழாய் நீர் விநியோகம், மின் வெளிச்ச வசதி, சைவப் பாடசாலை, மருத்துவ நிலையம், கிராமிய வங்கி, கூட்டுறவு நிலையம் போன்றவை திருக்கேதீச்சரத்தைப் பொலிவு செய்தன. இவ்வாறு சைவர்களது மனம் கவர்ந்த திருக்கேதீச்சரம் நாயன்மாரால் அன்று பாடப்பட்ட பண்பையும் சிறப்பையும் ஓரளவுக்குப் பெற்று வந்தது.

இந்நிலையில் (நம் பண்பாட்டை வல்வினையின் காரணமாகப் போலும்) எமது நாட்டில் அரசியல் மாற்றங்களினாலும் போர்ச் சூழலினாலும் 1990ம் ஆண்டிலிருந்து பன்னிரெண்டு வருடங்களாக ஆலயத்தில் எவ்வித பூசை வழிபாடுகளும் நடைபெறாதிருந்தது. ஆலயம் உட்பட ஏறக்குறைய மூன்றுமைல் சுற்றாடலும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்தது. அப்பிரதேசத்தில் வாழ்ந்த பொதுமக்கள் யாவரும் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிவிட்டனர். ஆலயக் கட்டிடத்தைத் தவிர, சூழவிருந்த பூசகர் முதலியோரின் வீடுகள், யாத்திரீகர் தங்கும் மடங்கள் முதலிய கட்டிடங்கள் யாவும் உடைக்கப்பட்டு விட்டன. இப்போது ஏற்பட்டுள்ள ஓரளவு சுமுகமான நிலையில் திருப்பணிச் சபையினரதும் இலங்கை வாழ் சைவப் பெருமக்களினதும் முயற்சியால் ஆலயத்துக்குச் சொந்தமான பகுதியில் இருந்து இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர். ஆலயமும், சுற்றாடலும் திருப்பணிச் சபையாரால் பொறுப்பேற்கப்பட்டுப் பூசகர் இல்லமும் யாத்திரீகர் மடமொன்றும் கட்டப்பட்டுள்ளன.

சில அத்தியாவசிய திருப்பணிகளின் பின் 2003ஆம் ஆண்டு யூலை மாதம் ஆறாம் திகதி மகாகும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. இது சைவ மக்களின் உள்ளங்களைக் குளிர வைத்துள்ளது. எனினும், சமீபத்தில் ஏற்பட்ட பின்னடைவுகளைத் தாண்டி ஆலயத்தை பண்டைய சிறப்பு நிலைக்குக் கொண்டுவர சைவ மக்களின் உதவி அவசியம் தேவைப்படுகிறது. மாமல்லபுரம் சிற்பக் கல்லூரியில் சைவாகம விதிப்படி ஆலயத்தை மேலும் மெருகூட்டும் வகையில் சிலைகள், தூண்கள் முதலியவற்றிற்கான சிற்ப வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இந்த வேலைகள் பூர்த்தியடைந்த பின் சிற்ப வேலை செய்யப்பட்ட சிலைகள், தூண்களை திருக்கேதீச்சரத்துக்கு எடுத்துவர ஏற்பாடுகள் செய்யப்படும். இவற்றை ஆலயத்தில் நிறுவுவதன் மூலம் ஓரளவுக்கேனும் புராதன சிறப்புடன் ஆலயத்தை விளங்கச் செய்யலாம். அத்துடன் முன்னர் நடைபெற்று வந்த குருகுலம் மீளவும் ஆரம்பித்து நடத்துவதும் அவசியமாகும். யாத்திரீகர்கள் தங்கிச் செல்வதற்கான மடங்களும் மீளவும் கட்டப்பட வேண்டும். இவற்றை யெல்லாம் செய்து முடிக்க கோடிக் கணக்கான ரூபாய் தேவைப்படும். இக் கைங்கரியங்களை நிறைவு செய்வதற்கு இலங்கை

வாழ் சைவப் பெருமக்கள் தம்மால் இயன்ற பொருளுதவி செய்து உதவுமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தென் இந்தியாவில் தொண்டை நாட்டிலுள்ள தலமாயிருந்த பாடல் பெற்ற தலங்களைப் புனர் நிர்மாணம் செய்வதற்கு ஒரு சபை அமைக்கப் பட்டது. அங்கு நாவலர் பெருமான் ஆற்றிய சொற்பொழிவின் போது குறிப்பிட்ட கருத்து:

> தருமங்களையும் அவைகளின் பலன்களையும் அவைகளைச் செய்யும் முறைகளையும் அறியவும் - அறிவிக்கவும் வல்லவர் கல்வி அறிவு உடையவராதலாலும், அவைகளைத் திரவிய முபகரித்து முடிக்க வல்லவர் செல்வமுடையவராதலாலும், இவ்விரு திறத்தாருள்ளும் பலர் சபையாகத் திரண்டு விதானங்கள் செய்து கொண்டு அவ்விதானங்களின் படியே தருமங்கள் நடத்தப் புகுவாராயின் அத்தருமங்களெல்லாம் விதிப்படி நிறைவேறும். அவற்றின் பொருட்டு கொடுக்கும் பொருள் முழுவதுந் தருமத்திற்றானே உபயோகப்படும். ஆதலினால் நம்மவருள்ளே தருமஞ் செய்யக் கருத்துடையவர்கள் யாவரும் இத்திருப்பணிச் சபையில் சேர்தலே உத்தமோத்தமம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் வெளியிடப்படும் பத்திரிகையான 'இந்துசாதனம்' 19.12.2002 இதழின் ஆசிரியத் தலையங்கத்திலிருந்து.

"திருக்கேதீச்சரம் ஈழத்து சைவமக்களின் இதயம். அது செம்மையாகப் பேணப்பட வேண்டும். இந்நாடு செழிப்புற வேண்டுமாயின் மக்கள் குறைவிலாது வாழ வேண்டுமாயின் - சமாதானமும் சாந்தியும் நிலவ வேண்டுமாயின் - திருக்கேதீச்சரம் போன்ற அருள் சுரக்கும் பேராலயங்களில் பூசை வழிபாடுகள் - நித்திய நைமித்தியங்கள் - குறைவற நடைபெற வேண்டும்.

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை இவ்வாலயத்தைப் பண்டைய நிலைக்குக் கொண்டுவர கடந்த அரை நூற்றாண்டு காலமாகப் பெரும் பணியாற்றி உள்ளது. சமீபத்திய இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்ட பின்னடைவுகளைத் தாண்டி ஆலயத்தைப் பண்டைய சிறப்பு நிலைக்குக் கொண்டுவர சைவமக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு திருப்பணிச் சபையினரின் முயற்சிகளுக்கு தங்களால் இயன்றமட்டும் வாக்காலும், காயத்தாலும், பொருளாலும் உதவிகள் செய்து இப்பெரும் உத்தமோத்தம சிவ புண்ணியத்தில் தங்களை ஈடுபடுத்திப் பெரும் புண்ணியத்தை ஈட்டுவார்களாக. அதற்குத் திருவருள் சுரக்குமாறு பரம கருணாநிதியாகிய திருக் கேதீச்சரப் பெருமானினதும் கௌரியம்பாளினதும் பாதார விந்தங்களைப் பணிந்து பிரார்த்திக்கிறோம்."

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு இந்து மாமன்றம் உடுபுடவைகள் வழங்கல்

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் உடுதுணிகளை வழங்கியுள்ளது.

வெலிக்கடை மகசின் சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட கலவரத்தையடுத்து 180க்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் களுத்துறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர்.

இவர்களது உடமைகள் யாவும் எரிந்து போன நிலையில் உடுத்த உடுப்புடனேயே இவர்கள் இங்கு இருந்தனர்.

இது பற்றி பத்திரிகை வாயிலாக அறிந்த அகில இலங்கை இந்து மா மன்ற பொதுச்செயலாளர் கந்தையா நீலகண்டன் புனர் வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் ஏ. திஸாநாயக்கவுடன் தொடர்புகொண்டு அவரது அனுமதியுடன் களுத்துறைச் சிறைச்சாலைக்கு உடுதுணிகளுடன் சென்றது.

அங்கு இவர்கள் தமிழ் அரசியல் கைதிகளுக்கு சாரம், சேட், துவாய், உள்ளாடைகள், பற்பசை, பற்தூரிகை, சவர்க்காரம், சமயப் புத்தகங்கள் மற்றும் பிஸ்கற் வகைகளையும் வழங்கினர்.

அகில இலங்கை இந்து மா மன்றத்தின் சமூக நலன் குழுத் தலைவர் சி. தனபாலா, ஊடக இணைப்பாளர் மயில்வாகனம் சர்வானந்தா மற்றும் ரி.கிரிதரன் ஆகியோர் சிறைச்சாலைக்குச் சென்று இந்தப் பொருட்களை கைதிகளுக்கு கையளித்தனர்.



# மனித குல மேன்மையின் திறவுகோலாக மகாசிவராத்திரி விரதம் அமைகின்றது

த. மனோகரன்
மாமன்ற உப தலைவரும், மாமன்ற கல்விக் குழுச் செயலாளரும்

**ம**னிதப் பண்புகளைத் தட்டியெழுப்பி நேர்வழியில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு உயர்நிலையை அடைவதற்கு மனிதனைப் பக்குவப்படுத்துவதே சமய நெறிகள். இந்த வகையிலே இந்து சமயம் பல்வேறு நெறி முறைகளை முன்வைத்துள்ளது. அவற்றிலே விரதங்களும் அடங்குகின்றன.

ஏனைய உயிரினங்களெல்லாம் தமக்கென விதிக்கப்பட்ட ஒரே முறையில் வாழ்ந்து மடியும் போது மனித இனம் மட்டுமே சிந்தித்து வாழ்வை நெறிப்படுத்தி வாழும் தன்மையைக் கொண்டதாக விளங்குகின்றது. விரதமும் அதிலொன்றாகும். விரதம் எனும்போது மனவுறுதி என்ற கருத்தும் உண்டு.

இந்துக்கள் கைக்கொள்ளும் விரதங்கள் பல. இவற்றிலே சிவனுக்குரிய மகாசிவராத்திரி விர்தம் மேன்மை பொருந்தியது. மாதந்தோறும் அமாவாசையுடன் கூடிவரும் தினங்கள் சிவராத்திரி தினங்களாகக் கைக்கொள்ளப்பட்டு வரும் அதேவேளை, மாசிமாத அமாவாசையுடன் கூடிவரும் சிவராத்திரி மகாசிவராத்திரி என்று சிறப்புப் பெறுகின்றது.

சிவராத்திரி தொடர்பான பலகதைகளுள்ளன. பிரமாவுக்கும், திருமாலுக்கும் சோதிப்பிளம்பாகத் தோன்றிச் சிவனார் தனது அளப்பரிய ஆற்றலை வெளிப்படுத்திய நாளாகவும், அவர்களது ஆணவத்தை அழித்த நாளாகவும் கூறப்படுகின்றது. அதேபோல் இன்னும் பல புராணக் கதைகள் வழக்கிலுள்ளன.

இக்கதைகள் கூறும் தத்துவக் கருத்துக்களைப் புரிந்து உணர்ந்து கொள்ளுவதே விரதம் நோற்பதன் பயனாக அமையுமேயன்றி சம்பிரதாயச் சடங்குகளைக் கைக்கொள்வதால் மட்டும் பயன் இல்லை. பலனும் இல்லை.

மனதைப்பக்குவப்படுத்தி நாம் பெற்ற பிறவிப் பயனை அடைவதற்கான வழியை அருட்திரு இராமலிங்கவள்ளலார் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். அதுவே சிவராத்திரி விரதத்தின் மூலமந்திரமாகவும் விளங்குகின்றது. தெளிவான விளக்கமாகவும் உள்ளது.

தனித்திரு, பசித்திரு, விழித்திரு என்ற மூன்று தத்துவங்கள் அவையாகும். ஒருமனிதன் இம்மூன்று விதிகளையும் தனது வாழ்வில் தினமும் கைக்கொள்வானானால் அவன் மனிதனில் தெய்வமாக உயர முடியும்.

ஆம். இம்மூன்று வழிமுறைகளும் மனிதனைப் பக்குவப்படுத்தி வாழும் வழியை நெறிப்படுத்தும் ஆற்றல் கொண்டவை. இவற்றிற்கு மேலோட்டமான கருத்துக்கள் கொள்ளப்பட்டு வருவது வழக்கமாக இருப்பினும் ஆழ ஆய்ந்து அவற்றுள் பொதிந்துள்ள தத்துவக் கருத்துக்களைக் கைக்கொள்வதே மகா சிவராத்திரி விரதத்தை மேற்கொள்வதின் பயனாக அமையும்.

சம்பிரதாய சடங்குகள் மட்டுமே சமயம் என்று கருதிவிடக் கூடாது மனிதனை, மனிதனின் மனத்தைப்பக்குவப்படுத்திச் சீரிய வாழ்வுக்கு நெறிப்படுத்துவதே சமய வழியாகும். நோக்கமுமாகும் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

தனித்திரு என்னும் போது தனியாக ஒதுங்கியிருப்பது என்பது கருத்தல்ல. நல்லவற்றையே நோக்காகக் கொண்டு சிந்தித்துச் செயற்பட்டு தனது உயர்ந்த தனித்துவத்தைப் பேணுதல் வேண்டும் என்பதே தனித்திரு என்பதன் பொருளாகும். தனித்துவம் என்னும் போது மேன்மையான குணங்களும், செயற்பாடுகளும் கொண்டவனாக தனித்துப் பிரகாசிப்பதாகும்.

பசித்திரு என்னும் போது உணவைச் சில வேளைகள் கைவிட்டு இருப்பது மட்டுமே என்பதல்ல உணவைக் குறைப்பதால் உடல் நலம் பேணப்படும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். உடல் நலத்தைப் பேணப் பசித்திருப்பதைப் போன்றே மனநலத்தைப் பேணவும் பசித்திருக்க வேண்டும்.

அதாவது வயிறு பசித்திருக்கும் போது உணவைத் தேடுவது போன்று, உள்ளம் பசித்திருக்கும்போது நல்லவற்றைத் தேடி அறிந்து அதன்மூலம் மனப்பசியைப் போக்கிக் கொள்ள வேண்டும்.

உடலிலுள்ள கழிவுகளை அகற்றுவதில் நாம் முன்னுரிமை கொடுத்துச் செயற்படுவது போன்று உள்ளத்தில் புகுந்துள்ள தீய சிந்தனைகளான மனக்கழிவுகளையும், உடற்கழிவுகளை நீக்குவது போன்று நீக்கிக்கொள்ளவேண்டும். மனக்கழிவுகளை நீக்கி, வெளியேற்றி விடும் போது ஏற்படும் வெற்றிடமே மனப்பசி எனப்படுகின்றது. கழிவுகள் அதாவது தீயவை அகன்ற மனப்பசியை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதே பசித்திரு என்பதாகின்றது.

மனப்பசிக்கு உணவாக நல்ல சிந்தனைகளை உள்வாங்கிக் கொள்வது மனித வாழ்வின் மகத்துவத்திற்குகந்தது. இது வாழவேண்டிய சமய நெறியில் வாழ வழி வகுப்பதற்குரிய படிமுறையாயமைகின்றது.

விழித்திரு என்னும் போது கண்களை மூடாது நித்திரை கொள்ளாது விழித்திருப்பது என்பது மட்டும்

கருத்தாக அமையாது. விழித்திரு என்னும் போது அதுவும் ஒரு விளக்கமாக அமையும் போதும் விழித்திரு என்பதன் விரிவான பொருள் வேறொன்றும் உள்ளது.

தீய நோக்கங்கள், தீய சிந்தனைகள் நம் மனத்திலே புகாதபடி நாம் எப்பொழுதும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதே விழித்திரு என்பதன் பொருளாகவும் உள்ளது.

மனிதனின் நிம்மதியைக் கெடுத்து வாழ்வைச் சீரழிப்பவை தீய சக்திகளும், தீய சிந்தனைகளும், தீய நோக்கங்களுமே என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். சிந்தித்துப் பண்பட்ட வாழ்வை வாழவேண்டிய மனிதனின் நேரிய வாழ்வைச் சீரழிக்கும் தீயசிந்தனைகள் மனத்திலே புகாதிருக்க வேண்டும். அதற்காக ஒவ்வொருவரும் விழிப்பாயிருக்க வேண்டும் என்பதையே விழித்திரு என்ற பதம் விளக்குகின்றது.

ஒவ்வொரு மனிதனும் தன்னைத் தான் மேன்மைப்படுத்திக் கொள்ள வழியமைத்துத் தருபவையே சமயங்கள் விதித்துள்ள விரதங்கள் என்பதை நாம் உணர்ந்து கொண்டு வாழ்வைச் செப்பனிட்டுக் கொண்டால் துன்ப, துயரங்களிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளமுடியும்.

ஆணவம், அகங்காரம், இறுமாப்பு கொண்டு வாழ்வதை ஒருவாழ்வாகக் கொள்ள முடியாது. தானும் சீரிய வாழ்வு வாழ்ந்து ஏனையோரும் அவ்வாறு வாழவழி காட்டி நெறிப்படுத்துவதே சமய வாழ்வாகும்.

விரதங்கள் நோற்பதன் மூலம் துன்பங்கள் களையப்பட்டு தூய்மையான வாழ்வு வந்து சேரும் என்பது நமது மரபு வழியாக வரும் நம்பிக்கையாகும்.

நமக்கும் மேலாக ஒரு சக்தியுள்ளது. அது நம்மை வழி நடத்துகின்றது என்பது சமயநெறியின் அடிப்படையான ஆழ்ந்த தத்துவமாகும். இவ்வாறான, உறுதியான நம்பிக்கை நம்மை வந்தடைந்து விட்டால் தன்னம்பிக்கையும் தானே வந்தடைந்துவிடும். தன்னம்பிக்கையுடன் நல்வழியில் வாழத்தலைப்பட்டு விட்டால் தன்மானம் கொண்ட மனிதனாக வாழவழி திறக்கப்படும். வாழவும் முடியும்.

இவ்வாறு ஒரு மனிதனை, அவனின் மனத்தைப் பண்படுத்தி, மேன்மைப்படுத்துவதில் விரதங்களும் உறுதுணையாகின்றன.

ஆதியும், அந்தமுமில்லாத அருட்பெரும் சோதியான சிவபிரானை வழிபட்டு, சிவசக்தி அருள் நாடி, தனித்திருந்து, பசித்திருந்து, விழித்திருந்து நோற்கப்படும் மகாசிவராத்திரி விரதமானது மனித குலத்தின் மேன்மையின் திறவு கோலாகும்.

இவ்விரத நன்னாளிலே அதர்மமும், ஆணவமும் அழிந்து எங்கும் நிம்மதி நிலவப் பிரார்த்திப்போம். நம்பினார் கெடுவதில்லை. இது நான்கு மறை தீர்ப்பு என்பதை உறுதியாக நம்பி துன்பங்களைத் துடைத்தெறிய, தூயவளவாழ்வு கிட்ட எம்பெருமானை இந்நாளிலே விரதமிருந்து நம்பிக்கையுடன் தொழுவதால் வாழ்வுவளம் பெறும். நிம்மதியும் தானாகவே வந்து சேர்ந்துவிடும்.

சிவராத்திரியன்று விரதம் மேற்கொள்பவர்கள் அதிகாலை நீராடி சிவசந்நிதியில் சிவபூசை மேற்கொள்வது சிறந்தது. அவ்வாறு பூசை மேற்கொண்டு பூசையைச் செய்து முடிக்க முடியாதவர்கள் கோயிலுக்குச் சென்று அங்கு நடக்கும் பூசைகளில் கலந்து கொள்வது உகந்தது.

அன்று முழுவதும் உண்ணாநோன்பு மேற்கொள்ள வேண்டும். பகலில் உறங்கக்கூடாது. இரவிலும் விழித்திருந்து நான்கு சாமங்களிலும் நடக்கும் பூசை வழிபாட்டில் கலந்து கொள்ள வேண்டும்.

வீட்டில் பூசை செய்வதாகவிருந்தால், மாலையில் குளித்து உலர்ந்த ஆடையணிந்து நெற்றியில் திருநீறணிந்து கையில் உருத்திராக்கமாலையுடன் சிவபூசையை ஆரம்பிக்க வேண்டும்.

ஐந்தெழுத்து மந்திரமான 'சிவாயநம' என்ற புனிதமான சொல்லை உச்சரித்து வழிபாடு செய்ய வேண்டும். கலச பூசையுடன் லிங்கத்தை வைத்தும் வழிபாடு செய்யலாம்.

சிவபெருமானின் வெவ்வேறு பெயர்களான பவ, சர்வ, ஈசான, பசுபதி, உக்ர, ருத்ர, பீமா, மற்றும் மகாதேவா என்று கூறி வழிபாடு செய்ய வேண்டும். அத்துடன் சிவபிரானின் சகஸ்ரநாமத்தைச் சொல்வதுடன் வில்வ இலைகளைக் கொண்டு பூசிக்கலாம்.

பின்னர் நைவேத்தியம் படைத்து வழிபட வேண்டும். சிவ,ருத்ர, பசுபதி, நீலகண்டா, மகேஸ்டவரா, ஹரிகேசா, விருபாஷா, சாம்பு, சூலினா, உக்ரா, பூமா, மகாதேவா ஆகிய பன்னிரெண்டு பெயர்களை உச்சரித்து பூக்களால் அர்ச்சிக்க வேண்டும்.

கோயில்களில் பிரதட்சணமாக வந்து சிவபெருமானின் மூலமந்திரத்தை 108 முறைபாராயணம் செய்ய வேண்டும்.

சிவனுக்குச் செய்யப்படும் அபிஷேகங்களுக்கான பொருட்கள் பற்றிய விபரம் வருமாறு

**முதல் சாமம்** : பஞ்சகவ்ய அபிஷேகம் - சந்தனப் பூச்சு வில்வம், தாமரை அலங்காரம், அர்ச்சனை, பச்சைப் பயற்றுப் பொங்கல் நிவேதனம் - ருக்வேத பாராயணம்.

**இரண்டாம் சாமம்** : சர்க்கரை, பால், தயிர், நெய் கலந்த பஞ்சாமிர்தம், அபிஷேகம், பச்சைக் கற்பூரம் பன்னீர் சேர்த்து அரைத்துச் சாத்துதல், துளசி அலங்காரம், வில்வ அர்ச்சனை, பாயாசம், நிவேதனம், யசுர் வேத பாராயணம்.

**மூன்றாம் சாமம்** : தேன் அபிஷேகம், பச்சைக்கற்பூரம் சாத்துதல், மல்லிகை அலங்காரம், வில்வ அர்ச்சனை, ஒள் அன்னம் நிவேதனம், சாமவேதபாராயணம்.

**நான்காம் சாமம்**: - கரும்புச்சாறு அபிஷேகம், நத்தியாவட்டைமலர் சாத்துதல், அல்லி, நீரோற்பலம், நத்தியா வட்டை அலங்காரம், அர்ச்சனை, சுத்தஅன்னம், நிவேதனம் அதர்வன வேத பாராயணம்.

'பிறப்புண்டு, வாழ்வுண்டு, சிறப்புமுண்டு, பேரருளோன் வல்ல எம் சிவபிரானின் திருக்கருணைக் கடாட்சம் எம்மைத் தீண்டிவிட்டால் திண்ணமது நற்பேறு அடைவதுண்மை என்று திடமான நம்பிக்கையுடன் சிவனை வழிபட்டு நிம்மதியான, வளமான வாழ்வைப் பெறுவோம். அதற்கு மகாசிவராத்திரி திறவு கோலாக அமைகின்றது.

# சிவதத்துவமும்
# சிவமூர்த்தியின் பரத்துவமும்

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் எம்.ஏ., பி.எச்.டி
முதுநிலை விரிவுரையாளர் தரம் 1 மொழித்துறை
சப்ரகமுவ பல்கலைக்கழகம்



## சிவதத்துவம்

*"யாதொரு தெய்வங் கொண்டீர்*
*அத்தெய்வமாகியாங்கே*
*மாதொரு பாகனார் தாம் வருவர்"*

*(-சிவஞானசித்தியார்)*

"உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்" என்று சிவனைப் பாடினார் அப்பரடிகள். "நமச்சிவாய வாழ்க" என்று சிவவாழ்த்தைப் பாடிச் சிவனாமத்தின் மகிமையை மாணிக்கவாசக சுவாமிகள் சிவபுராணத்திலே உணர்த்தினார். எந்த மூர்த்தியை வழிபட்டாலும் அத்தெய்வமாக வெளிப்பட்டு நின்று அருள்புரிபவன் சிவபெருமான் என்று கூறுகிறது சிவஞானசித்தியார்.

சைவாலயங்களிலே கோபுரவாசலில் காட்சியளிக்கின்ற துவாரபாலகர்களில் ஒருவர் ஆள்காட்டி விரலைக் காட்டி நிற்கிறார். இது ஆலயத்தினுள்ளே வழிபடச் செல்வோருக்குக் கடவுள் ஒன்றே என்பதை அறிவுறுத்துகிறது. மற்றொரு துவார பாலகர் ஒரு கையை விரித்துக் காட்டிநிற்கிறார். கடவுள் ஒன்றேயொன்று தான். அதைத்தவிர வேறொரு தெய்வமுமில்லையென உணர்த்துகிறது.

*"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்*
*நன்றே நினைமின் நமனில்லை நாணாமே*
*சென்றே புகுங்கதியில்லை நுஞ்சித்தத்து*
*நின்றே நிலைபெற நீர் நினைந்துய்மினே"*

*(திருமந்திரம்)*

செந்தமிழ் நாட்டினர் முன்னாளில் எல்லோரும் சிவனையே வழிபட்டனர். அதனால் சைவர் என்ற ஒருகுலமே இருந்தது. தொழில் பற்றிய குலங்கள் பல இருந்த போதிலும் வழிபாட்டுக் குலம் ஒன்றுதானிருந்தது. அது சைவர் என்ற குலம். இதனால் ஒன்றே குலம் என்றும் இம்மறைமொழி எழுவதாயிற்று.

எனவே இறைவழிபாடு செய்வோர் தெய்வபேதம் மூர்த்தி பேதம் குறித்து மாறுபட்டு மலையாது நிலையான அன்பினால் சிவனைக் குறித்து வழிபட வேண்டும். தேவாரங்களை அருளிய சம்பந்தர், அப்பர், சுந்தரரும் திருவாசகம் அருளிய மாணிக்கவாசகரும் சிவபெருமானையே முழுமுதற் கடவுளாக வைத்துப் பாடியுள்ளார்கள். சிவனையன்றி மற்றொரு தெய்வத்தையும் அவர்கள் பாடவில்லை.

ஒரு நாணயத்துக்கு இரண்டு பக்கங்கள் இருப்பதுபோல இறைவனுக்கும் இரண்டு பக்கங்களுண்டு. ஒன்று வெப்பம். மற்றொன்று தட்பம். வெப்பம் சிவம். தட்பம் சக்தி. வெப்பமும் தட்பமும் சமமாக இருந்தால்தான் இந்த உடம்போடு உயிரிடை நட்புப் பொருந்தியிருக்கும். ஏதாவதொன்று கூடினால் குடம்பை தனித்தொழியப் புள் பறப்பதுபோல உடம்பைவிட்டு உயிர் பிரிந்துவிடும். வெப்பமும் தட்பமும் சமமாக இருந்தால்தான் மலர் மலராகக் காட்சியளிக்கும் வெப்பம் மிகுந்தால் மலர் வாடும். தட்பம் மிகுந்தால் மலர் அழுகும். வெப்பத்தின் நுண்மை சிவம். தட்பத்தின் நுண்மை சக்தி. சிவாலயங்களில் வெந்தநீறும் தீர்த்தமும் பிரசாதமாக வழங்குகிறார்கள். சிவப்பிரசாதம் திருநீறு; சக்திப்பிரசாதம் தீர்த்தம்.

*"தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்*
*ஆயினும் ஈசனருள் அறிவாரில்லை*
*சேயினும் நல்லன் அணியன் நல்லன்ப்ர்க்கு*
*தாயினும் நல்லன் தாழ் சடையோனே"*

*(திருமந்திரம்)*

தீயைக் காட்டிலும் மிகவும் வெப்பமுள்ளவன் சிவன். இந்நிலை தனியாய் நிற்கும் கடந்த நிலை. புனலைவிடக் குளிர்ந்தவன். இந்நிலை அருளுடன் கூடி அனைத்து உயிரையும் இயக்கி ஆளும் வழிநிலை; அருள்நிலை (அருள் – சக்தி). சுட்டுணர்வாலும், சிற்றுணர்வாலும் அறியப்படாத சேயனாயினும் நல்லன் அவனைத் 'தாயினும் நல்ல தாழ்சடையோன்' என்கிறார் திருமூலர். "பால்நினைந்தூட்டும் தாய்" என்றார் மாணிக்கவாசகர். வெப்ப தட்பச் சமநிலைபோல சிவத்தின் கடந்தநிலையும் (அதீதவியாகநிலை) சக்தியின் அருள் நிலையும் ஒன்று சேர்ந்திருப்பது சிவலிங்கம்.

சிவன் கோயில்களில் மூலஸ்தானம் எனப்படும் மிக முக்கியமான இடத்திலுள்ளது. சிவலிங்கம். சிவலிங்கவழிபாடு மிகப்பழமையானது. சிந்துவெளி நாகரிகத்தில் சிவலிங்கங்களும் காணப்பட்டமையால் அக்காலத்திற்கு முன்னிருந்தே சிவலிங்க வழிபாடு நடைபெற்று வந்துள்ளது தெரியவருகிறது.

திருமூலர் அருளிய திருமந்திரத்தில் அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதாசிவலிங்கம், ஆத்மலிங்கம், ஞானலிங்கம்

முதலியவைகளின் விபரத்தைக் காணலாம். அனந்த சொரூபமாக, பாதாளம் முதல் ஆகாசம் வரை பரந்து விரிந்து நிறைந்திருப்பது அண்டலிங்கமெனத் திருமூலர் விளக்கந்தருகிறார். சிவம், சக்தி, நாதம், விந்து முதலிய அருவத்திருமேனிகளாகவும், சதாசிவன், மகேஸ்வரன் உருத்திரன் முதலிய உருவத்திருமேனிகளையும் உடையது. அருவத்திருமேனி சிவலிங்கம்.

சிவலிங்கத்திருமேனியில் எல்லாத் தத்துவங்களும் அடங்கியிருப்பதை சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. பஞ்சமுகங்களையுடையது சதாசிவலிங்கமென்று திருமந்திரம் கூறுகிறது. இவைகளையெல்லாம் தொகுத்து "காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நீள் நாதமணிந்தார்க்கு நிகழ் குறியாம் சிவலிங்கம்" என்று சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் கூறுகிறார். அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத்திலடங்கியுள்ள சிவதத்துவங்கள் யாவும் உருவத்திருமேனிகளாகச் சிவாலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பெற்று வழிபடப்படுகின்றன. அவை சோமாஸ்கந்தர் தெட்சணாமூர்த்தி, நடராஜர், பிச்சாடணர், சந்திரசேகரர் முதலிய உருவத்திருமேனிகளாகும். இத்திருவுருவங்களை வழிபடுவதும் சிவவழிபாடே அன்றியும் ஆலயங்களில் அம்பிகை, விநாயகர், முருகன், திருமால் முதலிய உருவத்திரு மேனிகளும் பிரதிஷ்டை செய்யப்பெற்று வழிபடப்படுகின்றன, "ஆதலின் தமது சக்தி ஆறுமுகன் அவனும் யாமும் பேதகமன்று , நம்போல் பிரிவிலன் யாண்டும் நின்றான்" என்ற கந்தபுராணக் கூற்று சிவம் வேறு முருகன் வேறல்ல என்பதை உணர்த்துகிறது. எங்கும் நிறைந்தும், வியாபித்தும் எல்லாமாயிருப்பதும் சிவம். "பலர்க்குமிடமெங் குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தம்" சிவம், "அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது சிவம்"

"வனாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய் கோனாகி யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டுவானாகி" நிற்பது சிவம். "சிவபெருமானென்று நான் அழைத்தேத்த சிவபெருமானென்று தான் வந்துநிற்பது" சிவம். தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல். பேரருடைமை, வரம்பிலாற்றலுடைமை, முடிவிலின்பமுடைமை முதலிய எண்குணங்களையுடையது சிவம். பிரபஞ்சம் முழுவதும் உள்ளும் வெளியும் நிறைந்த சைதன்ய சக்தியே சிவம் ஆலயங்களில் எழுந்தருளியுள்ள திருவுருவங்கள் தேவர்களாலும் முனிவர்களாலும் சிவனருள் பெற்றுய்ந்த சான்றோர்களாலும் பிரதிஷ்டை செய்யப்பெற்ற காரணத்தால் சாந்நித்தியமடைந்து சைதன்னிய சக்தியை எங்கும் எப்பொழுதும் வீசிக்கொண்டிருக்கிறது. அந்தச் சிவசக்தியானது வழிபடுவோருடைய வல்வினைகளை அகற்றி வேண்டுவார் வேண்டுவதை ஈந்து கொண்டிருக்கிறது. அந்தக் திருவருட்சக்தி விறகில் தீயும், பாலில் நெய்யும் கரந்திருப்பதுபோல் சிவத்திருவுருவத்தில் மறைந்திருப்பதாக அப்பரடிகள் கூறுகிறார்.

*"விறகில் தீயினன் பாலில் படு நெய்போல்*
*மறையநின்றுளன் மாமணிச் சோதியான்*
*உறவுக் கோல் நட்டு உணர்வுக் கயிற்றினால்*
*முறுகவாங்கிக் கடைய முன் நிற்குமே"*

*(அப்பர் தேவாரம்)*

உடம்பிலே உயிரும், உயிரிலே இறைவனும் தங்கியிருக்கின்றது. உடம்புக்கும் உயிருக்குமுள்ள உறவையும், உயிருக்கும் இறைவனுக்குமுள்ள உறவையும் உற்றுணர்ந்து உருகி ஊறி உட்கசிவாகிய உறவுக்கோல் நட்டு உணர்வாகிய கயிறிட்டுக் கடைந்தால் திருவருள் சக்தியாகிய சைதன்னியப் பேரானந்தத்தை அனுபவித்து உய்தியடையலாம். "அன்புடன் ஆசார பூசை செய்து உய்ந்திடவாணாள் வீணாள்படாது" என்கிறார் அருணகிரிநாதர். பசுவின் உடம்பு முழுவதும் பால் பரவியிருப்பினும் மடியின் மூலமாக அதைப் பெறுதல் போல எங்கும் நிறைந்திருக்கிற இறைவனுடைய திருவருளைத் திருக்கோயில்களிலுள்ள சிவத்திருமேனிகளை வழிபட்டுப் பெறுதல் வேண்டும்.

*"புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு*
*அண்ணல் அதுகண்டு அருள் புரியா நிற்கும்"*

என்பது திருமந்திரம். பொக்கமிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு நிற்பவன் சிவபெருமானாதலால் நெக்கு நெக்குருகிப் பூவும் நீரும் கொண்டு சிவவழிபாடு செய்து பிறவிப்பயனை அடையமுயற்சி செய்யவேண்டும்.

**சிவமூர்த்தியின் பிரபாவங்கள் :**

நிசும்பன் என்னும் அசுரன் தேவரை வருத்த அவனைக் கொன்றவர்; பிரமதேவனுக்குச் சிருஷ்டியின் பொருட்டுப் பஞ்சாட்சர உபதேசம் செய்தவர்; பிருதுவியில் சர்வராயும், அப்புவில் பவராயும், தீயில் உடுத்திரராயும், காற்றில் உக்கிரராயும் ஆகாயத்தில் விமராயும், சூரிய மண்டலத்தில் ஈசானராயும் ஆன்மாவில் பசுபதியாயும் அமர்பவர்; சக்தியை ஐந்து முகத்துடன் தமது முகத்திற் சிருஷ்டித்தவர்; உபமன்யு முனிவருக்குத் தந்தையாராகிய வியாக்கிரபாத முனிவர் வேண்டுகோளின்படி பாற்கடலளித்தவர்; வீரபத்திரரைத் தக்கயாகத்தின் பொருட்டுப் படைத்து அதை அழிக்க ஏவி அதிலழிந்த தேவரை மீண்டும் உமை வேண்ட உயிர்ப்பித்துத் தக்கனுக்கு ஆட்டுத்தலையருளியவர்; இராவணன் திருக்கயிலையைச் சிவபூசைப் பொருட்டுப் பெயர்க்கத் திருவடியின் திருவிரலால் ஊன்றி மதமடக்கி அவன் துதிக்க அநுக்கிரகித்தவர்; பிரமன் கர்வித்த காலத்துப் பயிரவரை ஏவி அவனது நடுத்தலையைக் கிள்ளி எறிந்து அவன் வேண்டுகோளால் கபாலத்தைக் கையிற் பற்றியவர்; உமை தமதருளால் உலகஞ் செழித்திருக்கிறதென்று எண்ணியதை யறிந்து தமது உலக உருவமாகிய கலைகளைத் தணிவித்தனர். அதனால் உயிர்கள் ஒடுங்கின. இதனையறிந்த பிராட்டியார் இறைவனை வேண்ட அதனால் அநுக்கிரகித்தவர். சர்வ சங்கார காலத்தில் பிரமன், விஷ்ணு இந்திராதிதேவர்களை அழித்து அவர்களின் எலும்புகளையும் நீற்றையும் அவர்களது நிலையின்மை தெரிந்துய்த் திருமேனியிலணிபவர்; தாருகாவனத்து இருடிகளும் அவர்களின் பத்தினியரும் செருக்குற்றிருத்தலைத் தேவர்கூறிவேண்ட விஷ்ணுவை மோகினி உருக்கொண்டு ரிஷிகளிடம் போக ஏவித்தாம் பைரவத் திருக்கோலத்துடன் ரிஷிபத்தினிகளிடஞ் சென்று அவர்கள் கற்புக்கேட்டுவேண்ட அவர்களை மதுரையில் தீண்டுகிறோமெனக் கூறி மறைந்து அப்பெண்களின்

கணவர்கள் அபிசார வேள்வி செய்து தம்மீது ஏவிய டமருகம், மழு சூலம், இவற்றைக் கையிற்பிடித்தும் புலியைக் கொன்று தோலையுடுத்தும், பாம்பினைப் பயன்படுத்தித் திருவடியில் அடக்கியும், பிரமதணத்தையும் பேயையும் உடனிருக்கச் செய்தும், மானைக் கையிற் பிடித்து வலியடக்கியும் வெண்டலையை அணிந்தும் முயலகனை எலும்பொடிய முதுகில் அமுத்தியும், குற்றமில்லாது இருந்தவர்; யானையுருக்கொண்டு செருக்கடைந்து தேவர்களை வருத்தித் தம்மையெதிர்க்க வந்து தம்மை எதிர்த்து விழுங்கிய தயாசுரனை உடல்பிளந்து வெளிவந்து அவன் தோலையுரித்துப் போர்த்துக் கஜமூர்த்தியெனத் திருநாமம் பெற்றவர்; இந்திரன் ஒரு காலத்துக் கர்வப்படப் பூதவுருக்கொண்டு அவன்முன் சென்று கோபித்து அவனாலுண்டான கோபத்தைக் கடலில் விட்டனர். அது குழந்தையுருவாய்ச் கலந்தரனெனப்பட்டது; சர்வசம்மார (சங்கார) காலத்து இடபவுடருக் கொண்டு தம்மையடைந்த தருமத்தை அதன் வேண்டுகோளின்படி வாகனமாகவூர்ந்து இடபாருடத் திருநாமமடைந்தனர்; பாற்கடலிலிருந்து வந்த விஷத்துக்கஞ்சித் தேவர்களுக்கு அபயமளித்துத் தாம் அதை வருவித்துப்புசித்து கண்டமட்டில் அடக்கி நீலகண்டத் திருநாமம் அடைந்தனர்; உமை/பார்வதி தமது திதிநேத்திரங்களை மறைத்தலால் அவர் விரல்களில் உண்டாகிப் பெருகிய கங்கையைத் தேவர் வேண்டச் சடையிலணிந்து கங்காதரத்திருநாமம் பெற்றவர். பகீரதன் பிதுர்கள் நற்கதியடையக் கொணர்ந்த ஆகாசகங்கையின் வீறடக்கிச் சடையிலணிந்து அவன்வேண்டு கோட்படி பூமியில்விட்டுக் கங்கா விசர்ஜனமூர்த்தியெனும் திருநாமம் பெற்றவர்; பிரமன் வேண்டுகோளின் படி புஜத்தில் சனகர் முதலியவர்களைப் படைத்தளித்தவர்; கயமுகாசுரனை வெல்ல ஒரு புத்திரனை அளிக்க வேண்டுமென்று தேவர் வேண்ட விநாயமூர்த்தியைப் பிறப்பித்து அத்துன்பத்தை நீக்கினவர்; சூரபன்மனுக்கு வச்சிரயாக்கை, இந்திரஞாலத்தேர் முதலியன அளித்து அவன் செருக்குற்ற காலத்து அவன் செய்த யாகத்தை அழிக்கச் கங்கையை பூமியில் வருவித்துக் குமரக்கடவுளால் அவனைச் சங்கரிப்பித்தவர், விபுலன் பொருட்டுக் காலனைச் சூலத்தாற் குத்தித் தாக்கினவர்; பிங்கலன் எனும் வேடன் பொருட்டுக் காலபடரைக் காய்ந்தவர்; ஆதிசேடன் தவஞ்செய்து தன்னைத் திருமேனியில் அணிந்து கொள்ள வேண்ட விரலாழியாகத்தரித்துப் புஜங்கபூஷணத் திருநாமம் அடைந்தவர், கந்தமூர்த்தி திருவவதரிக்க வேண்டத் தமது நெற்றிக் கண்ணிலிருந்தது ஆறு தீப்பொறிகளைப் படைத்து அவற்றை அக்னி, வாயு இவ்விருவரையுங் கொண்டு சரவணத்திலிக்கட்டளையிட்டுக் கங்கையாலும் கார்த்திகை முதலானவராலும் வளர்ப்பித்துச் சூரன் முதலியவரை வெல்லக் கட்டளையிட்டவர்; பிரமனைக் கந்தமூர்த்தி பிரணவத்திற்குப் பொருள் வினாவிய காலத்து அவனைச் சிறை செய்தனால் விஷ்ணு வாதியர் முறையிடப் பிரமனைச் சிறைவிடக் கட்டளையிட்டு அதன் பொருள் வினாவிச் சுவாமிநாதன் திருநாமம் குமரனுக்களித்தவர்; பகாசுரன் எனப்பெயர் கொண்ட கொக்குருக் கொண்ட அசுரன், ஒருவனை உயிர்மாய்த்து கர்வம் அடைந்தார். இவ்வகை யாவர்? என்று அவன் இறகில் ஒன்றை முடியில் அணிந்தவர்; அந்தகாசுரன் கர்வித்த காலத்து அவனைச் சூலத்தாற் குத்தி வெளிலில் உலர்த்தியவர்; அக்னி, வாயு, குபேரன், ஈசானன், நிருதி, யமன் வருணன் முதலியோர் தவஞ்செய்த காலத்து அவர்க்குத் தரிசனம் தந்து பதமளித்தவர்; தேவர் பொருட்டுக் காளியுடன் சண்ட தாண்டவமாடி ஆதிசேடன், முஞ்சிகேசன் கார்க்கோடகன், காரைக்காலம்மையார், விஷ்ணு மூர்த்தி இவர்களுக்கு நடனத் தரிசனம் அருளியவர். இவர் நடனத்தில் காதணி நழுவ அதனைத் தாமே அணிந்தவர்; தனகுந்தன் மனைவி பொருட்டுத் தாயுருக்கொண்டு மருத்துவம் பார்த்துத் தாயுமான திருநாமம் பெற்றவர், மன்மதன் தேவர் வேண்டுகோளால் சிவன் யோகத்திருக்கையில் புஷ்ப பாணத்தை ஏவித் தீ வழிபாட்டில் ரதிதேவி சிவமூர்த்தியைத் துதித்துப் புருஷபிச்சை கேட்டக அளித்துக் காமரித்திருநாமம் பெற்றவர்; திரிபுராதிகள் பொன், வெள்ளி, இரும்புக் கோட்டைகளைச் செய்வித்து அக்கோட்டைகளுடன் பறந்து தேவர்களை வருத்திவந்தனர். இதனால் தேவர்கள் சிவமூர்த்தியை வேண்டி அவர்களில் மூவர் பிழைக்க மற்றவர்களை நீறாக்கித் திரிபுராரிமூர்த்தித் திருநாமமடைந்தவர்; பன்றிக் குட்டிகளுக்குப் பாலூட்டி வளர்த்து அவர்களை மந்திரிகளாக்கியமை; நாரை ஒன்று வெந்தாமரைத் தீர்த்தத்தில் மீனுண்ண வந்து ஞானனோதயம் பெற்றுத் தியானிக்க முத்தியளித்தவர்; வாதவூரடிகளுக்குக் குருமூர்த்தியாய் எழுந்தருளி உபதேசித்து நரியைப்பரியாக்கி பரியை நரியாக்கி மண் சுமந்து, பாண்டியனாலடியுண்டு சராசரமெல்லாந் தமது திருமேனியென்று காட்டி அவருக்குச் சிவானந்தவாழ்வைளித்தவர். திருமால் தாமரை கொண்டு தம்மைப் பூசிக்கையில் அம்மலரில் ஒன்று குறையத் தமது கண்ணைப்பிடுங்கி அர்ச்சித்ததனால் களிப்படைந்து தாமரைக் கண்ணனெனத் திருநாமமும் இஷ்ட சித்தியும் சக்கரப்பேறும் அளித்தவர். திருவீழ்மிழலையென்னும் தலத்தில் இது பிரத்தியட்சம், மார்க்கண்டேயர் பொருட்டில் யமனை உதைத்து அநுக்கிரகித்தவர்; விஷ்ணு மூர்த்தியைப் பலமுறை சக்தியாகப் பெற்று அரிஹரபுத்திரரைப் பெற்றவர்; தந்தையைவாளால் வெட்டிய சண்டிக்கு பெரும் பதம் அளித்தவர்.

மனிதனுடைய அறிவோ, புத்தியோ, விவேகமோ, வேட்கையோ பரம்பொருளை விட்டு விலகித் தனியாக இயங்கும் தன்மையை அடைந்துவிடவில்லை. இயலாமையும், ஆற்றாமையும் மனிதலட்சணங்கள் மனிதன் இயங்குவதற்குத் துணை தேவை. அந்தத் தேவை பரம் பொருளினாலேயே நிறைவு செய்யபடுகிறது. அந்தநிலையில் பரம்பொருளை ஆராய்வதற்கும் அறிந்துக்கொள்வதற்கும், அதன் துணை தேவை அப்படியானால் அப்பரம்பொருளைத் தனது குறுகிய அறிவு எல்லைக்குள் மனிதரால் கொண்டுவரமுடியாது. மனிதன் நினைக்கிறான் எதனையும் தன் அறிவுத்திறத்தால் ஆராய்ச்சி முயற்சியால் கண்டறிந்து அதன் உண்மை பொய்யை அறிந்துகொள்ளமுடியும் என்று சடப்பொருள் சம்பந்தமான ஆராய்ச்சியில் மனிதன் சில வெற்றிகளை அடைந்துள்ளான். ஆனால் பரம்பொருள் அத்தகைய சடப்பொருள் அல்லவே! இவையாவற்றையும் கடந்து நிற்கின்ற முழுமுதற் பொருள் அப்பரம் பொருள். பரஞானம் பெற்று ஆன்மா விடுதலையானதும் அது பிரம்மமாகவே ஆகிவிடுகிறது. புலன்களை அடக்கி மனதை ஒருமுகப்படுத்தி குருவின் துணையுடன் மேற் கொள்ளும் தொடர் முயற்சிகளின் மூலமே ஆன்ம விடுதலை சாத்தியமாகும்.

# "சித்தமழகியார் பாடாரோ நம் சிவனை..."

கலாபூஷணம் இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு
B.A. MA (H.C)



மும் மூர்த்திகளுள் முதல்வனான சிவ பிரானுடைய சின்னம் சிவலிங்கம் ஆகும். இலிங்க வழிபாடு மிகவும் தொன்மை வாய்ந்தது. சங்க இலக்கியங்களில் மலை உறைகடவுள், பிறவா யாக்கைப் பெரியோன், சூலம் பிடித்த சுடர்படைக் கடவுள், என்றெல்லாம் சிவன் குறிப்பிடப்பட்டுள்ளார். யசுர் வேதம், சிவனாருக்குரிய நமசிவாய, சிவாயநம ஆகிய ஐந்தெழுத்து மந்திரம் பற்றிக் கூறியுள்ளது. சைவாகமங்கள் சைவத்தின் தத்துவம் சைவாலயங்கள் அமைக்கும் முறை ஆகியன பற்றிக் கூறியுள்ளன. சைவத்தின் மேன்மை, தெய்வீகத் தோத்திரங்கள், சைவ ஆலயங்கள், அருளாளர்கள் ஆற்றிய அற்புதங்கள் ஆகியன மூலம் சைவத்தின் மேன்மை புலனாகின்றது. சைவாலயங்கள் கலைகளைக் கவினுற வளர்த்து வரலாயின.

சிவன் என்று கூறும் போது மங்களமானவன், நலம் செய்பவன் யோகிகளுக்கெல்லாம் உயர்ந்த மேலான, தலையாய யோகி இலிங்க வடிவினன் என்றெல்லாம் பொருள் கொள்ளலாம்.

சிவனை வழிபடும் மார்க்கம் சைவமாகும். இஃது சிவனைக் குறித்த வழிபாடு என்பதை ஆதி சங்கரர் செம்மையாக்கினார். இப் பெரியாரது காலத்திலே, சைவம் பாரதமெங்கணும் பரவியது. தமிழ் நாட்டில், சைவ சித்தாந்தம் என்றும் காஷ்மீரத்தில் காஷ்மீர சைவம் என்றும், கன்னடத்தில் வீர சைவம் என்றும், இலிங்காயுதம் என்றும் சைவம் பல நாமங்களைக் கொண்டிருந்தது. தமிழ் நாட்டிலே சைவ பெரியார்கள், அருளாளர்கள், சமயாச்சாரியார்கள் அவ்வப்போது தோன்றி, சைவத்தைப் பரப்பலாயினர்.

இயற்கையில் இறைவன், இறைவனுள் இயற்கை என்பதை உணர்த்தி நிற்கும் பஞ்ச பூத தலங்கள், அட்ட வீரட்டானத் தலங்கள், சப்த விடாங்கத் தலங்கள், தில்லைக் கூத்தனின் ஐவகைச் சபைகள், ஆகியவை சிவனாரின் கருணை, அருட் பெருமை ஆகியனவற்றை உணர்த்தி நிற்கின்றன. சைவ அருட்பாடல்கள் பன்னிருதிரு முறைகளாகப் பரிணமிக்கின்றன. சிவபிரானின் தோற்றத்திற்கும், அவரது திரு நாமங்கட்கும் உள்ள தொடர்பினை சைவப் பெருமக்கள் அறிந்திருத்தல் அவசியமாகும். உதாரணமாக, கங்கா நதியை தனது சடா முடியில் அணிந்திருப்பதால் சடைநீர் கங்கையான், கங்காதரன் என்றும், சடை முடியை உடைய காரணத்தால் ஜடாதரன் என்றும், பிறைச்சந்திரனைச் சூடிய காரணத்தால் சந்திரசேகரர் என்றும், நாகங்களை யணிந்ததால் நாகாபரணன் என்றும், ஐந்து முகங்களை கொண்டதால், ஐம்முகன் என்றும், ஆலகால விடத்தை உண்டதால் நீல கண்டன் என்றும் பல திரு நாமங்களைப் பெற்ற பெருமை எம் ஈசனுக்கு உண்டு.

எம்பிரானுக்குப் பிடித்தமானபத்திரம் வில்வம், மலர்கள் வெள்ளெருக்கு, கொன்றை, ஊமத்தை என்பனவாம், புலித்தோல், மான், மழு, சூலம், உருத்திராட்சம், இடபவாகனம், நீறுபூசிய பவள மேனி, எம்பிரானது வசீகரத் தோற்றத்தில் காணப்பெறுபவை. காமனை எரித்த காரணத்தால் காமாரி என்றழைக்கப் பெறும் எம் ஈசன், திரிபுராரி, முப்புரமெரித்தோன், நடராஜன், ஏகபாதன், அர்த்த நாரி, பிட்சாடனர் என்னும் நாமங்களையும் தனது பல்வேறு மூர்த்தங்களாலும், திருவிளையாடல்களாலும் பெற்றுள்ளார்.

சிவனாரின் பல்வேறு மூர்த்தங்கள் மூலம், ஈசனது தத்துவத்தையும் கோட்பாடுகளையும் விளங்கிக் கொள்ளலாம். சிவனாரது நெற்றிக் கண் வெறும் ஊனக் கண் அன்று அஃது ஞானக் கண் ஆக அமைகின்றது. சிவன் ஞான சொரூபி. ஈசன் தனது நெற்றிக் கண்ணை திறந்து, மன்மதனை – காமனை எரித்த சம்பவம் ஒரு உண்மையை உணர்த்தி நிற்கின்றது. சிவனார் ஞானக் கண்ணைத் திறந்தால் உலகமே அழிந்து போகும். ஞானக் கண் திறக்கப் பெறுபவர்களுக்கு காமம் அற்றுப்போகும். யாவும் தெய்வ சொரூபமாகத் தோன்றி சிவஞானத்தோடு கூடிய பக்தி தோன்றும். ஈசன் தான் முக்கண்ணனாகத் தோன்றி, மக்களும் முக்கண்ணராக அமைய வேண்டும் என்ற உண்மையை உணர்த்தி நிற்கின்றார்.

திரிபுரதகனம் எம்பிரானது திருவிளையாடல்களில் ஒன்றாகும். – தாரகாட்சன், கமலாட்சன் வித்தியுன்மாலி, ஆகிய மூன்று அசுரர்களது முப்புரங்களையும் தன் புன் முறுவலால் எரித்து, சாத்துவம், ரஜஸ், தமஸ், ஆகிய மூன்று குணங்களையும் ஒடுக்கி விட்டால், ஜீவன் முத்தி அடையும் பாக்கியம் கிட்டும் என்னும் உண்மையை புரிய வைத்துள்ளார். இப்பாக்கியம் பெற ஆன்மா இறையைச் சார்ந்திருத்தல் அவசியம்.

இறைவனது உருத்திரன் என்னும் நாமம் உயிர்களை கோபிப்பவன், அழிப்பவன் என்று பொருள்படும். தீயவற்றை அழித்தாக வேண்டும். இஃது உருத்தினாரது தொழில். சங்காரத்தால் பழுதுபட்ட உடல்கள் அழுகின்றன. இதற்குப் புறச்சின்னம் மயானம், இதனால் மயானம் உருத்திர பூமி எனப்படுகின்றது. உருத்திரனுக்கு உகந்த இடம் சுடுகாடு. சாந்த சொரூபியாகவும் விளங்கும் சிவனாருக்கு சில சந்தர்ப்பங்களில் உருத்திர மூர்த்தம் எடுக்கும் நிர்ப்பந்தமும் ஏற்படுகின்றது. மயானத்தில் சுடலைப்பொடிபூசி எலும்பு மாலை அணிந்து, கபாலம் ஏந்தி, மரணத்தோடு விளையாடுபவன் உருத்திரன் "காசியில் இறக்க முத்தி" என்பர். காசிக்கு மகா ஸம்சானம் என்றும் ஒரு பெயருண்டு.

கங்காதார மூர்த்தமும் சிவமூர்த்தங்களுள் ஒன்றாகும். வானிலிருந்து, பூவுலகத்துக்குப் பாய்ந்து வந்த கங்கைப் புனலைப்பரமேஸ்வரன் தனது. ஜடா முடியில், தாங்கி, அதன் வேகத்தை தணித்தருளினார். கங்கையின் வேகம் தணிந்ததும், அப்புனல், பூமிக்கு அனுப்பப்பட்டு, பூமியை வளமாக்கப் பயன்பட்டது. ஈசனது அருள் பூமிக்குப் பயன்பட்ட, பயன்படும் உண்மை இதனால் பயன்படுகின்றது. அதே நேரம் எம்பெருமானது சிரசிலேயிருந்து வடியும் கங்கை, யோகியர்களது, உச்சந்தலையிலிருந்து வடியும்,

அமிர்த தாரையையும், குறித்து நிற்கின்றது. இதனால் அவர்கட்குப் பரமானந்தம் கிட்டுகின்றது. அமிர்த தாரையின் சின்னமாக, கங்கை பூமியை வளமாக்க, ஈசனும் கங்காதரன் ஆனார்.

''திரிலோக குடும்பி' யாகவும் சிவனார் வாழ்ந்து காட்டியுள்ளார். இந்நிலையில் ஈசன் ஒரு குடும்பஸ்தராகின்றார். இந்நிலை உணர்த்தும் உண்மை ஈசனும் ஒரு நிலையில், ஒரு குடும்பஸ்தர் தான். இஃது ''குடித்தனமோ, துரைத்தனமோ அறியோம் ''–உலகெலாம் அவரது குடும்பம், அதன் முறை பிறழாத நடைமுறையே அவரது ஆட்சி – சிதறக் கூடிய உலகம் அவரது ஆட்சியின் சிறப்பு. கைலையங்கிரியிலே, ஈசன் பரிவாரங்கள் சூழ, வீற்றிருக்கின்றார். தூங்குமனை வாழ்க்கையின் சிறப்பு, பொறுப்பு, பேறு, பண்பு சித்தரிக்கப்படுகின்றது. பேறுகளில் மக்கட் பேறு தலைசிறந்தது. ஞானக்களஞ்சியமான கணபதியும், அறிவும் ஆற்றலும் அழகும் இளமைத்துடிப்பும் கொண்ட பால முருகனும் ஐயனின் குழந்தைகளாக அங்கு அமர்ந்திருக்கின்றனர். இந்நிலை குடும்பச் சிறப்பை உணர்த்தி நிற்கின்றது.

எதிரிலே இவர்களுக்கு உரிய வாகனங்கள் காணப்படுகின்றன. சிவனாரது வாகனமாகிய இடபம் ஒரு புறம் அடக்கமாக அமர்ந்துள்ளது. மறு புறம் அன்னையின் வாகனமான சிங்கம் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. மூத்த மைந்தனின் மூஷிகம் ஒருபுறம் விளையாடுகின்றது. அழகு மயில் முருகனோடு குலாவி நிற்கின்றது. சிவனாரின் மார்பில் பாம்பு ஊர்கின்றது.

ஐதிகத்துக்கு உட்பட்டவர்கள் இக்காட்சி கண்டு பக்தி வயப்பட்டு ''அரஹரா'' என்று ஆரவாரித்து திருப்தி அடைகின்றனர். ஆனால் மற்றுமொரு கோணத்தில் பார்ப்பவர்க்கு, இக் காட்சியை ஒட்டி பல வினாக்கள் எழலாம். காளையும், காளையைக் கொன்று தின்னும் சிம்மமும் பக்கம் பக்கம் அமர்கின்றன. அருகே துள்ளித்திரியும் எலிமீது பாம்பு திடீரெனப் பாயலாம். மூத்த கணபதியும், இளையவன் பால முருகனும் சண்டை செய்யலாம்; இது சாதாரண, வாழ்க்கையின் நியதி, விவகாரம். இக்கைலைக்காட்சியில் மட்டு மல்லாது இயற்கையிலுமே முரண்பாடு உண்டு. இதனையே சிவனது குடும்பக் காட்சி சித்தரிக்கின்றது. இவற்றையெல்லாம் சமாளிக்க, அனுசரிக்க ஒருவனுக்கு பலமான உறுதிப்பாடு வேண்டும்; இஃது உடையவனே தக்கான் என்றும் அற்றவன் தகவிலான் என்றும் கணிக்கப்படுவான். இவற்றின் மத்தியில் மனிதனுக்கு இல்லறம் நல்லறமாக அமைய வேண்டும், இதனையே பரமசிவனது குடும்பம் எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

ஈசனது வாகனங்கள் உணர்த்தும் தத்துவத்தை நோக்கின் சகல உயிர்களுக்கும் வாகனமாக அமைபவன் ஈசன், எனவே உயிர்கள் அணைத்துக் காட்டும் கோட்பாடுதனை இந்த வாகனங்கள் உணர்த்தி நிற்கின்றன. ஈசனது சடையிலே சந்திரனும், பாம்பும் – என்றும் சந்திரனுக்கும் பாம்புக்கும் பகை. சந்திரனை விழுங்க, ராகு, கேது என்னும் பாம்புகள் காத்திருக்கின்றன என்பது ஐதிகம். ஆனால் சிவனாரது சடாமுடியில் அமர்ந்திருக்கும் சந்திரனும் பாம்பும் பகை மறந்து பண்புற்றிருக்கின்றன. அவற்றைச் சிவமயமாய்க் காணும் போது வேறுபாடுகள் அற்றுப் போகின்றன.

இந்தவகையில் சிவஞானம் பெற்றவர்க்கு பாம்பும், பசுவும், சிங்கமும் கருடனும் ஒன்றே. ஐம்பூதங்களில் அனலையும், புனலையும் ஐயன் தன்னிடம் பொலிய வைத்துள்ளார். உலகை சிவனோடு இணைத்துப் பார்க்கும் போது அது மங்கலமாகக்காட்சி தருகின்றது. சிவன் என்றாலே மங்கலமானவன் என்றும் பொருள் கொள்ளலாம். இவ்வுண்மையைப் புரிந்து உணர்ந்து அறிந்து வாழ்பவனுக்கு எல்லாமே நலன் பயக்கும் யாவுமே மங்களமாக அமையும்.

***குனித்த புருவமும் கொவ்வைச்செவ்வாயில் குமிண்சிரிப்பும்***
***பனித்தசடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்***
***இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்***
***மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே –அப்பர் சுவாமிகள்***

## இரத்மலானை மாணவர் விடுதி

போர்ச் சூழ்நிலைகள் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பெற்றோர்களை இழந்தும், பாதிக்கப்பட்டுமுள்ள பிள்ளைகளின் நலன் கருதி அகில இலங்கை இந்து மாமன்றம் இரத்மலானையில் ஓர் இலவச விடுதியை ஆரம்பித்து நடத்திவருவதை உங்களில் பலர் அறிந்திருப்பீர்கள். 1998ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆண் பிள்ளைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட இவ்விடுதி பதினான்கு ஆண்டுகளை நிறைவுசெய்திருப்பது சிறப்புக்குரிய விடயம். அதனைத் தொடர்ந்து 2002ம் ஆண்டு ஜூன் மாதத்தில் பெண் பிள்ளைகளுக்காக `சக்தி இல்லம்' என்ற பெயரில் மற்றுமொரு விடுதியும் ஆரம்பிக்கப்பட்டது.

மாமன்றத்தின் பராமரிப்பில் இயங்கிவரும் இவ்விரு விடுதிகளிலும் 150க்கும் மேற்பட்ட பிள்ளைகள் தங்கியிருக்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும் இரத்மலானை இந்துக் கல்லூரியில் கல்வி பயில்வதற்கான வசதிகளுடன், மேலதிகமாக தனிப்பட்ட வகையில் கல்வி போதிப்பதற்காக பிரத்தியேக வகுப்புகளையும் மாமன்றம் ஏற்பாடு செய்துள்ளது. விடுதியில் மாதந்தோறும், ஒரு விடுமுறை நாளில் அந்த மாதத்தில் பிறந்த பிள்ளைகளது பிறந்தநாளும் கொண்டாடப் பட்டுவருகிறது.

இவ்விடுதியில் தங்கியிருக்கும் பிள்ளைகளுக்கு நீங்கள் அனைவரும் தாராளமாக உதவலாம். பிள்ளைகளுக்கு தினந்தோறும் உணவு, சிற்றுண்டிகளை வழங்குவதற்காக உங்கள் பங்களிப்பையும் எதிர்ப்பார்க்கிறோம்.

இதற்கான நன்கொடை விபரம் வருமாறு.

| விபரம் | சாதாரணம் | விசேடம் |
|---|---|---|
| காலை உணவு | 12,500/= | 15,000/= |
| மதிய உணவு | 17,500/= | 20,000/= |
| இரவு உணவு | 17,500/= | 20,000/= |
| மாலைதேநீர்/சிற்றுண்டி | 12,500/= | 15,000/= |

உணவுக்கான நன்கொடை அல்லது மாணவர்களுக்கு உப உணவுப்பொருட்கள், பால்மா, உடுப்புவகைகள், மருந்து வகைகள் மற்றும் விடுதிக்குரிய பாவனைப் பொருட்கள், அத்தியாவசியப் பொருட்கள் போன்றவற்றை நன்கொடையாக தந்து உதவ விரும்புவோர் மாணவர் விடுதி மேற்பார்வையாளருடன் தொடர்பு கொள்லாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 011-2625588. அகில இலங்கை இந்து மாமன்றத் தலைமையகத்துடனும் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெறலாம்.

தொலைபேசி இல. 011-2434990
தொலை நகல் இல. 011-2344720

# அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொங்கல் செய்தி

## விடியலை எதிர்பார்க்கும் தமிழ் மக்கள்

மலரும் தைப்பொங்கல் திருநாள் தமிழர் வாழ்வில் நல்லதோர் விடியலைத்தரவேண்டும் என்ற எண்ணமே மனமெங்கும் பொங்கிநிற்கிறது. தமிழ் மக்களின் பண்பாடு, பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் தனிப் பெரும் விழா "பொங்கல் விழா" பண்டுதொட்டு தமிழ் மக்கள் இத்திருநாளில் இவ்வுலகில் உயிர்கள் வாழத் துணைபுரியும் சூரியனை தெய்வமாக வழிபட்டும் உழவர் பெருமக்களின் உழவுத் தொழிலுக்குவந்தனை செய்தும் வாழ்ந்து வந்தனர். துன்பமெல்லாம் நீங்கும் நன்நாளாகவும், அறுவடைபொங்கல் விழாவாகவும் இதனை கோலாகலமாகக் கொண்டாடி வந்தனர். உறவினர், நண்பர்கள், குடும்பத்தாருடன் கூடிக்குலாவி கதைபேசி வாழ்ந்த அந்த இனிய நினைவுகள்தான் நிழலாடுகிறதே தவிர, வயலும், வயல் சார்ந்த இடமான மருதநிலப்பரப்பை-அதிகமாக நம்பிவாழ்ந்த மக்கள் இடம் பெயர்ந்து, இன்னலுற்று, இருப்பை இழந்து ஏக்கமுற்ற நிலையில் ஓர் நல்ல விடியலையே எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

புதிதாக வயலிலிருந்து வந்த செந்நெற்பச்சையரிசியும், கரும்பின் சர்க்கரையும், பசும்பாலும் சேர்த்து பொங்கிச் சூரியன் உதயமாகும்பொழுது படைத்து வரவேற்பது தமிழனின் வாழ்வியல் மரபு. செழுமையையும், இனிமையையும் குறிக்கும் பால், பழம், கரும்பு, இளநீர், மஞ்சள், பயறு என பொங்கலுடன் படைத்து சூரியவணக்கம் செய்து படைத்த பொங்கலையும், உணவுவகைகளையும் உற்றார், உறவினர், அயலவர்கள் என இன பந்துக்களுடன் கூடி பகிர்ந்து உண்டவை வரலாறு.

இந்தப் பசுமையான நினைவுகள், நிஜமாகவேண்டும். அந்த நம்பிக்கை இனியும் வலுவிழந்து போகாமல் இருக்கவேண்டும். பைப்பொங்கல் ஒரு தெய்வீக அர்ப்பணிப்புத்தினமாகும். மருதநிலத்து மக்கள் கையேந்தி நிற்கும் நிலை மாறவேண்டும். திக்கற்றவனுக்கு தெய்வம் தான் துணை என்ற மூதுரை தெரிந்தவர்கள் மாத்திரமல்ல கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்ற நம்பிக்கையோடு வாழும் தமிழ் மக்களின் எண்ணங்கள், அபிலாசைகள் நிறைவேறவேண்டுமென்பதே மாமன்றத்தின் விருப்பம். தமிழர் திருநாளில் இறைவழிபாட்டில் ஈடுபட்டு இத்திருநாள் அமைதி, சமாதானம், சாந்தி, நல்வாழ்வு தரவேண்டிநிற்போம். வரும் காலம் வளமான காலமாக இருக்க அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருவடிகளை உறுதிவுடன் பற்றிக்கொள்வோமாக.

இச்சந்தர்ப்பத்தில் இந்நாட்டு இந்து மக்களின் சார்பாக நாங்கள் பின்வரும் பகிரங்க வேண்டுகோள்களைவிடுக்க விரும்புகிறோம்.

1. இந் நாட்டில் எங்களின் சகோதர சகோதரிகள் பலர் இன்னும் அகதிகளாக வாழ்ந்து வரும் நிலைமை உடன் மாற்றப்படவேண்டும். தங்கள் சொந்த இல்லங்களில் இந்நாட்டின் பிரஜைகளாக சகலசுதந்திரங்களுடனும் வாழ அவர்களுக்கு இத் தை பிறந்ததும் வழிபிறக்கவேண்டும்.
2. தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளைத் திருப்திப்படுத்தும் அரசியல் தீர்வு இனிமேலும் தாமதிக்காது வழங்கப்படவேண்டும். தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் அரசு நடத்தும் பேச்சுவார்த்தைகள் தை மாதத்தில் நிறைவு செய்யப்பட்டு ஒரு சுமுகமான முடிவு எடுக்கப்படவேண்டும். அந்த முயற்சி வெற்றிபெற தமிழ் அரசியற் தலைவர்கள் யாவரும் தன்னலம் மறந்து ஒற்றுமையாகச் செயற்படவேண்டும் என மீண்டும் வலியுறுத்த விரும்கிறோம்.
3. கீரிமலை சிவபூமி அறநிதியத்தின் காணியில் பத்து அறைகளும் அன்னதான சாலையும் கொண்ட மடத்தை அகில இலங்கை இந்து மாமன்றம் நிர்மாணித்து வருகிறது. பிறக்கும் தை மாதத்தில் இது நிறைவேற்றப்படும். இந்தப் புனித பணிக்கு தங்கள் மறைத்த குடும்பத் தலைவரின் பெயரினால் அல்லது ஒரு குடும்பத்தின் பெயரால் ஓர் அறையை நிறுவி உதவுமாறு அக்கைவ்காரியத்தைச் செய்யகூடிய குடும்பங்களை அன்பாக அழைக்கிறோம்.

## மாமன்ற நடுத்தீர்ப்பு நிலையம்

ஓர் இந்து ஆலயம் அல்லது இந்து சமய நிறுவனம் அவற்றின் நம்பிக்கைப் பொறுப்பு தொடர்பாக ஏதேனும் பிணக்குகள் இருப்பின் அப்பிணக்கினை ஆற்றுப்படுத்தும் நோக்கத்திற்காக அகில இலங்கை இந்து மாமன்றம் "நடுத்தீர்ப்பு நிலையம்" ஒன்றினை நிறுவியுள்ளது என்பதனை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

அகில இலங்கை இந்து மாமன்ற நடுத்தீர்ப்பு விதிகளுக்கமைவாக விசாரணை நடத்தப்பட்டு நடுத்தீர்ப்பு வழங்கப்படும். இது சம்பந்தமான விதிமுறைகளோ அல்லது வேறு விளக்கங்களோ தேவைப்படுவோர் அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் நேரிலோ, கடிதமூலமோ தொடர்பு கொள்ளலாம். மாமன்ற தொலைபேசி 011-2434990, தொலைநகல் 0112344720 எண்களிலும் தொடர்பு கொள்ளலாம்.

இதன் பயனாக இந்து ஆலயம், இந்து சமய நிறுவனங்கள் தமது பிணக்குகளை நீதிமன்றங்களுக்கு எடுத்துச் செல்லவேண்டிய அவசியமில்லை. இந்து சமய அறிவுசார்ந்த நடுவர்கள் மூலம் இப்பிணக்குகள் விரைவாகவும் இலகுவாகவும் தீர்த்துவைக்க முடியும்.

# அகில இலங்கை இந்து மாமன்ற பொங்கல் விழா நிகழ்வுகள்





மாமன்றத்தின் வாசலில் பொங்கலின் பின்னரான இறைவணக்கம்.





மாமன்றத்தின் பிரார்த்தனை மண்டபத்தில் அருள்பாலித்திருக்கும் சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு இடம்பெற்ற பூஜை வழிபாடுகளின் பின்னரான தீப தரிசனம்.







பொங்கல் விழாவுக்கு வருகை தந்தோரில் ஒரு பகுதியினர்



பிரசாதம், காளாஞ்சி பெறுவதைக் காணலாம்.



# பெரியபுராணம் உணர்த்தும் பக்திநெறி

ஆ. பிரசாந்
சைவ வித்தகர் பயிற்சிநெறி மாணவன்
மாமன்ற யாழ் பணிமனை

எல்லாம் வல்ல இறைவனால் அடியெடுத்துக் கொடுக்கப்பட்டு பாடப்பட்டது திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம். இந்நூல் திருத்தொண்டர்தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றை முதல் நூலாகக் கொண்டு இயற்றப்பட்ட வழி நூலாகும். இந்நூலுள் அறுபத்து மூன்று நாயன்மார் வரலாறும், ஒன்பது தொகையடியார்கள் பற்றிய குறிப்பும் உள்ளன. சேக்கிழார் சுந்தரரைத் தலைவராகக் கொண்டு அவர் வரலாறு கூறத் தொடங்கி, இடையில் திருத்தொண்டர் தொகை பாடிய நிகழ்ச்சி வரும்போது அத்தொகையில் கூறப்பட்டுள்ள அடியார்களின் வரலாறுகளை கூறியுள்ளார்.

சேக்கிழார் வர்ணிக்கும் நாயன்மார்கள் முக்தியைவிட பக்தியையே பெரிதாக நினைத்தனர். சிவனையன்றி வேறு எதனையும் சிந்தையில் கொள்ளா மாண்பினர். தமிழில் சிறந்து விளங்கும் பக்திக்கு ஒரு நூல் பெரியபுராணம் என்பதில் ஐயமில்லை. அதனால்தான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை "பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவல" என்று சேக்கிழாரைப் பாராட்டுகிறார். மாதவச் சிவஞான முனிவர் "எங்கள் பாக்கியப் பயனாகிய குன்றை வாழ் சேக்கிழாரின் அடி சென்னயிருந்தோம்" என சேக்கிழாரைத் தெய்வமாகவே கருதி வழிபடுகிறார்.

சுந்தரர் – பரவையார் காதலை விளக்கும் போது சேக்கிழாரின் பக்தியின் மேன்மையைக் கண்டு மகிழலாம். பரவையாரை முதன் முதலாகப் பார்த்தவுடன் தன் உள்ளத்தை பறி கொடுத்தார்.

> *"கற்பகத்தின் பூங்கொம்போ? காமன்தன் பெருவாழ்வோ?*
> *பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல் சுமந்து*
> *விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ?*
> *அற்புதமோ? சிவனருளோ? அறியேன் என்றதி சயித்தார்"*

என்கிறார் சேக்கிழார். சுந்தரர்பால் ஆராக்காதல் கொண்டு பரவையாரும் அவரையே நினைந்து பாடுகிறார்.

> *"முன்னே வந்து எதிர் தோன்றும் முருகனோ? பெருகளியால்*
> *தன்னேரில்லா மாரனே? தார்மார்பின் விஞ்ஞையனோ?*
> *மின்னேர் செஞ்சடை அண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ?*
> *என்னே! என் மனந்திரிந்த இவன்யாரோ என நினைந்தார்"*

இவ்வாறு காதலர் இருவர் தம்முன் ஒருவரை ஒருவர் நினைந்து உருகும் நிகழ்ச்சியில் கூடப் பக்தியின் மேன்மையை அமைத்து பாடியுள்ள திறம் நினைந்து இன்புறத் தக்கது.

ஆண்டவன் மீது அன்பும், பக்தியும் பெறுகின்ற இடங்களில் தீய எண்ணங்களுக்கு இடமில்லை. அநியாயங்களும் தீமைகளும் நிகழ்கின்ற இன்றைய காலச் சூழலில் பக்தியானது மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு பரம்பொருளை அடையும் முயற்சியாக இருக்கும் தருணத்தில் அங்கு அநீதி நிகழ்வது தவிர்க்கப்படுகிறது. அவ்வழியே வாழ்ந்த பெரியோர்களின் வாழ்வியல் முறைகள் உயர்ந்த பக்திக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்வதை புராணங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

## அகில இலங்கை இந்து மாமன்றம் அங்கத்துவம் சம்பந்தமான அறிவித்தல்

**நிறுவன உறுப்பினர்கள்**

இலங்கையிலிருக்கும் இந்து நிறுவனங்களும், ஆலய தர்மகர்த்தாக்களும் அகில இலங்கை இந்து மாமன்றத்தில் அங்கத்துவம் பெறலாம். அங்கத்துவம் பெற விரும்பும் நிறுவனங்களும் தர்மகர்த்தாக்களும் மாமன்ற தலைமையகத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமோ தொடர்புகொண்டு அதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம்.

**இணை உறுப்பினர்கள்**

அகில இலங்கை இந்து மாமன்றத்தில் இணை உறுப்பினராக விரும்பும் தனிநபர்கள் மாமன்ற தலைமையகத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமோ தொடர்புகொண்டு அதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு

**அகில இலங்கை இந்து மாமன்றம்**
91/5 சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை
கொழும்பு 2.
தொலைபேசி 2434990
தொலைநகல் : 2344720

## திருவாதிரை

ஆருத்ரா நட்சத்திரத்திற்கு சிவனே அதிபதி பதஞ்சலி முனிவரும், வியாக்ரபாதரும் அரனின் ஆனந்தத் தாண்டவ தரிசனத்தை தில்லையில் கண்டது இத்தினத்தில் தான். பிட்சாடனராகத் தோன்றி தாருகாவனத்து முனிவர்களின் செருக்கை அடக்கிய சிவன் அவர்கள் வேண்டியதற்கிணங்க தாண்டவம் புரிந்ததும் இத்தினத்தில் தான்.

இந்நாளில் சிவனுக்கு நடக்கும் அபிஷேக ஆராதனைகளைக் காண்பவர்களுக்கு கிடைக்க கூடிய பாக்கியங்களுக்கு அளவே இல்லை.

# சிந்தனை கதைகள்



சிறுவர் ஒளி

## இறைவனின் படைப்பு

இறைவன் உலகை படைக்கும் போது "இதனை நீங்கள் எப்படி உருவாக்குகிறீர்கள்?" என்று கேட்டது ஒரு தேவதை. "எதற்காக நீங்கள் இதைச் செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்றது இரண்டாவது தேவதை. "நானும் எதாவது உதவி செய்யட்டுமா" என்றது மூன்றாவது தேவதை. "இவற்றின் மதிப்பு என்ன?" என்றது நான்காவது தேவதை ஐந்தாவதாக வந்த ஒரு தேவதை இறைவனின் படைப்பைக் கண்டு மகிழ்ந்தது. இறைவன் இந்த தேவதைகளை பூமிக்கு அனுப்பி வாழ்ந்து பார்க்க அனுப்பினார். முதல் தேவதை விஞ்ஞானி. இரண்டாவது தேவதை தத்துவமேதை. மூன்றாவது தன்னலமற்ற தியாகி. நான்காவது தேவதை வியாபாரி. ஐந்தாவதாக வந்த தேவதை ஞானியாக படைக்கப்பட்டார். கேள்வி கேட்காமல் இறைவன் படைப்பை ஏற்றுக்கொண்டதால் ஐந்தாவது தேவதையை ஞானியாகப் படைத்தார் இறைவன்.

## மனம் என்கிற மிருகம்!

குரு தனது சீடர்களிடம், "மனதை அடக்க வழி என்ன?" என்று கேட்க, யாருக்குமே பதில் தெரியவில்லை. இறுதியில் நானே சொல்கிறேன். மனம் என்ற யானையின் கால்களுக்கு கட்டுப்பாடு என்ற சங்கிலியைப் போட்டு நாம் அடக்க வேண்டும். மனம் என்கிற குதிரைக்கு ஒழுக்கம் என்ற கடிவாளம் போடவேண்டும். ஆமையானது எப்படி தன் உறுப்புகளை ஓட்டுக்குள் மறைத்துக் கொள்கிறதோ, அதேபோல் நாமும் நமது ஐந்து இந்திரியங்களை அடக்கினால், நமக்கு நல்வாழ்வு கிடைக்கும்" என்று சொல்ல, சீடர்களும் ஐயம் நீங்கி, மனதை ஒரு நிலைப்படுத்தி தியானத்தில் ஈடுபட்டனர்.

## மூன்று பொம்மைகள்

ஒரு துறவி, தன் சீடர்களுக்கு மனிதர்களின் குணங்கள் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். இனிமையான குணம் கொண்ட நல்லவர்கள், தீயவர்கள், சுயநலவாதிகள் என்று மூவகை குணங்கள் கொண்டவர்கள் மனிதர்கள் என்றார். "விளக்கமாகச் சொல்லுங்கள் குருவே!" என்று கேட்டனர் சீடர்கள்.

"நல்லவர்கள் சர்க்கரை பொம்மை போன்றவர்கள். அதை நீரில் போட்டால் நீரோடு கலந்து நீரை இனிப்பாக்கிவிடும். மற்றவர்களிடம் இனிமையாகப் பழகி, தாமும் இனிதாக வாழ்பவர்கள். அடுத்து, களிமண் பொம்மை போன்றவர்கள் தீயவர்கள். அதை நீரில் போட்டால், தன் உருவையும் இழந்து நீரையும் மண்ணாக்கிவிடும். தானும் கெட்டு மற்றவர்களையும் கெடுத்துவிடுபவர்கள் தீயவர்கள். பஞ்சுப் பொம்மை போன்றவர்கள் சுயநலவாதிகள். நீரில் இதைப் போட்டால் நீரை முழுவதும் உறிஞ்சிவிடும். மற்றவரைச் சுரண்டி வாழ்பவர்கள் இந்த பொம்மையைப் போன்றவர்கள்" என்று விளக்கினார், குரு. சீடர்கள் புரிந்து கொண்டார்கள்.

## சொல் ஆற்றல்

ஞானி ஒருவர், "சொற்களுக்கு ஆற்றல் உண்டு. அதனால் பேசும்போது எச்சரிக்கை உணர்ச்சியுடன் பேசவேண்டும். பேசுவது நடக்கும் என்று நம்ப வேண்டும். அது அப்படியே நடக்கும்" என்றார். கூட்டத்தில் இருந்த ஒருவன் எழுந்து, "சொற்களுக்கு ஆற்றல் உண்டு என்கிறீரே.. மூலப்பிரதியைப் பார்க்கவும் "அறிவில்லாத முண்டமே! பேசாமல் உட்கார்!" என்றார்.

இதைச் சற்றும் எதிர்பாராத அவன், கோபத்துடன் ஞானியை நெருங்கினான். அவனைப் பார்த்த ஞானி, "என்னை மன்னித்துவிடு! நீ பேசியதைக் கேட்டு எரிச்சலால் அப்படிப் பேசினேன்." என்றார். கோபமாக வந்த அவன், அமைதி ஆனான். உடனே ஞானி அவனைப் பார்த்து, "முதலில் நான் பேசியதைக் கேட்டு கோபத்தின் உச்சிக்குப் போனாய்....." அடுத்ததில் நீ அமைதி ஆனாய்.. சொற்களுக்கு ஆற்றல் உண்டு என்பதை இப்போதாவது நம்புகிறாயா?" எனக் கேட்டார்.

## எது கடினம்?

ஓர் ஊரில் ஒரு செல்வந்தன் இருந்தான். அவன் மிகவும் ஏழையாக இருந்து, மிகவும் சிரமப்பட்டு இந்த நிலையை அடைந்தவன். ஆனால் நாளடைவில், பணக்கார வாழ்க்கை அவனிடம் ஆணவத்தையும், செருக்கையும் அதிகப்படுத்திவிட்டது. இதையெல்லாம் கவனித்து வந்த மகான் ஒருவர், அவனை அழைத்து, ஒரு பெரிய பாறாங்கல்லைக் காட்டி அதனை மலை உச்சிக்குக் கொண்டு வருமாறு கூறினார். அவனும் மிகவும் கஷ்டப்பட்டு அந்தப் பாறையை மலைமீது ஏற்றினான். உடனே மகான் அந்த மலைமீதேறி அந்தப்பாறையைக் கீழே உருட்டிவிட்டார். ஆத்திரமடைந்த அவன், "என்ன சுவாமி! உமக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா...?" என்று கத்த ஆரம்பித்தான்.

அதற்கு மகான், "இந்தப் பாறையைப் போல் தான் உன் வாழ்க்கையும்... முன்னேறுவதுதான் கஷ்டம். முன்னேறியவர்கள் தவறிக் கீழே விழுவதற்கு அதிக நேரம் ஆகாது என்பதைக்காட்டவே அந்தப் பாறையைக் கீழே உருட்டிவிட்டேன்" என்றார்.

மகானின் செயலில் ஆழ்ந்த உண்மை இருப்பதை அவன் புரிந்து கொண்டான். திருந்தி வாழ்ந்தான்.

நன்றி - குமுதம் பக்தி

# விடுதிக்கான அன்பளிப்பு

### ஒக்டோபர் 2011

| | |
|---|---|
| 1.திருமதி.சுபாசினி | 5000.00 |
| 2.Dr. பிரதீப்குமார் | 12500.00 |
| 3.செல்வி.சோபா பரமசிவம் | 17500.00 |
| 4.திருமதி.S.கிருபானந்தன் | 14875.00 |
| 5.திரு.J.உதயகுமார் | 20000.00 |
| 6.திரு.N.நகுலேஸ்வரன் | 20000.00 |
| 7.திரு.C.K.சகாதேவன் | 5000.00 |
| 8.திரு.S.இராமச்சந்திரன் | 3000.00 |
| 9.திருமதி.B.சிவநாதன் | 100000.00 |
| 10.திரு.K.அரவிந்தன் | 20000.00 |
| 11.செல்வி.S.சுப்ரமணியம் | 20000.00 |
| 12.T.சிறிகரன் | 20000.00 |
| 13.K.முரளிதரன் | 20000.00 |
| 14.செல்வி.சஹானா &செல்வன்.சஞ்சீவ் | 30000.00 |
| 15.திரு.ரங்கநாதன் | 20000.00 |
| 16.திரு.S.குலசபாநாதன் | 5000.00 |
| 17.திரு.S.ஜனகன் | 20000.00 |
| 18.திரு.L.நந்தகுமார் | 20000.00 |
| 19.திரு.V.கணேசாநந்தன் | 20000.00 |
| 20.திரு.சகிஸ்னா | 40000.00 |
| 21.ஸ்ரீ முத்துமாரிஅம்மன் தேவஸ்தனம் | 10000.00 |
| 22.செல்வன்.சாயேன் யோகேஸ்வரன் | 23000.00 |
| 23.திருமதி.S.சுந்தரவதனன் | 100,000.00 |
| 24.செல்வி.செல்வி சோமசுந்தரம் | 20,000.00 |
| 25.திருமதி.C.ரஜேந்திரா | 20,000.00 |
| 26.திருமதி.K.சிவஞானசெல்வம் | 20,000.00 |
| 27.திரு.எஸ்.திருக்குமரன் | 20,000.00 |
| 28.திரு.ஜேயலால் ஆறுமுகம் | 20,000.00 |
| 29.திரு.G.R.பெனாண்டோ | 20,000.00 |
| 30.திருமதி.கமலம் பாலசுப்ரமணியம் | 20,000.00 |
| 31.S.வற்சன் குடும்பம் | 20,000.00 |
| 32.திருமதி.ஜெகநாதன் | 20,500.00 |
| 33.திரு.ஸ்ரீ.ஸ்ரீஸ்கந்தராசா | 20,000.00 |
| மொத்தம் | 776,375.00 |

### நவம்பர் 2011

| | |
|---|---|
| 1.திரு.திருக்குமாரசிங்கம் | 20,000.00 |
| 2.திரு.R.பேரின்பநாயகம் | 20,000.00 |
| 3.திரு.A.ஸ்ரீனிவாசன் | 20,000.00 |
| 4.திரு&திருமதி. ஸ்ரீனிவாச | 20,000.00 |
| 5.திருமதி.சுபா கணேசன் | 20,000.00 |
| 6.திரு.C.K.சகாதேவன் | 5,000.00 |
| 7.திரு.S.ராமச்சந்திரன் | 3,000.00 |
| 8.Dr.S.பொன்னுத்துரை | 20,000.00 |
| 9.திருமதி.T.அனோஜன் | 10,000.00 |
| 10.செல்வி.உப்சராதசெல்வன் அபிசேக் | 10,000.00 |
| 11.Dr.ஜனார்தனன் | 20,000.00 |
| 12.Dr.ஆதித்தன் | 20,000.00 |
| 13.திருமதி.நடராஜா | 36,000.00 |
| 14.திரு.S.குலசபநாதன் | 5,000.00 |
| 15.செல்வி.சசிரேகா பரமசிவம் | 40,000.00 |
| 16.திருமதி.ரேணுகா பஞ்சாட்சரவேல் திருமதி. சாரதாசிவநாதன் | 300,000.00 |
| 17.ஐங்கரன் கிருபாகரன் | 20,000.00 |
| 18.Dr.சிவதொண்டன் | 20,000.00 |
| 19.திரு.S.ஸ்ரீகுமரன் | 15,000.00 |
| மொத்தம் | 624,000.00 |

### டிசம்பர் 2011

| | |
|---|---|
| 1.செல்வி.தனுஜா தயாபரன் | 20,000.00 |
| 2.திரு,திருமதி.சிவலோகநாதன் | 20,000.00 |
| 3.Dr.S.செல்லையா | 20,000.00 |
| 4.திரு.பிரபாகரன் சண்முகராஜா | 20,000.00 |
| 5.திரு.R.யோகநாதன் | 20,000.00 |
| 6.திரு.M.தேவராஜ்பிள்ளை | 20,000.00 |
| 7.திருமதி.ராஜேஸ்வரி ஆறுமுகதஸ் | 5,000.00 |
| 8.திரு.C.K.சகாதேவன் | 5,000.00 |
| 9.செல்வி.மனோகரி | 24,650.00 |
| 10.திருமதி.இந்துமதி வரதராஜன் | 15,975.00 |
| 11.செல்வி.விதுலி ராஜதுரை | 20,000.00 |
| 12.திரு.T.சுப்ரமணியம் | 20,000.00 |
| 13.திருமதி.தயாளினி | 15,000.00 |
| 14.திரு.☒ .பாலேந்திரன் | 20,000.00 |
| 15.HND மாணவர்கள், தெகிவளை | 15,000.00 |
| 16.திரு.S.குலசபாநாதன் | 5,000.00 |
| 17.திரு.அஸ்வினிகுமார் அரவிந்தன் | 35,000.00 |
| மொத்தம் | 300,625.00 |

ஜனவரி 2012

| | |
|---|---|
| 1.திருமதி.இராஜேஸ்வரி பரமேஸ்வரன் | 20,000.00 |
| 2. Dr. கௌரிநந்தன் | 100,000.00 |
| 3.திரு.எஸ்.இராஜன் | 25,000.00 |
| 4.செல்வி.சிவத்மிகா மதிவண்ணன் | 20,000.00 |
| 5.Dr.பாலசேகரன் | 20,000.00 |
| 6.திருமதி.விஜயகலா மகேஸ்வரன் | 40,000.00 |
| 7.திரு.சீலன் | 20,000.00 |
| 8.Dr.டில்சான் ஞானேந்திரன் | 35,000.00 |
| 9.திருமதி. பிரிய சாந்தினி குமாரநாயகம | 20,000.00 |
| 10.திருமதி.கே.ஜெகசோதி | 10,000.00 |
| 11.திரு.கே.பொன்னம்பலம் | 25,000.00 |
| 12.திரு.கபிலன் மகேஸ்வரன் | 23,000.00 |
| 13.மனிதநேய நிதியம் | 300,000.00 |
| 14.திரு.கே.ராம்தாஸ் | 20,000.00 |
| 15.திரு.ரீ.ஜெயகுமார் | 17,500.00 |
| 16.திரு.சீ.கே.சகாதேவன் | 5,000.00 |
| 17.திருமதி.சிவப்பிரகாசபிள்ளை | 20,000.00 |
| 18.திரு.வி.ஞானசம்பந்தன் | 15,000.00 |
| 19.திரு.எஸ்.கருணாகரன் | 20,000.00 |
| 20.செல்வி.வி.வனஜா | 20,000.00 |
| 21.திரு.என்.அஸ்வின் | 20,000.00 |
| 22.திரு.எஸ்.ராமச்சந்திரன் | 3,000.00 |
| 23.செல்வி.மாதுரி | 20,000.00 |
| 24.திரு.வி.கே.நடராஜா | 20,000.00 |
| 25.திரு.என்.பிரபாகரன் | 20,000.00 |
| 26.திரு.அருள்தாசன் ஜஸ்விந்த் | 20,000.00 |
| 27.திரு.கே.பரமநாதன் | 5,000.00 |
| 28.திரு.K.குலசபநாதன் | 5,000.00 |
| மொத்தம் | 888,500.00 |

## இந்து மாமன்றத்தால் விநாயகர் சிலைகள் அன்பளிப்பு

அகில இலங்கை இந்துமாமன்றம் விக்கிரங்களையும் விநாயகர் பெருமானின் சிலைகளை இலவசமாக இந்து மன்றங்கள் நிறுவனங்கள் பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கவிருக்கின்றன.

சீமெந்துக் கலவையால் வடிவமைக்கப்பட்ட இச்சிலைகளை விநாயகர் அருள் வேண்டிநிற்கும் இந்து சங்கங்கள் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் முகப்பு வாயிலில் வைக்க முடியும். இது தொடர்பாக மேலதிக விபரங்களைப் பெற விரும்போர் அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளலாம்.

**அகில இலங்கை இந்து மாமன்றம்,**
**95/1, சேர் சிற்றம்பலம்**
**ஏ. கார்டினர் மாவத்தை கொழும்பு 02**
**தொலைபேசி : 2434990**
**தொலைநகல் : 2344720**

## இரத்மலானைவிடுதி நன்கொடைகள்

மாமன்றத்தின் நிர்வாகத்தில் இயங்கும் இரத்மலானை மாணவர் விடுதிக்கு சமைத்த உணவு, உப உணவுப் பொருட்கள், பால்மா, உடுப்பு வகைகள், மருந்துவகைகள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் விடுதிக்குரிய பாவனைப் பொருட்கள், அத்தியாவசியப் பொருட்கள் போன்றவற்றை அன்பளிப்பாக வழங்கியவர்கள் விபரம்.

**ஒக்ரோபர் 2011**

1. திரு. எஸ். தனபாலா – கொழும்பு 12
2. திரு. திருமதி. கைலாசபிள்ளை, கொழும்பு 3
3. திருமதி. தேசபந்து – கொழும்பு 5
4. மகளிர் கல்லூரி இந்து சபை பொறுப்பாசிரியை – கொழும்பு 3
5. திரு. பெர்ணாண்டோ – பன்னிப்பிட்டி
6. திருமதி. பிரான்சிஸ் – தெஹிவளை
7. சர்வதேச அரிமா சங்கம் – புறக்கோட்டை
8. திரு. கே. சகாதேவன் – 5000/=
9. திரு. எஸ். இராமச்சந்திரன் – 3000/=
10. திரு. எஸ். குலசபாநாதன் – 3000/=
11. விஸ்ணுகோயில் தெஹிவளை
12. ஸ்ரீமுத்துக்கிருஷ்ணசுவாமி மிஷன்
12. சாயி சமித்தி

**நவம்பர் 2011**

1. திருமதி. ராதா விக்னேஸ்வரன்
2. அனோஜன் தனூஜா. வெள்ளவத்தை – 10,000/=
3. திருமதி. எஸ். ஆறுமுகப்பிள்ளை – கொழும்பு 3
4. சாயி சமித்தி
5. திரு. கே. சகாதேவன் – 5000/=
6. திரு. எஸ். இராமச்சந்திரன் – 3000/=
7. எஸ். குலசபாநாதன் 5000/=
8. விஸ்ணுகோயில் – தெஹிவளை
9. திருமதி. சிறீகாந்தன்
10. திருமதி பத்மாவதி. குமாரசாமி. தெஹிவளை
11. திருமதி என். சண்முகலிங்கம் – வெள்ளவத்தை

**டிசம்பர் 2011**

1. திருமதி கமலம். கருணாகரன் – வெள்ளவத்தை
2. திருமதி பத்மாவதி. குமாரசாமி – தெஹிவளை
3. திரு. ஏ. நரேந்திரா – கொழும்பு 3
4. திரு. எஸ். கிருபானந்த மூர்த்தி – கொழும்பு 6
5. திரு. எஸ். அருச்சுணன் – தெஹிவளை
6. திரு. டில்ஷான் ஞானேந்திரன் – வெள்ளவத்தை
7. திருமதி. ஆர். விக்னேஸ்வரன் – பொறளை.
8. திரு. செல்வரட்ணம்
9. டாக்டர் ரவி ரட்ணவேல், லண்டன்
10. திரு. பாலசிங்கம், லண்டன்
11. திரு. எஸ். இராமச்சந்திரன் – 3000/=
12. திரு எஸ். குலசபாநாதன் – 5000/=
13. திரு சி. கே. சகாதேவன் – 5000/=
14. திரு டில்ஷான், ஞானேந்திரன் – 1500/=
15. விஸ்ணுகோயில் – தெஹிவளை.
16. ஸ்ரீ முத்துக்கிருஷ்ணசுவாமி மிஷன்
17. சாயி சமித்தி
18. திரு. ஜெகதீஸ்வரன் – கல்கிசை
19. திருமதி லக்சுமி நரேந்திரன் – தெஹிவளை
20. திர எஸ். இராகுலன் – கனடா.

## யாழ். பல்கலைக்கழகத்தினால் கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட செஞ்சொற்செல்வர், சைவஞானபானு ஆறு.திருமுருகன் அவர்களுக்கு இந்து மக்கள் சார்பில் சரஸ்வதி மண்டபத்தில் நடத்தப்பட்ட பாராட்டு வைபவம் - 24.12.2011




பாராட்டு வைபவத்தில் இறைவணக்கம், வரவேற்புரை ஆகியவை இடம்பெறுவதைக் காணலாம்.









செஞ்சொற்செல்வர், சைவஞானபானு,
கலாநிதி ஆறு. திருமுருகன் நன்றி தெரிவித்து உரையாற்றுவதையும்
மாமன்றத் தலைவர் மனிதநேய மாமணி வி. கயிலாசபிள்ளை,
மாமன்ற உபதலைவர் தவயோகராஜா,
நீதியரசர் சு. ஸ்ரீஸ்கந்தராஜா,
செல்வி சற்சொரூபவதிநாதன்,
சிவஸ்ரீ கு. வைத்தீஸ்வரக் குருக்கள் ஆகியோர்
அவரைக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.






# காரைக்காலம்மையார்

செல்வி தக்ஷாயினி கமலநாதன்
தரம் 9
சைவமங்கையர் வித்தியாலயம்

பெரியபுராணம் போற்றும் அறுபத்து மூன்று நாயன்மார்களும் மகளிர் மூவரில் காரைக்காலம்மையார் ஒருவராவார், இவர் இந்தியாவின் சோழநாட்டில் உள்ள காரைக்கால் என்னும் நகரில் தனதத்தன் என்னும் வணிகருக்கு மகளாகப் பிறந்தார். பெற்றோர் இவருக்குப் புனதிவதியார் என்று பெயரிட்டு, சீருடன் வளர்த்து வந்தனர்.

புனிதவதியார் மழலைப் பருவத்திலேயே சிவனைப் பற்றிப் பேரன்பு ததும்பும் சொற்களைப் பேசத்தொடங்கினார். இவ்வாறு அம்மையார் பிள்ளைப்பருவத்திலேயே சிவபக்தியுடன் விளங்கியமைக்கு அவர் பாடிய அற்புதத் திருவந்தாதியே சான்றாக அமைகின்றது.

இறையன்புடன் வளர்ந்து வந்த புனிதவதியார் மணப்பருவத்தை அடைந்ததும் அவரை நாகப்பட்டணத்தைச் சேர்ந்த பெருங்குடி வணிகன் பரமதத்தனுக்கு மணம் முடித்து வைத்தனர். இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்த புனிதவதியார் சிவபெருமானின் திருவடியில் நீங்காத அன்புடையவராய் சிவனடியார்களை உபசரித்து இல்லறப்பண்பு பிறழாமல் வாழ்ந்து வந்தார்.

புனிதவதியார் இறைவனை வேண்டி மாங்கனி பெற்ற அதிசயத்தைக் கண்டு வியப்படைந்த கணவன் "இவர் பெண் அல்ல, தெய்வம்" என்று இவரை விட்டு நீங்கி பாண்டி நாட்டுக்குச் சென்று வேறொரு பெண்ணைத் திருமணஞ் செய்து வாழ்ந்து வந்தான். தனக்குப் பிறந்த பெண்குழந்தைக்கு 'புனிதவதி' என்ற பெயரைச் சூட்டினான்.

பரமதத்தன் வேறொரு பெண்ணுடன் வாழ்க்கை நடத்துவதை அறிந்த சுற்றத்தார் புனித வதியாரை அழைத்துச் சென்றபோது பரமதத்தன் தன் மனைவியோடும் குழந்தையோடும் வந்து புனிதவதியாரின் திருவடிகளில் வீழ்ந்து "நான் உம் அருளால் வாழ்கிறேன். இச் சிறுகுழந்தைக்கும் உங்கள் பெயரையே சூட்டியுளேன்" என்று வணங்கினான். கணவனின் நிலையை உணர்ந்த புனிதவதியார் சிவனை வணங்கி கணவன் வேண்டாத உடலை நீக்கி தன் அழகை உதறிப் பேய்வடிவம் பெற்றார். சிவனின் அருளால் அற்புதத்திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் எனும் மூன்று நூல்களை இயற்றினார்.

பின்னர் ஞானவுணர்வு பொங்க எலும்புடம்புடன் தலையால் நடந்து கைலாயத்துக்குச் சென்று இறைவனின் திருநடனத்தைக் கண்டு களித்தார். இவர் தனது வாழ்வின் பல்வேறு பருவங்களிலும் இறைவன் மீது இடையறாத அன்பைக் கொண்டிருந்தால் இறைவன் மீது இடையறாத அன்பைக் கொண்டிருந்ததால் இறைவன் திருவடி நிழலிலிருந்து பேரானந்தத்தை அனுபவிக்கும் பேற்றைப் பெற்றார்.

இவர் 'காரைக்கால்' எனும் ஊரில் அவதரித்தமையாலும், இறைவனால் "அம்மையே" என்று அழைக்கப்பட்டமையாலும் "காரைக்காலம்மையார்" என்ற பெயரைப் பெற்றார். காரைக்காலம்மையார் பாடிய பாடல்கள் பதினோராம் திருமுறையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அம்மையாரின் குருபூசை பங்குனிச் சுவாதியில் கொண்டாடப்படுகிறது.

# சுவாமி விவேகானந்தர் சிலையை உடைத்தது தொடர்பாக அகில இலங்கை இந்து மாமன்றத்தின் கடுமையானகண்டனம்

மட்டு மாவட்டம் ஆரையம்பதி பிரதேச சபை பிரிவில் கல்முனைப் பிரதான வீதியில் ஆரையம்பதி பிரதேச சபையால் நிறுவப்பட்டிருந்த சுவாமி விவேகானந்தரின் சிலை திங்கட்கிழமை 9ம் திகதி சேதப்படுத்தப்பட்டமையை அறிந்து மிகவும் வேதனையடைவதுடன் இந்து மக்களின் சார்பில் இந்நாட்டின் இந்து நிறுவனங்களின் கூட்டமைப்பான அகில இலங்கை இந்து மாமன்றம் அந்நிகழ்வைக் கடுமையாகக் கண்டிக்கின்றது.

சிக்காக்கோ மாநாட்டில் உலகின் சகல மதத்தலைவர்களையும் பார்த்து "அன்புச் சகோதர சகோதரிகளே" என விழித்து உரையாற்றி சர்வதேசரீதியில் சநாதன தர்மமான எங்களின் இந்து மதத்தின் பெருமையை எல்லோருக்கும் உணர்த்தி எல்லோரின் பாராட்டையும்பெற்ற புகழ்மிக்க ஒரு மகானின் சிலைக்கு இப்படியான இழிவு நிகழ்வு நடந்தது பெரும் கவலையைத்தருகின்றது.

வேதனைகளையும், சோதனைகளையும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் சிறுபான்மை மக்கள் தொடர்ந்தும் துவேஷ உணர்வுகளால் வாடுகின்ற இந்த நாட்டில் மதத்துவேஷத்தைக் கிளப்பும் வகையிலான இந்த அழிவுச் செயலைச் சகலரும் கடுமையாகக்கண்டித்து மீண்டும் இப்படியான நிகழ்வுகள் நடக்காமல் பார்க்கவேண்டும் என வேண்டுகிறோம்.

மாமன்றம் நடத்திய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவுதின கட்டுரைப்போட்டி
மேற்பிரிவில் முதற்பரிசு பெற்றகட்டுரை



# நாவலரின் இலக்கணப் பணிகள்


செல்வன் செங்கதிர்ச்செல்வன் – சேயோன்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி


பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு பெரும்பாலும் 'ஆறுமுகநாவலர்' என்னும் தனிமனித ஆளுமையை அடிப்படையாகக் கொண்டதாகவே விளங்குகின்றது. ஆறுமுகநாவலரைத் தவிர்த்து பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றை எவரும் நிறைவுசெய்துவிட முடியாதளவிற்கு அவரின் பன்முகப்பட்ட பணிகள் அமைந்து காணப்படுகின்றன. இலக்கண, இலக்கிய, சமய, சமூகத் துறைகளில் அவர் தமது முழு ஆளுமையையும் பதித்துச் சென்றுள்ள போதும் இலக்கணத் துறையில் அவர் ஆற்றிய பங்களிப்பு என்றும் விதந்து போற்றுதற்குரியதாகும்.

நாவலர் செய்த தமிழ்ப்பணியின் ஒருபகுதியாகவே அவரது இலக்கணப் பணிகள் அமைகின்றன. அவரது இலக்கணப்பணிகளை

1. இலக்கண நூல்களைப் பதிப்பித்தமை
2. இலக்கண நூல்களுக்கு உரைகள் எழுதியமை.
3. புதிய, வசன இலக்கண நூல்களை ஆக்கியமை.

என முப்பெரும் பிரிவுகளாக நோக்கலாம். இவ் வகையில் பதிப்பாசிரியர், உரையாசிரியர், நூலாசிரியர் என வெவ்வேறு வழிகளில் நாவலர் தமது பங்களிப்பினை ஈழத்துத் தமிழ் இலக்கணத்துறைக்கு நல்கியுள்ளார்.

நாவலரவர்கள் 1851 ஆம் ஆண்டில் நன்னூல் மூலமும் சங்கர நமசிவாயப் புலவரால் செய்யப்பட்டு சிவஞான சுவாமிகளால் திருத்தப்பட்ட விருத்தியுரையும், என வழங்கும் நன்னூல் விருத்தியுரையையும் 1868 ஆம் ஆண்டில் திருவாவடுதுறை சிவஞான முனிவர் அருளிச் செய்த 'இலக்கண விளக்கச் சூறாவளி, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி என்னும் இலக்கண நூல்களையும் திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ சுவாமிநாத தேசிகர் அருளிச் செய்த 'இலக்கணக் கொத்து மூலமும் உரையும் என்னும் நூலையும் பரிசோதித்துப் பதிப்பித்துள்ளார். நாவலரின் இலக்கணப் பதிப்புக்கள் மிகவும் சிறந்த பதிப்புக்களாக இன்றும் போற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. தேவையான இடங்களில் குறியீடுகளைக் கையாண்டும், சந்தி பிரித்தும், பந்திகள் அமைத்தும் படிப்போருக்கு இலகுவான முறையில் அவை அமைந்து காணப்படுகின்றன.

இவ்வாறாக ஏட்டிலிருந்த நூல்களை அச்சிற் பதிப்பிக்கும் முயற்சியில் நாவலர் ஈடுபட்டமைக்கு தமிழ்க் கல்வி வளர்ச்சியில் அவருக்கிருந்த ஆர்வமும் பழந்தமிழ் இலக்கண நூல்களை யாவருக்கும் எளிதிற் பயன்படுமாறு செய்ய வேண்டும் என்ற விருப்பமுமே காரணங்களாக அமைந்தன.

ஆறுமுகநாவலர் அவர்கள் 1880 ஆம் ஆண்டில் நன்னூற் காண்டிகையுரையை வெளியிட்டார். இது பல பதிப்புக்களைக் கண்டது. இந் நன்னூற் காண்டிகையுரை 'நல்லூர் ஆறுமுகநாவலர் திருத்தியும் விளக்கியும் கூட்டியும் புதுக்கியது' என்ற பெயரில் வழங்குகின்றது. வழக்கிலிருந்த நன்னூல் உரைகளில் மாணவர்களுக்கு விளங்க வேண்டுவனவற்றை மேலும் விளக்கியும் குறிப்புக்கள் பல கூட்டியும் சொல்லிலக்கண சூசி என்பவற்றைச் சேர்த்தும் நாவலர் நன்னூலுக்குப் புதிய முறையில் காண்டிகையுரையை எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாவலரது இலக்கணப் பணிகள் பரந்துபட்டன. 'புதிய இலக்கணநூல் செய்த இலங்கை அறிஞர்' என்ற வகையில் நாவலர் 'இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடை' என்பவற்றைத் தந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. நாவலர் தமது 51ஆவது வயதில் இலக்கணச் சுருக்கத்தை எழுதினார். முதற்பதிப்பிலிருந்து இன்று வரை இலக்கணச் சுருக்கம் பல பதிப்புக்களைக் கண்டுவிட்டது. இலங்கையில் எழுந்த புதிய இலக்கண நூல்களின் வரிசையில் சிறப்பிடம் பெறுவது நாவலரின் இலக்கணச் சுருக்கம் ஆகும். நாவலரின் இலக்கணச் சுருக்கம் எழுத்ததிகாரம் சொல்லதிகாரம், தொடர்மொழியதிகாரம் என்ற முப்பிரிவில் இலக்கண விதிகளை உதாரணங்களுடன், இலகுவான வசனநடையில் விளக்குவதாக அமைந்துள்ளது. ஒவ்வொரு இலக்கணப் பிரிவுகளுக்குப் பின்னரும் பரீட்சை வினாக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு இலகுவான முறையில் எழுதப்பட்ட வசன இலக்கண நூலாகவும், மிகத் தெளிவான இலக்கண விளக்கங்கள் கொண்டதாகவும் இலக்கணச் சுருக்கம் விளங்குகின்றது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் 1865 ஆம் ஆண்டில் இலக்கண வினாவிடையை வெளியிட்டார். இந்நூல் நின்று நிலைப்பது போல் வேறெந்த நூல்களும் நின்று நிலைக்கவில்லை என்றே கூறவேண்டும். இளைஞர்களுக்கு வினாவிடை மூலம் இலக்கணத்தை உணர்த்தும் நோக்குடனும், அவர்களது அறிவுக்கும் அனுபவத்துக்கும் மொழியாற்றலுக்கும் ஏற்ற வகையிலே இந்நூலை அமைத்துள்ளார்.

தனது காலத்துக்கேற்றவை எவை என்பதையும் இன்றியமையாதன எவை என்பதையும் சிந்தித்து அவற்றைச் செயற்படுத்தியமையால் நாவலரது இலக்கணப் பணிகள் இன்றும் பேசப்படுகின்றன. இவ்வாறாக ஈழத்துத் தமிழ் இலக்கண வரலாற்றில் தனக்கெனத் தனித்துவமான தடம் பதித்துச் சென்றுள்ளார் ஆறுமுகநாவலர் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

மாமன்றம் நடத்திய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவுதின கட்டுரைப் போட்டி
மத்தியபிரிவில் முதல் பரிசுபெற்ற கட்டுரை

# சைவமும் நாவலரும்


செல்வி. N. கமலினி
புனித ஜோசேப்பர் கல்லூரி த.ம.வித்தியாலயம், மஸ்கெலியா.


இலங்கையில் ஏறத்தாழ நூற்று நாற்பது ஆண்டுகளாகப் போர்த்துக்கேயர், சைவசமயத்திற்கெதிராகப் பாரிய அட்டூழியங்களைப் புரிந்தனர். அவர்களுக்குப் பின் ஒல்லாந்தர் நூற்றுமுப்பத்தெட்டு ஆண்டுகளாக தமது ஆதிக்கத்தின் மூலம் சைவ சமயத்தை சீரழித்தனர். அதற்குப் பின் வந்த வெள்ளையர்கள் நூற்று ஐம்பத்திரண்டு ஆண்டுகளாக தமது செல்வாக்கை நமது நாட்டில் திணித்தார்கள். இதற்காகப் பல தந்திரங்களையும், யுத்திகளையும் கையாண்டார்கள். கல்வித்துறையைக் கிறிஸ்தவப் பாதிரிகளிடம் கையளித்ததன் மூலம் திண்ணைப்பள்ளிகளைச் செல்வாக்கிழக்கச் செய்தனர். ஆசை வார்த்தைகளை கூறித் தம் நாட்டுக்கல்வி என்பதை மக்களிடையே பாதிரிமார் பரப்பத்தொடங்கினர். அரச உத்தியோகத்தின் பொருட்டும், உயர்ந்த வாழ்க்கைக்காகவும் அனேகமானோர் மதம் மாறினர்.



ஆங்கிலேயரது காலத்தில் பிரித்தானியரது ஏகாதிபக்திய அராஜகம் சைவ சமயத்திற்காகவன்றி, அதற்கெதிராக எவ்வாறிருந்தது எனப்பார்ப்பதற்கு ஆறுமுக நாவலரின் "பிரபந்தத் திரட்டு" என்னும் நூலில் "யாழ்பாணத்து சமய நிலை" என்னும் அத்தியாயத்திற்கு சித்தரித்துக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் துணைபுரிவதாக உள்ளன. இங்கிலாந்திலும், அமெரிக்காவிலுமிருந்து புரட்டஸ்தாந்துக் கிறிஸ்து சமயப்பாதிரிமார் யாழ்ப்பாணத்துக்கு வந்து, சிவன் கடவுளல்லர் என்றும், அவர்கள் பிசாசின் அடிமைகள் என்றும் பொது மக்களிடையே போதிக்கத் தொடங்கினர். அத்துடன் "குருட்டு வழி", "மும்மூர்த்தி இலட்சணம்", "துராசார விருத்தம்" முதலிய சைவ தூஷணப் புத்தகங்களை அதிக பணஞ்செலவு செய்து அச்சிற்பதிப்பித்து, அவற்றை ஊர்கள் தோறும் கொடுக்குமாறு சம்பளத்துக்கு உபதேசிமாரை விடுவாராயினர்.

பின்னர் பாடசாலைகளை ஸ்தாபித்து ஆங்கிலம் கற்பித்தனர். பாதிரிமார் அவர்களின் பாடசாலைகளில் இளமைக்காலத்தில் ஆங்கிலம் கற்கப் புகுந்த எல்லோரும் சைவ சமய உண்மையை உணராமற் கிறிஸ்து சமயத்தில் புகுந்தனர். நம் நாட்டு வறியவர்கள் பலர் சைவச் சமயமே மெய்ச்சமயம் என அறிந்திருந்தும் உணவு, உடை முதலியவற்றை இலவசமாக பெற்று படிப்பதற்காகவும், அரசாங்க உத்தியோகங்களைப் பெறுவதற்காகவும் மதம் மாறினர்.

பாதிரிமார் தமது பாடசாலைகளிற் படிக்கின்ற சைவசமயப் பிள்ளைகளை விபூதியை அழிக்குமாறு பலாத்காரம் செய்தனர். வீபூதி அழிக்காத மாணவர்களை பாடசாலையிலிருந்து விலக்கினர். கிறிஸ்து சமயப் புத்தகங்களையே நெடுநேரம் படிப்பித்தனர். ஞாயிறு தோறும் தமது பிரச்சாரங்களை கேட்காதவர்களையும், கோயிலுக்கு செல்பவர்களையும் தண்டித்தனர். அமெரிக்க பாதிரிமார் வட்டுக்கோட்டையில் ஆரம்பித்த "யாழ்பாணக்கல்லூரியில் விபூதி தரியாதொழிக்குங் கிறிஸ்து சமயப் புத்தகங்கள் கற்பிப்பதற்கும், ஞாயிறு தோறும் கிறிஸ்துசமயப் பிரச்சாரங்கள் கேட்பதற்கும் உடன்பட்ட பிள்ளை மாத்திரமே சேர்க்கப்பட்டனர். அத்தகைய இருண்ட காலத்திலே திருநெல்வேலி ஞானப்பிரகாசரின் பரம்பரையைச் சேர்ந்த உதய சூரியன் போன்று ஆறுமுக நாவலர் தோற்றம் பெற்றார்.

> *"நல்லைநகராறுமுக நாவலர் பிறந்தில ரேற்*
> *சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே - எல்லவரும்*
> *ஏத்துபுரா ணாகமங்கள் எங்கேப்பிர சங்கமெங்கே*
> *அத்தனறி வெங்கே அறை"*

என்று இராவ்பகதுர் சி.வை. தாமோதிரம் பிள்ளை நாவலருடை அரும்பெரும் பணிகளை போற்றிப்பாடியுள்ளார்.

யாழ்ப்பாணத்து நல்லூரிலே சைவ வேளாளர் குலத்திலே 1822 மார்கழி 5ம் நாள் (ஆங்கிலத் திகதி 18.12.1822) கந்தப்பிள்ளை, சிவகாமியம்மை என்பவருக்கும் எட்டாவது பிள்ளையாக இவர் பிறந்தார். இவரது இளமைப்பெயர் ஆறுமுகன். தனது ஆரம்பக்கல்வியை நல்லூரிலே திண்ணைப்பள்ளி ஒன்றை நடாத்திய சுப்ரமணியப்பிள்ளை என்பவரிடம் கற்றார். வாக்குண்டாம், நன்னெறி, மூதுரை, நிகண்டு முதலான நூல்களை இளம் வயதிலே

கற்றுக் கொண்ட இவர், நல்லூர் வேலாயுத முதலியார், நல்லூர் சரவணமுத்துப்புலவர் ஆகியோரிடமும் கல்விக்கற்றுத் தமிழிலும், வடமொழியிலும் ஆழ்ந்த புலமைப் பெற்றார். பன்னிரண்டு வயதில் இவர் பீற்றர் பெர்சிவல் என்னும் பாதிரியாரின் தலைமை தாங்கி நடைபெற்ற வெஸ்லியன் மெதடிஸ்த சங்கத்திற்குரிய மத்தியகல்லூரியில் சேர்க்கப்பட்டார். இவர் இங்கு கற்றுக் கொண்டிருக்கும் போதே இவரது 19ம் வயதில் கீழ் வகுப்புக்களுக்கு ஆங்கிலமும், மேல் வகுப்புக்களுக்குத்தமிழும் கற்பிக்க ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அத்துடன் தமக்குத் தமிழ் கற்பிக்கும் பெர்சிவல் பாதிரியாரின் பண்டிதராகவும் காணப்பட்டார். மேலும் இவரின் வேண்டுகோளுக்கேற்ப பைபிளை ஆராய்ந்து தமிழில் மொழிப்பெயர்த்தார்.

இவரது மொழிப்பெயர்ப்பு அக்கால மொழிவல்லுனரான மழவை மகாலிங்க ஐயரினால் சிறந்த மொழிப்பெயர்ப்பு என ஏற்றுக் கொள்ளப்பட்டது. இருபது வயதளவில் "திருமுருகாற்றுப்படை" எனும் நூலை பாராயணம் செய்தார். கிறிஸ்து மகத்தவர்களும் அவர் வைத்திருந்த நெருக்கமான உறவு காரணமாக, அவர்களுடைய நோக்கம், நடைமுறை, உத்திகள் முதலானவற்றை இவர் விளக்கமாக அறிந்துக் கொண்டார். இந்த அனுபவம் கிறிஸ்தவர்களையும் அவர்களது பிரச்சாரத்தையும் முறியடித்து சைவசமய மலர்ச்சிக்கு இவர் வித்திட பெரிதும் பயன்பட்டது. குறிப்பாக ஆசிரிய நியமனத்தை ஏற்றுக் கொண்ட போது அவர் தாம் ஒரு காலத்திலும் வீபூதி அழிக்கமாட்டாரென்றும், உத்தூளனம், திரிபுண்டரம் ஆகிய இரு முறைகளிலும் உடம்பில் விபூதி பூசிக்கொண்டே வருவாரென்றும், தமது கிறிஸ்து மதக் கண்டனம் செய்யும் வழக்கத்தை விடமாட்டாரென்றும் பல நிபந்தனைகளை வைத்தே அதை ஏற்றார்.

நாவலர் தனது இருபத்தாறாம் வயதிலே தம் ஆசிரியர் பதவியை துறந்தார். ஊர்கள் தோறும் சைவப் பாடசாலைகளை அமைக்கவும், கோயில் தோறும் சைவப்பிரச்சாரங்கள் செய்தும் பல முயற்சிகளை மேற் கொண்டார். 1848ம் ஆண்டு ஆவணி மாதம் 5ம் நாள் யாழ்ப்பாணத்தில் வண்ணார் பண்ணை என்ற ஊரில் "சைவப்பிரகாச வித்யாசாலை" என்னும் பெயரில் முதலாவது சைவப்பாடசாலையை நிறுவினார். உலகிலேயே முதலாவது இலவசக் கல்விப்பாடசாலை எனும் பெருமைக்குரிய பாடசாலையாக காணப்பட்டாலும் தொடர்ந்து கொண்டு செல்ல போதியளவு பணம் இருக்கவில்லை. எனவே, பிடியரிசி தண்டிச் சேர்க்கும் பொருள் கொடுத்து தம்பிடம் முன்னர் கற்ற சதாசிவப்பிள்ளை முதலானவர்களை ஆசிரியர்களாக நியமித்து பாடசாலையை இயங்கச் செய்தார்.

மேலும், கோப்பாய், கொழும்புத்துறை, கந்தர் மடம், பருத்தித்துறை, மாதகல், உடுவில், வேலணை முதலிய இடங்களிலும் சைவப் பாடசாலைகள் அமைத்தார். 1864இல் கார்த்திகை மாதம் சிதம்பர சைவப்பிரகாச வித்யாசாலையை நிறுவி வைத்தியம், வானசாஸ்திரம், பூமிசாஸ்திரம், விவசாயம், வணிகவியல், அரசியல், சிற்பவியல் முதலிய பாடங்களை கற்பிக்கத் திட்டமிட்டார். ஒவ்வொரு பாடத்திற்கும் நூல் எழுதும் பணியையும் ஆரம்பித்தார்.

1848இல் சமயக் கல்வியை மையமாக வைத்து ஏனைய பாடங்களை அதற்குத் துணையாக வைத்து தம் கல்வித் திட்டத்தை வகுத்திருந்தார். இவர் சிறுவர்களுக்காக எழுதிய "பாலர் பாடநூல்கள்" மிக பிரசித்தி பெற்றது ஆகும். இவர் தம் பாடநூல்களை படிமுறையாக அமைத்துள்ளார்.

இவரது சைவவினா விடை எனும் நூல் வரிசையில் முதலில் வினா எழுப்பி மாணவர்களை சிந்திக்கச் செய்து பின்னர் விடைகளை கொடுத்துள்ளார். இவர் சைவசமய தத்துவக்கருத்துக்களை சுருக்கமாக விளக்கி இந்நூல்களை எழுதியுள்ளார். தமிழ் இலக்கணத்துக்கும், வினாவிடை வடிவ நூல் இயற்றியுள்ளதோடு "இலக்கணச் சுருக்கம்" என்னும் நூலினையும் புதிதாக எழுதினார். அதுதவிர கந்தபுராண வசனம், பெரியபுராண வசனம் முதலிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். தமது நூல்கள் யாவற்றையும் அச்சு வாகனம் ஏற்றுவதற்காக யாழ் சைவப்பிரகாச வித்யாசாலையின் (அதன் அருகில்) அருகே "வித்யாநூலாபனயந்திரசாலை என்னும் பெயரில் முதலாவது அச்சு இயந்திர சாலையை நிறுவினார்.

தாம் எழுதிய நூல்கள் எல்லோருக்கும் எளிதாகப்பயன்பட வேண்டும் என்பதன் காரணமாக வசன நடையிலேயே தமது நூல்களை எழுதினார். இவர் தமிழ் நூல்களில் வசன நடையைப் பயன்படுத்தி "தமிழ் உரை நடையின் தந்தை" "வசன நடை வல்லாளாளர் என்ற புகழையும் ஈட்டியுள்ளார். அத்துடன் மேலை நாட்டார் பயன்படுத்திய முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி முதலிய குறியீடுகளை முதன்முதலாக தாம் அச்சிட்ட நூல்களில் பயன்படுத்தினார். அவ்வாறு முதன்முதலில் அச்சிட்ட தமிழ் நூல்களுள், இவரின் நூல்களாவன, திருக்குறள் – பரிமேலழகர் உரை, பாரதம் – வில்லிபுத்தூரர், திருக்கோவையார் உரை,தொல்காப்பியம்–சேனாவரையம், இராமாயணம் – பாலகாண்டம், நன்னூற் காண்டிகை, நன்னூல் விருத்தி, சூடாமணி, நிகண்டு உரை, இலக்கண விளக்கச் சூறாவளி, பிரயோக விவேக உரை, தருக்க சங்கிரகம், திருமுருகாற்றுப் படை உரை, அபிராமி அந்தாதி உரை, திரிகடுக, எரெழுபது, தீநெறி விளக்கம், ஆத்திச்சூடி – கொன்றை வேந்தன் உரை, நல்வழி உரை, நன்னெறி உரை, திருச்செந்தூர் அகவல், திருச்செந்தில் நீரோட்டகயமக அந்தாதி முதலானவை ஆகும்.

நாட்டுக்கோட்டை நகரத்தாரைச் சேர்ந்த திரு. பழனியப்பாச் செட்டியாரின் உதவியுடன் 1894ல் தை மாதத்தில் திருக்கேதீச்சர புணருனத்தாரணப்பணியை ஆரம்பித்தார். ஆனி மாதத்திற்கு பழைய ஆலயமும், தீர்த்தக் கிணறும், மகாலிங்கம், நந்தி, சோமஸ்கந்தர், பிள்ளையார் முதலிய விக்கிரகங்கள் கண்டு எடுக்கப்பட்டன, பின் புதுக்கோயில் ஒன்றை அமைத்து காசியிலிருந்து சிவலிங்கம் ஒன்று கொண்டு வந்து பிரதிட்டை செய்து 1903.06.28ம் திகதி கும்ப அபிஷேகம் செய்தார்.

நாவலர் சைவக்கோயில்களையும், பாடசாலைகளையும் மையமாக வைத்து சைவ மக்களிடையே காணப்பட்ட அறியாமை, ஒழுக்கக்கேடு முதலியவற்றை கண்டித்துச் சைவசமய பண்பாட்டு மறுமலர்ச்சிக்கு வித்திட முயன்றார். கோயில்கள் ஆகம முறைப்படி அமைய வேண்டும் என்பதனை வலியுறுத்தி இடம்பெற்ற தேவடியாள் நடனம், வாணவிளையாட்டு, உயிர்பலி முதலானவற்றை நிறுத்தவும், சுடலை மாடன், காட்டேறி முதலிய சிறு தெய்வங்களை விலக்கவும் பாடுபட்டார்.

கோயில் நிர்வாகத்திலுள்ள சீர்கேடுகளையும் இவர் தண்டிக்க தவறவில்லை. தமது 24ம் வயதிலே சைவ மாணவர் சிலரைச் சேர்த்துக் கொண்டு சம்பளம் பெறாமல், இராக்காலங்களில் சமய நூல்களையும், கருவி நூல்களையும் கற்பிக்கும் திண்ணைப்பள்ளி ஒன்றை அமைத்தார். தனத 25வது வயதில் அதாவது 1847ல் மார்கழி மாதம் (31.12.1847) வெள்ளிக்கிழமையும் அங்கு பிரசங்கம் செய்தார். அவரில்லாத நேரங்களில் இவரின் மாணவரான வே. கார்த்திகேய ஐயர் என்பவர் பிரசங்கம் செய்தார்.

இலங்கையில் கிறிஸ்து சமயத்தை பரப்புவதற்காக பாதிரிமார்கள் பல்வேறு உத்திகளை கையாண்டார்கள்.

1. சிறு பிள்ளைகளுக்கு ஆங்கிலக்கல்வி வழங்குகின்ற போர்வையில் அவர்களை மதம்மாற்றிப் பின்னர் அப்பிள்ளைகளின் பெற்றோரையும் மதம் மாற்றினர்.

2. தொழில் வழங்குவதன் மூலமும், மேடைப்பிரசங்கம் செய்தவதன் மூலமும் பலரை கிறிஸ்தவர்களாக்கினர்.

ஆறுமுகநாவலர் இதற்கேற்ப பல உத்திகளை கையாண்டனர். கிறிஸ்து சமயத்திற்கு மாற ஆயத்தமானவர்களை தனியாக அழைத்து அவர்களுக்கு சைவ சமயத்தின் உண்மையையும், கிறிஸ்தவ சமயத்தின் ஆபாசங்களையும் மனத்திற் பதியுமாறு சமய போதனை செய்தார். நாவலரது சமயபோதனைகளைக் கேட்பவர் மனமாற்றம் பெற்று தமது நடத்தைகளிலும் மாற்றம் பெற்றனர். புராண படன மரபைப்பயன்படுத்தி பிரசித்தி பெற்ற ஆறுமுக நாவலர், புராண படனத்தின் மூலம் பொதுமக்களிடையே சமய அறிவு இலக்கிய இரசணை முதலிய ஆற்றல்களை வளர்த்துச் சமய அறிவைத் தூண்டக் கூடியதாக இருந்தது. இது ஒரு வகையில் முதியோர் கல்வியாகவும் வாழ்நாள் நீடித்த கல்வியாகவும் இருந்தது. நல்லூர் கந்தசுவாமி கோயில் ஆகம முறைகளைக் கடைப்பிடிக்கவில்லை. எனவே, நாவலர் 1876ல் வண்ணார்பண்ணையின் சிவன் கோயிலில் ஒரு பெருங்கூட்டம் கூட்டி நல்லூர் கோயிலின் அதிகாரியை விலக்க வழக்கு ஒன்றை தொடர சமயசபை ஒன்றை நிறுவியது.

இவ்வழக்கு 1929ல் விசாரணைக்கு வந்தது. அதன்படி இக் கோயிலின் அதிகாரி நீதிமன்றத்திற்கு கணக்கு காட்டல் வேண்டும். இக்கோயில் பொதுவானது என தீர்ப்பு வழங்கப்பட்டது. மேலும் சிவதீட்சை பெற்றுக்கொள்ளாமல் காணப்படும் சிவதீட் சிதர்களையும் கண்டித்தார். 1876ல் ஆடுவெட்டி வேள்வி செய்ய முயற்சித்தனர். அதனையும் தடுத்து நிறுத்தினார். யாழ்ப்பாணத்தில் பஞ்சமும், பேதி நோயும் உண்டான போது இவர் சமய பேதமின்றி எல்லாச் சமய மக்களுக்காகவும் பாடுபட்டார். இவரது காலத்தில் இவர் ஒரு மகா சபையை கூட்டிப் பொருள் சேர்த்துக் கஞ்சித் தொட்டித் தருமம் செய்து உதவினார்.

கமக்காரர்களுக்கு விதை, நெல் கிடைப்பதற்கான சட்ட நிரூபண சபைக்கு விண்ணப்பம் செய்தார். சமூகம் கடைப்பிடிக்க வேண்டிய பாரம்பரியம் யாது என்பதை, யாழ்பாணத்து சமய நிலை, சைவ விரோதம், தமிழ்ப்புலமை, சைவ சமயி, அநாசாரம் முதலிய கட்டுரைகளில் இவர் விளக்கியுள்ளார். உதயபானு என்ற பெயரோடு சைவப்பத்திரிகை ஒன்று இவருடைய மாணவர்களால் 1880ல் ஆரம்பிக்கப்பட்டது. 1889ல் இது இந்து சாதனம் எனப் பெயர் மாற்றப்பட்டது. இது தவிர யாழ்ப்பாணத்தமிழ் சங்கம், கிறிஸ்து மதக்கண்டன சபை என்பவற்றிற்கும் இவர் வித்திட்டார். 1872ல் நாவலர் ஆரம்பித்த ஆங்கில – தமிழ் வித்யாசாலையை முன்னோடியாக வைத்து யாழ்ப்பான இந்துக்கல்லூரி தொடங்கப்பட்டது. 1880இல் ஆரம்பித்த சைவப்பிரகாச சாமாஜியம் என்பது 1888இல் யாழ்ப்பாண சைவபரிபாலன சபை என்பபெயர் மாற்றப்பட்டது. அக்கால சட்ட நிரூபணசபை அங்கத்தவரான சேர். முத்துக்குமார சுவாமியுடன் நாவலர் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். தாம் இலங்கையர் எனக் கூறுவதில் இவர் பெருமிதம் கொண்டார். இலங்கைத் தமிழர்கள் சளைத்தவர்களல்ல என்பதனை மித்தியவாத நிரசனம், நல்லறிவுச்சுடர் கொளுத்தல் என்னும் வெளியீடுகள் மூலம் எல்லோரையும் அறியச் செய்தார்.

1849ம் ஆண்டு ஆடி மாதத்தில் ஆறுமுகநாவலர் அச்சுயந்திரம் வாங்குவதற்குச் சென்னைக்குச் சென்றிருந்தார். அச்சுயந்திரம் வாங்கிய பின் அங்கிருந்து தமிழ்நாட்டுத் திருத்தலங்களுக்கு யாத்திரை செய்தார். இவருடைய சமய அபிமானம், கல்வித்திறமை முதலியவற்றை ஏலவே அறிந்திருந்த திருவாடுதுறை ஆதீனத்தார் தம் திருமடத்துக்கு இவரை அழைத்து உபசரித்தனர். பண்டாரச் சந்நிதிகள் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணரரைத் தேசிக பண்டாரச் சந்நிதிகள் கேட்டதன் பேரில் சுபநாள் ஒன்றில் ஆதின அவையில் ஆறுமுகன் "பதி, பசு, பாச" விளக்கம் எனும் பொருளில் அரியதோர் சொற்பொழிவைச் செய்தார்.

இவரது நாவாண்மையைக் கண்டு வியந்த அம்பலவாணர் இவருக்கு "நாவலர்" என்ற பட்டத்தை வழங்கினார். பின் இராமநாதபுரம் பொன்னுசாமி தேவருடைய சபையில் நாவலர் செய்த பிரசங்கத்தை கேட்டுமகிழ்ந்த தேவர் மிகச்சிறந்த விருதை நாவலருக்கு வழங்கினார்.

பின் நாவலர் மதுரை திருஞான சம்பந்த சுவாமி ஆதினத்துடைய பண்டார சந்நிதிகளின் வேண்டுகோளின்படி மதுரை மீனாட்சி அம்மை சந்நிதானத்தில் பிரச்சங்கம் செய்தார்.

நாவலரின் இறுதிப் பிரசங்கம் வண்ணார் பண்ணை சைவப் பிரகாச வித்யாசாலையில் 1879ம் ஆண்டு சுந்தர் அவர்களின் குருபூசைத் தினமாகிய ஆடிச்சுவாதி நட்சத்திரத்தன்று இடம்பெற்றது. தனது 57வது வயதில் 1879 கார்த்திகை 21ம் நாள் (1879.12.05) வெள்ளிக்கிழமையன்று மக நட்சத்திரமும் சத்தமித் திதியும் கூடிய புண்ணிய வேளையில் விண்ணுலகு ஏகினார்.

## இந்து மாமன்றத்தின் சிவத்தொண்டர் மாநாடு

அகில இலங்கை இந்து மாமன்றமும், மன்னார் மாவட்ட திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபையும் இணைந்து நடத்தும் இரண்டாவது சிவ தொண்டர் மாநாடு மாசிமாதம் 18 ஆம் திகதி சனிக்கிழமை திருக்கேதீஸ்வராலய ஆலயத்தில் நடைபெறவிருக்கின்றது. இந்த மாநாட்டில் அமெரிக்கா ஹாவாய் சைவ ஆதீனம் தவத்திரு ரிஷி தொண்டு நாதன் சுவாமிகள் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவிருக்கிறார், பேராசிரியை ஞானவித்தகி, முத்தமிழ் பேராசி சரஸ்வதி இராமநாதன் மற்றும் சைவஞானபானு செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் உட்பட அறிஞர்கள் பலர் உரையாற்ற விருக்கின்றார்கள். அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் இந்து சிரோரத்தினம் மனித நேய மணி வி. கைலாசபிள்ளை அவர்கள் தலைமையில் இம்மாநாடு நடைபெறவுள்ளது

மாமன்றம் நடத்திய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவுதின கட்டுரைப்போட்டியில்,
கீழ்ப்பிரிவில் முதற்பரிசுபெற்ற கட்டுரை



# நல்லை நகர் நாவலர்

செல்வி யு. சங்கீதா
லொயினோன் தமிழ்வித்தியாலயம் பொகவந்தலாவ.

சைவ சமயத்திற்கும், தமிழ்மொழிக்கும் அரும், பெரும் பணியாற்றிய சைவத் தமிழ்ப் பெருமகன் ஆறுமுகநாவலர் ஆவார். இவர் பிறந்த இடம் நல்லூர் ஆகும். இவர் 1822ல் 12ம் மாதம் 18ஆந் திகதி பிறந்தார். இவரின் தந்தை பெயர் கந்தபிள்ளை; தாய் பெயர் சிவகாமி அம்மையர் ஆகும். இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் ஆறுமுகம் ஆகும். இவருக்கு ஆறுமுகநாவலர் என பெயர் வந்ததன் காரணம் சைவ ஆதீனமாக விளங்கிய திருவாவடுதுறை ஆதீனம் இவரின் சைவத்தமிழ்ப் பணிகளைப் பாராட்டி அவருக்கு "நாவலர்" பட்டம் வழங்கி கௌரவித்து அன்று முதல் அவர் ஆறுமுகநாவலர் என அழைக்கப்பட்டார்.

ஆறுமுகநாவலர் வாழ்ந்த காலமானது ஆங்கிலேயர் இலங்கையையும், இந்தியாவையும் ஆட்சி செய்த காலமாகும். ஆறுமுகநாவலர் வாழ்ந்த காலச்சூழ்நிலையே சைவசமயத்தையும், தமிழையும் வளர்ப்பதற்கு அவரை தூண்டியது. சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்காக அவர் பல தியாகங்கள் செய்தார். நாவலர் இளமை பருவத்திலே கல்வி, அறிவு என்பன சிறந்து விளங்கினார். இவர் சிவபக்தி நிறைந்தவராக திகழ்ந்தார். சைவசமய சூழலில் சைவப்பிள்ளைகள் கல்வி கற்க வேண்டும் என்பதை நாவலர் உணர்ந்தார்.

ஆறுமுகநாவலர் வண்ணார் பண்ணையிலும், சிதம்பரத்திலும் சைவப் பிரகாச வித்யாசாலை என்ற பெயரில் பாடசாலைகளை நிறுவினார். அவர் சைவப் பிள்ளைகள் கற்பதற்கு ஏற்ப சமய நூல்களையும், பாடநூல்களையும் எழுதிப் பதிப்பித்து வெளியிட்டார். நாவலர் யாழ்ப்பாணம், சென்னை ஆகிய இடங்களில் அச்சுக்கூடங்களை "வித்யாபாலன அச்சு இயந்திர சாலை" எனும்பெயரில் நிறுவினார். ஏட்டுச்சுவடிகளாக இருந்த பழைய சைவநூல்கள், தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள் சிலவற்றையும் தானே பரிசோதனை செய்து அச்சிற் பதிப்பித்து அவற்றை அழியாமற் பாதுகாத்தார்.

வரலாற்று புகழ்மிக்க கீரிமலை சிவன்கோயில், திருக்கேதீச்சரம் என்பவற்றின் மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புக்களை வெளிப்படுத்தியதுடன் அவற்றின் புனருத்தாரணப் பணிகளுக்கும் முன்னின்று உழைத்தார். ஐந்தாங்குரவர் என போற்றப்பட்டார் ஆறுமுகநாவலர். நாவலர் நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியார், நல்லூர் வேலாயுத முதலியார், இருபாலை சேனாதிராய முதலியர், நல்லூர் ம. சரவணமுத்துப் புலவர் என்போர் தமிழ் இலக்கிய, இலக்கணங்களைக் கற்றுக் கொண்டார். அத்தோடு வடமொழியையும் கற்றுக் கொண்டார். வெஸ்லியன் மெதடிஸ்த மிசனைச் சேர்ந்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆங்கிலம் கற்றுக் கொண்டார் அக்கல்லூரியில் ஆசிரியராகவும் சேவை செய்தார்.

நாவலர் சைவ சமயத்தை வளர்க்க, பல வழிமுறைகளைக் கையாண்டார். அவற்றில் முதலாவது வழி சைவப்பிரசங்கமாகும். அவரது பிரசங்கத்தின் பொருளாக சிவசின்னங்கள், திருமுறைகள் முதலானவைகள் அமைந்திருந்தன. அவர் கந்தபுராண வசனம், பெரியபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் முதலான வசன நூல்களை எழுதினார். அவை எளிமை மிக்கவை. அதனால், வசன நடைக்கு ஆறுமுகநாவலரே தந்தை என்பர்.

1. சமயப்பணி 2. சமூகப்பணி 3. கல்விப்பணி

**சமயப்பணி** :இளமையிலேயே புலமை நலஞ் சிறக்கப் பெற்ற ஆறுமுகநாவலரை யாழ்ப்பாணத்து மக்களெல்லாம் தம் சமய குரவர் எனப் போற்றி வந்தனர். "தமிழ், சமயம்" ஆகிய இரண்டும் என் இருகண்கள் என போற்றி வந்தார். அவை இரண்டும் ஒளி குன்றாமல் இறுதிவரை காத்துப் பயன் கொள்வதே என் கடன். அவை வாழப் பணி புரிதலே என் வாழ்வின் குறிக்கோள் என்று வாழ்ந்து பணியைச் செய்தவர் ஆறுமுகநாவலர் ஆவர்.

**சமூகப்பணி** : ஆறுமுக நாவலர் சமயப் பணிகள் மட்டுமன்றிச் சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு இருக்கின்றார். அத்தோடு அரசியலிலும் ஈடுபட்டு இருக்கின்றார். ஆறுமுகநாவலர். இவரின் சமூகப் பணிகளுக்கு எடுத்துக்காட்டாக அமைவதற்கு கஞ்சித் தொட்டிற் தருமம், மட்டகளப்பு வேளாண்மை சங்கம் என்பன குறிப்பிடத்தக்கவை. கஞ்சித் தொட்டிற் தருமமானது 1876, 1877 இல் இலங்கையின் வடபகுதி உட்பட பல இடங்களிலும் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தினால் மக்களுக்கு உண்டான பசி, பட்டினியை போக்குவதற்கு ஆறுமுகநாவலரால் மேற்கொள்ளப்பட்ட பணி என குறிப்பிடலாம்.

**கல்விப்பணி** :1848ல் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாஸ வித்யாசாலையை நிறுவினார். 1872ல் கோப்பாய் மற்றும் புலோலி ஆகிய இடங்களில் சைவப்பிரகாஸ வித்யா சாலைகளை நிறுவினார். ஆறுமுகநாவலர் இவ்வாறான சைவப் பணிகளை ஆற்றியதோடு மாத்திரமன்றித் தனக்கு பின்னர் தனது பணிகளைத் தொடர்ந்து ஆற்றச் சிவசங்கர பண்டிதர், சிவை. தாமோதரம்பிள்ளை, பொன்னம்பலபிள்ளை, காசி வாசி செந்நிநாத ஐயர், சபாபதி நாவலர், சதாவதானி கதிரவேற்பிள்ளை முதலான சைவப்பெரியோர்களை நெறிபடுத்தி நாவலர் வளர்த்த நன்நெறி ஈழத்திலும், இந்தியாவிலும் தொடர வழி வகுத்தார்.

இவ்வாறான பணிகளால் நாவலர் ஈழத்து சைவ சமயத்தின் மறுமலர்ச்சித் தந்தையாகவும், விடிவெள்ளியாகவும் கருதப்பட்டார். 1879ஆம் ஆண்டு மார்கழி மாதம் 21ஆந் திகதி இறைவனடி சேர்ந்தார். ஆறுமுக நாவலர் அவரது பூதவுடல் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. அவரது குருபூசைத் தினம் கார்த்திகை மாத மக நட்சத்திரத்தில் அனுட்டிக்கப்படுகிறது.

நாவலர் விட்டுச்சென்ற பணிகளைத் தொடர்ந்து ஆற்றவும் அவரது உடைமைகளைப் பாதுகாக்கவும் நாவலர் சபை உருவாக்கப்பட்டுள்ளது. இதன் தலைமைத்துவத்தின் கீழ் 1979ஆம் ஆண்டு நாவலர் நூற்றாண்டு விழா நாடளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டுள்ளது. நாவலரை சுதேசியப் பெரியோர்களில் ஒருவராக நமது இலங்கை அரசாங்கம் அங்கீகரித்ததோடு அவரது பணிகளைக் கௌரவித்து முத்திரை ஒன்றையும் வெளியிட்டது. நாவலரது நினைவு கூருமுகமாக நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கருகில் நாவலர் மண்டபமும் நாவலர் வீதியிலுள்ள அவரது இல்ல வளாகத்தில் இந்து கலாசார மண்டபமும், தொல் பொருளியல் திணைக்களத்தினால் யாழ்ப்பாணத் தொல் பொருட்காட்சிசாலையும் நிறுவப்பட்டன.

# மாசிமகமும்

# அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களும்

ஆ. இராஜரத்தினம்
முன்னாள் பிரதிக்கணக்காளர் நாயகம்

இந்தச் சரீரம் நமக்கு கிடைத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம் என்பது நாவலர் வாக்கு. முத்தி என்பது விடுதலை. மானிடப்பிறப்பின் பயனை இறைவழிபாட்டின் மூலம் நாம் பெறலாம்.

இந்த வகையில் ஆலயங்களில் நடைபெறும் விழாக்கள் விரதங்கள் நம்மை மேலான நிலைக்கு இட்டுச் செல்லும். மாசி மகத்தில் வரும் கடலாட்டு விழா சைவ மக்களால் கொண்டாடப்படும் பெருவிழாவாகும். தீர்த்த விழாக்களில் சிறந்தது மாசி மகத் திருவிழாவாகும். பன்னிரண்டு ஆண்டுக்கொருமுறை வருவது மகாமகம். அதாவது குருபகவான் சிங்கராசியில் வரும் காலம். அப்பொழுது குருபகவானின் பூரண பார்வையை சூரியன் (கும்பம்) பெறுவான்.

அதை கும்பமேளா என்று கூறுவார்கள். அன்று ரசிகன் ஞானிகள் சித்தர் பக்தர்கள் யாபேரும் திருவேணி சங்கமத்தில் நீராடி இறையருள் பெறுவார்கள்.

இறைவனுக்கு பற்பல சிறப்புக் காலங்களில் நீராட்டு விழா நிகழ்வதாயினும் மாசி மாத மக நட்சத்திரமே நீராட்டுக்கு மிகவும் சிறப்புடையதாகக் கொள்ளப்படுகின்றது.

இதனை திருஞானசம்பந்த பெருமானது அருள் வாக்காலும் அறியக்கூடியதாகவுள்ளது.

மடலாந்த தெங்கின் மயிலை ஆர்மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீசரம் அமர்ந்தான்
ஆடல் ஆனேறூரும் அடிகள் அடிபரவி
நடம் ஆடல் காணாதே போதியோ பூம்பாவாய்

இம்மாசிக் கடலாட்டு விழாவின் சிறப்பை நினைத்து கண்டு வணங்கி புண்ணிய தீர்த்தங்களில் நாமும் கடலில் நீராடிப் பயன் பெறுவோமாக.

அருட்கவி ஐயா அவர்கள் சம்மாங்கோட்டார் - பம்பலப்பிட்டி மாணிக்கவிநாயகர் மீது தோத்திரப்பாடல்கள் பாடி இப்படியான மாசிமக நன்னாளில் அரங்கேற்றிய திருவருள் நிகழ்வை இன்று மாசி மகத்தன்று நினைவு கூர்தல் சிறப்புடையதாகும்.

ஈழநாட்டில் சைவமும் தமிழும் நலமடைய அவதரித்தவர் ஆறுமுக நாவலர். அவருக்கு வாழையடி வாழையாக வந்த திருக்கூட்டத்தில் நமது காலத்தில் எமக்கும் கிடைத்த அருளாளர்களில் அருட்கவியும் ஒருவர். அவர் 1923.11.03 ஐப்பசி மக நட்சத்திரத்தில் சனி வாரத்தில் அளவெட்டியில் சைவமும் தமிழும் உயிரென வாழும் குடும்பத்தில் கதிர்காமக் கந்தன் அருளால் பிறந்தார்.

சைவத்தமிழ் வித்தகராக ஆசிரியராக சமயப் பிரசாரகர அருள் வாக்கு சித்தராக நம்மிடையே வாழ்ந்தவர். வந்தவர்க்கெல்லாம் ஆதரவும் அருள் ஆசியும் ஆறுதலும் அளிப்பார். அம்பிகையயின் அருள் பெற்று அண்டியவர்கெல்லாம் அவரவர் துன்மம் துடைக்கும் பெரும் பணியை ஆற்றினார்.

இறைவி அருளால் ஈழத்து திருத்தலங்கள் மேல் கவிதைகள் தோத்திரங்கள் பிள்ளை தமிழ்-அந்தாதி ஊஞ்சல் கீர்த்தனைகள் தலபுராணங்கள் பாடிய பெருமானாவார்.

வானொலியில் கதாப்பிரசங்கங்கள் உபந்நியாசம் - பண்இசை - நற்சிந்தனை - கவிதை அரங்கம் முதலிய ஆற்றும் பொருட்டு காலாகாலம் கொழும்பு வருவார். வருங்காலத்தில் அடியேனுடன் தங்கும் பாக்கியம் பெற்றேன். என்ன புண்ணியம் செய்தது என்குடிசையே.

1.1.1966 - 31.12.66 வரை ஐயா அவர்கள் கொழும்பு - இரத்மலானை இந்து பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

மாணிக்க விநாயகர் அடிகளாகிய எங்கள் வேண்டுகோட் கிணங்கி மாணிக்க விநாயகர் மீது பக்தி பாடல்கள் பாடி அவற்றை மாசிமகத்தன்று விசேடபூசையுடன் அவரேபாடி அரங்கேற்றி எம்பிரான் பாதாரவிந்தத்தில் சமர்ப்பணஞ் செய்தார்.

வருடாவருடம் அன்பர்கள் மாசி மகத்தனது அப்பாடல்களை கூட்டுப்பிரார்த்தனை செய்வது திருவருளே. மேலும் விநாயகர் மீது பள்ளியெழிச்சி ஊஞ்சலும் பாடித்தந்தருளினார்.

அவற்றை தொடுத்து ஒரு சிறு நூல் வெளியிட்டு அன்பர்கட்கு விநியோகம் செய்ததும் திருவருளே.

ஐயா அவர்கள் அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் 50 வருடங்களுக்கு மேலாக தொடர்புடைய வராக ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் இருந்தார்.

2005-12-11 அன்று அருட்கவி ஐயா சமாதி அடைந்தார். அவருக்கு அகில இலங்கை இந்து மாமன்றம், கொழும்பு விவேகானந்தசபை, ஈழத்து திருநெறித் தமிழ் மன்றம் ஒருங்கிணைந்து ஒரு அஞ்சலி கூட்டம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடாத்தியது. அதற்கு சிறப்பு அதிதியாக செஞ்சொற் செல்வன் ஆறுதிருமுருகன் வருகை தந்து அரிய சிறப்புரை நிகழ்ந்தினார். அன்று மாசிமகம். அவர் பிறந்தது மகம். நட்சத்திரம், விநாயகர் மீது தோத்திரம் பாடி அரங்கேற்றியது மாசிமகம். அவருக்கு கொழும்பு மக்கள் அஞ்சலி செய்தது மாசிமகத்தன்று இன்றும் அவருக்கு அஞ்சலி செய்து மலர் தூவி வணங்குவோமாக.

# நாவலப்பிட்டி இந்துமன்றம் நடத்திய சைவசமய எழுச்சி விழா

நாவலப்பிட்டி இந்து மன்றம் அதன் தாய்ச் சங்கமாகிய அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையுடன் கடந்த 23.10.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் முழு நாள் நிகழ்வாக நாவலப்பிட்டி தமிழ் கலாசார மண்டபத்தில் நாவலப்பிட்டி இந்து மன்றத்தின் தலைவர் திரு. R. இராஜேந்திரன் தலைமையில் சிறப்புற நடந்தது. இவ் விழாவிற்கு பிரதம அதிதியாக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை ஆதீன முதல்வர்) மற்றும் கௌரவ அதிதிகளாக நாவலப்பிட்டி நகரசபைத் தலைவர் திரு நிஷாந்த ரணசிங்க, அகில இலங்கை இந்து மாமன்றத்தின் கௌரவ பொதுச் செயலாளர் திரு.க. நீலகண்டன், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவரும் யாழ்பிரதேச சைவ ஆராய்ச்சி களத்தின் கௌரவ இயக்குநரும், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும், யாழ் ஸ்கந்தவரோதய கல்லூரியின் அதிபருமான சைவஞானபானு, செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன், கொழும்பு தமிழ் சங்கத்தின் கௌரவதலைவரும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பிரதிச் செயலாளருமான கலாநிதி.M.கதிர்காமநாதன், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் விடைக்கொடிச் செல்வர் திரு.சி.தனபாலா, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், நாவலப்பிட்டி நகரசபை தமிழ் உறுப்பினர்களான திரு.K.சுரேஸ்வரன், திரு. M.பிரபாகர், திரு.R.பாரதி, ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக நாவலப்பிட்டி பிரபல சமூக சேவையாளர் லயன் டாக்டர் வே. யோகானந்தன் MJF. J.P. மத்திய மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் திருமதி. P.இராமநாதன், கம்பளை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி M. லோகநாதன், கம்பளை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. M. லோகநாதன், கம்பளை வலய இந்து சமயக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.M. கிருஷ்ணபிள்ளை மற்றும் நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான பரிபாலன சபை செயலாளர் திரு.சு.இராஜசேகரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் பூசை வழிபாட்டுடன் நல்லை ஆதீன முதல்வர் பராமாச்சாரிய சுவாமிகளுடன் மற்றும் அதிதிகள் நாதஸ்வர மேளதாள ஊர்வலத்தோடு மக்கள் புடைசூழ தமிழ் கலாசார மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தமிழ் கலாசார மண்டபத்தில் நாவலப்பிட்டி கதிரேசன் மகளிர் கல்லூரி மாணவிகளின் இறைவணக்கத்துடன் ஆத்மஜோதி நா. முத்தையா அரங்கில், விழா ஆரம்பமாகியது. விழாவின் முதல் நிகழ்வாக ஆத்மஜோதி என். முத்தையாவின் நிழற்படத்திற்கு அவரது மருமகள் திரு.N.நடேசன் (முன்னாள் கதிரேசன் கனிஷ்ட வித்தியாலய அதிபர்) அவர்களால் மாலை சூடப்பட்டு முதல் அரங்கம் களைகட்டியது. மங்கள இசை நாதஸ்வரவித்வான் திரு.S.சிவானந்தன் அவர்களாலும் தவில் வித்வான் திரு.ஆறுமுகம் செந்தூரன் அவர்களாலும் வழங்கப்பட்டது.வரவேற்புரை மற்றும் தலைமையுரை நிகழ்த்திய நாவலப்பிட்டி இந்துமன்ற தலைவர் திரு.R.இராஜேந்திரன் தனது உரையில் நாவலப்பிட்டியில் இந்து மன்றம் தோன்றி கடந்த மூன்று ஆண்டுகளாக அதன் மகுட வாசத்திற்கிணங்க 'தொண்டு வழி நிற்போம்' என்ற அடிப்படையில் தொண்டுகளை ஆற்றி வருவதாலும், அதற்கு தாய்ச் சங்கமான அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணை மிகவும் பயனுள்ளதாக இருந்தது எனவும் காலை நல்லை ஆதீன சுவாமிகள் நாவலப்பிட்டிக்கு வருகை தந்தது இதுவே முதல் தடவையெனவும், இந்த வகையில் நாம் யாவரும் பெரும் பாக்கியம் பெற்றவர்கள் என்றும், நாவலப்பிட்டியை பொறுத்தமட்டில் இந்து சமயத்தை பேணிப் பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும். மலையகம் முழுவதும் சைவத்தையும் தமிழையும் பட்டி தொட்டிகள் சென்று வளர்த்த அரும்பெரும் சேவையாற்றிய ஆத்மஜோதி நா.முத்தையா அவர்களை மறக்கமுடியாது எனவும். கூறினார். எனவே அவரது நினைவு நீடித்திருக்கவேண்டும் என்ற நல்ல நோக்கத்தின் நிமித்தம், ஆத்மஜோதி நா.முத்தையா அரங்கத்தில் முதல் நிகழ்வும் அடுத்து அவரின் அடியொட்டியும் அவருடன் இணைந்தும் இந்து சமயத்தின் வளர்ச்சியிலும், நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் முன்னாள் தலைவருமாகவிருந்து அரும்பெரும் சேவையாற்றிய அமரர். முத்தையாபிள்ளையின் நாமத்தில் மறு அரங்கமும் அமைக்கப்பெற்றது என்றும், தொடர்ந்து இவர்கள் வழிவகுத்துத் தந்த வழியில்செல்லப்பட்டது இந்து மன்றம் மலையகப் பகுதியில் தொண்டுகள் ஆற்ற அணைவரினதும் உதவி ஒத்தாசை வேண்டும் என்றும் கூறினார்.

வருகை தந்த கௌரவ அதிதிகளுக்கு பொன்னாடைபோர்த்தி மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

ஆசியுரை வழங்கிய ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தனது

உரையில் சைவ சமயத்தைச் சார்ந்த சமூகம் எப்படியான வாழ்க்கை வாழவேண்டும் என்பதை விளக்கங்களுடன் வெளிப்படுத்தி திருநீற்றின் பெருமையையும் திருநீற்றுப் பதிகத்திலுள்ள தேவாரங்களை மேற்கோள்காட்டி திருநீற்றினால் நோய்கள் வராது தடுக்கவும், வந்த நோய்களை தீர்க்கவும் பெரும் பேறாகக் கிடைத்துள்ளது என்றும் ஆனால் இன்றைய காலகட்டத்தில் ஒரு சிலர் தங்கள் நெற்றியில் திருநீற்றை ஒருகீறு கீறிவிடுவதுடன் நிற்கிறார்கள் - ஒவ்வோர் சமயத்தவரும் அவரவர் அடையாளங்களை அணிந்து கொண்டுள்ளனர். முன்பெல்லாம் இந்து சமயத்தவர்களுடைய வீடுகளை அடையாளம் காணுவதற்கு தங்கள் வீட்டிற்கு முன்னால் கோலம் போட்டு விடுவார்கள். ஆனால் இன்றைய காலகட்டத்தில் அத்தகைய கோலங்கள் இடுவது அரிதாகிவிட்டது. அதுமட்டுமல்லாது வீட்டின் முன் நந்திக்கொடி கட்டிவிடுவர். ஆனால் இன்றைய காலகட்டத்தின் நந்திக்கொடிகட்டிவிட்டால் மச்சம் மாமிசம் சாப்பிடாமல் விட நேரிடுமே என்ற பீதியினால் தவிர்த்துவிடுகின்றனர். சைவசமயத்தவர்கள் முதலில் நந்திக்கொடியைக் கட்டிவிட்டால் பின்னர் தாங்களாகவே மச்சம் மாமிசத்தை தவிர்த்துவிடுவர். கோவில் சென்று இறைவழிபாடு செய்வதும் குறைந்துவிடுகிறது. இதற்கெல்லாம் முதற் காரணம் தொலைக்காட்சியில் நேரத்தை தொலைத்துவிடுகின்றனர். விரதம் அனுட்டிப்பவர்களில் ஒரு சிலர் ஒரு நேரம் உண்ணாநோன்பைப் கடைப்பிடித்து அடுத்த நேரத்தில் அதிகளவில் உணவை உட்கொண்டு உடல் உபாதைகளுக்குள்ளாகின்றனர். மலையகத்தில் வாழும் மக்கள் இயற்கை அன்னை மடியில் தவழும் பாய்க்கியவான்களாகிறார்கள். சிவனது பாதமும் இம்மலையின்தான் அமைந்துள்ளது. சிவனொளிபாத மலைக்கு அடியில் ஒரு சிவன் கோவில் கட்டுவதற்குரிய அடிக்கல் ஒன்றையும் நேற்றைய தினம் நாட்டி உள்ளார்கள் என்றும் நாவலப்பிட்டி இந்து மன்றம் செய்யும் தொண்டுகளையும் பாராட்டினார்.

சைவஞானபானு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் பேசுகையில் நாவலப்பிட்டியில் நீண்டகாலம் வசித்து ஆத்மஜோதி என்ற நிறுவனத்தை உருவாக்கி அதன் மூலம் மலையகம் முழுவதும் சைவத்தையும் தமிழையும் வளர்த்த பெருந்தகை அமரர் நா.முத்தையாவின் பெயரில் அரங்கு அமைத்து சைவசமய விழாவினை நடத்தும் நாவலப்பிட்டி இந்து மன்றத்திற்கு பாராட்டும், நாவலப்பிட்டி வாழ் மக்களுக்கு நன்றியும் தெரிவிக்கவேண்டும். அமரர் நா.முத்தையா ஒரு காலத்திற்கு முன்பு இங்குள்ள பெருந்தோட்டப் பகுதி மக்களுக்காக அரும்பாடுபட்டவர். அவரது நிறுவனம் அழிந்ததின் பின் யாழ் சென்று இந்து பேரவையை நிறுவினார். அக்காலத்தில் கனடா சென்றபோது உயிர் பிரிய நேரிட்டது. இருப்பினும் அவர் வழியை பின்பற்றி நாவலப்பிட்டி இந்துமன்றம் அதன் தொண்டுகளைத் தொடருவது பாராட்டத்தக்கது. இன்றைய நிகழ்ச்சியில் குறிப்பாக நாவலப்பிட்டியில் மிகவும் பின்தங்கிய பெருந்தோட்டப் பகுதியில் அமைந்த கலபொட தமிழ் வித்தியாலய மாணவர்களின் நிகழ்ச்சியில் சமயக்குரவர் நால்வரையும் தமது தோற்றத்தால் எமது கண்முன் தோன்றவைத்து, அவர்கள் ஆற்றிய சைவசமயப் பணிகளை பேச்சின் மூலமும் காட்சியின் மூலமும் வெளிப்படுத்தியும் மற்றும் ஒரு மாணவி தனது இசைத் திறனை வெளிகாட்டும் சந்தர்ப்பமாக அமையும் விதத்தில் தேவாரங்களைப் பண்ணோடு பாடினார். இப்பகுதியில் சைவ சமய எழுச்சி தற்போதே தோன்றிவிட்டது என்பதில் இரண்டுபட்ட கருத்துக்கிடையாது எனக் கூறினார். மேலும் அவர் நால்வரது வாழ்க்கை வரலாற்றினை விபரமாக வெளிப்படுத்தியதுடன், ஞானசம்பந்தர் தேவாரத்தில் "தோடுடையசெவியன்" என்ற பதத்தில் "தோடுடைய" என்பது பெண்பாலுக்குரியது செவியன் என்பது ஆண்பாலுக்குரியது. எனவே! சிவனும் பார்வதியும் சேர்ந்த அர்த்தநாரீஸ்வரர் தோற்றத்தைப் பாலகனாக இருந்த சம்பந்தரின் தேவாரத்தில் வெளிப்படுத்தியிருந்தது. இவ்விழாவில் நாவலப்பிட்டி நகர சபைத் தலைவர் திரு நிஷாந்த ரணசிங்க, பேசுகையில் நாவலப்பிட்டி நகரத்திற்கு நல்லை ஆதீன சுவாமிகள் வருகை புரிந்தது இந் நகரத்தின் பெரும் பாக்கியம் எனவும் ஒவ்வொருவரும் தக்க சமயத்தை சரியான முறையின் பின்பற்றாததால்தான் நாட்டில் அமைதியின்மை மற்றும் குற்றங்கள் பெருகுவதற்கும் காரணமாக அமைகிறது என்றார்.

கொழும்பு தமிழ் சங்கத் தலைவரும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பிரதிச் செயலாளருமான கலாநிதி மு.கதிர்காமனாதன் அவர்களும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் விடைக்கொடிச் செல்வர் அவர்களும் சிறப்புரை ஆற்றினார்கள்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி க. நாகேஸ்வரன் அவர்களது இன்னிசை விரிவுரை "செந்தமிழ் தெய்வம் முருகன்" என்ற தலைப்பில் இடம் பெற்றது. இதற்கு மிருதங்க வித்துவான் பி.திருநாவுக்கரசு மிருதங்கம் வாசித்தார் இவ்விழாவில் கலபொட தமிழ் வித்தியாலய மாணவர்களின் நிகழ்ச்சி பலராலும் பாராடடத் தக்கதாக அமைந்தது. இந் நிகழ்ச்சியில் தேவாரத்தை மாணவி து.மகேஸ்வரி. இசையோடு பாடியதைக் கேட்டு இரசித்த ரசிகை மோதிரத்தை மேடையில் வைத்து அன்பளிப்புச் செய்தார். ஆலய அறநெறிப் பாடசாலை மாணவிகள், நாவலப்பிட்டி பர்வதா நர்த்தனாலய மாணவிகள், மத்திய மாகாண நிர்த்திய கலாலய மாணவிகளின் நடனங்களை பலரும் பார்த்து பரவசப்பட்டார்கள் நாவலப்பிட்டி இந்து மன்றத்தின் வயலின் இசைக் கலைஞர்களினால் வயலின் இசைக்கப்பட்டது. சிறப்புப் பட்டிமன்றம் பக்தி நெறியின் விஞ்சி நிற்பது ஆண்களா? பெண்களா? என்ற தலைப்பில் கம்பளை இந்துக்கல்லாரி மாணவர்களும், நாவலப்பிட்டி கதிரேசன் மத்திய கல்லூரி மாணவர்கள் பங்கு பற்ற நடுவராக அகில இலங்கை இந்து மாமன்றத்தின் கௌரவ பொதுச்செயலாளர் திரு.கந்தைய நீலகண்டன் கடமையாற்றினார். நாவலப்பிட்டி கதிரேசன் மத்திய கல்லூரி மாணவிகளால் நாட்டிய நாடகமும் இடம்பெற்றது. நாவலப்பிட்டியில் இந்து சமயத்தை வளர்த்த நாவலப்பிட்டி

ஸ்ரீ முத்துமாரியம்மன் பரிபாலனசபை முன்னாள் தலைவரும் இறைப்பணிச் செம்மல் அமரர் S.முத்தையாபிள்ளையின் நினைவாக பிற்பகல் அரங்கில் நிகழ்வுகள் யாவும் இடம்பெற்றன. யாழ்ப்பாணம் அகில இலங்கை இந்து மாமன்ற அனுசரணையுடன் நடாத்தும் சைவ வித்தகர் பட்டப்பயிற்சி மாணவர்களின் சிறப்பு வில்லுப்பாட்டு நிகழ்வும் நடந்தது. இம் மாணவர்களின் முதல் மேடை அரங்கமாக இந் நிகழ்வு அமைந்திருந்தது. மாணவர்கள் தங்கள் முழுத்திறமையை வெளிகொணர்ந்து மக்களின் பாராட்டினைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வு ஆரம்பிக்கும் போது திருமதி முத்தையாபிள்ளை அமரர் முத்தையாபிள்ளையின் நிழல் உருவத்திற்கு மாலை அணிவித்து ஆரம்பித்து வைத்தார்.

இவ் விழாவை முன்னிட்டு நாவலப்பிட்டி பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற இந்துசமய தேவாரம், கட்டுரை, புதிர் போட்டிகளில் வெற்றிபெற்ற முதல் மூவருக்கும் சான்றிதழ்களும் பரிசில்களும், 5ம் வகுப்பு புலமைப் பரீட்சையில் விசேட சித்தி பெற்ற நாவலப்பிட்டி பகுதி மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டதுடன் இவையாகவும் ஆதீன சுவாமிகளின் கரங்களால் வழங்கப்பட்டது.

இந்து மன்றத்தின் பொதுச் செயலாளர் திரு.பி.திருநாவுக்கரசு நன்றியுரை நிகழ்த்தியதுடன் அரங்க நிகழ்வுகள் யாவும் இனிதே நிறைவுபெற்றன.

# மாமன்றத்தின் அனுதாபம்

## கட்டிடக் கலைஞர் வி.எஸ். துரைராசா

அகில இலங்கை இந்து மாமன்ற கட்டடத்தை கற்பனையில் வரித்துக்கொண்டு அதனை வரைபடமாக்கி, கட்டட நிர்மாணப் பணியின் போது காலத்தின் தேவைக்கேற்ப மாற்றங்கள் செய்து அதற்கான விளக்கங்களையும் தந்து மாமன்ற கட்டடம் உயர்வதற்கு அரும்பணியாற்றிய பெரியவர் திரு.வி.எஸ். துரைராசா அவர்கள் அவுஸ்திரேலியாவில் காலமானார் என்பதை அறிந்து அதிர்ச்சியும், துயரமும் அடைந்தோம். இந்து மாமன்ற கட்டடக் குழுவில் அவரது பங்களிப்பு அளப்பரியது. கட்டிடக் கலைஞர் வி.எஸ். துரைராசா அவர்கள் கட்டிட அமைப்புக்குத் தேவையான வரைபடங்களை எமது நிர்மாணவேலைகள் அவ்வப்போது தடைப்பட்ட போதும் மீள ஆரம்பிக்கும் போதும் நவீன கட்டட யுத்திகளோடும், திராவிடக்கலைகளை பிரதிபலிக்கும் வகையிலும் வரைபடங்களை அழகுறவரைந்து எமது மாமன்ற கட்டடப்பணிகளில் தோளோடு தோள்நின்று உழைத்த பெருமகன். நிர்மாண வேலைப்பணிகளின் போது தனது வேலைப்பழுவையும் பொருட்படுத்தாது கட்டடவளர்ச்சிக்கு ஆலோசனை வழங்கியும், விளக்கங்கள் கூறியும் உதவியவர். பல கட்டடங்களை நமது பண்பாட்டின்மூலம் நமது பண்பாட்டினை பிரதிபலிக்கும் வகையில் தன் கலைத்திறன் மூலம் மெருகூட்டிய பெருமை இவரையே சாரும். தமிழாராய்ச்சி மாநாடுகளில் மிகவும் ஆர்வத்துடன் அளப்பரிய பணியாற்றியும், பல ஆலயங்களின் அமைப்புக்களுக்கும், இந்து நிறுவன கட்டடங்களுக்கும் வரை படங்கள் தந்தும் தமிழுக்கும் சைவத்திற்கும் பல வழிகளிலும் உதவியவர். எமது கட்டிடவளர்ச்சி அவர் ஆற்றிய பணி நம்மனதில் பசுமரத்தாணிபோல் இருக்கிறது. அவரது கட்டடப்பணிக்குச் சான்றாக எமது மாமன்ற தலைமையகம் யாழ் பல்கலைக்கழகம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தூபி என்பன சாட்சி கூறி நிற்கின்றன.

அப்பெருமகனின் மறைவால் வாடும் குடும்பத்தினருக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் தனது அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா சாந்தியடைய ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் பாதார விந்தங்களை வேண்டி நிற்கின்றோம்.

## சமயப்பணியாளர் நா. சுப்பிரமணியம் அவர்கள்

வடகொழும்பு இந்து பரிபாலன சபையின் பேராளரும் அகில இலங்கை இந்து மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினருமான திரு. நா. சுப்பிரமணியம் அவர்களது திடீர் மறைவு தமிழ் மக்களுக்கும் குறிப்பாக இந்து மக்களுக்கு பேரிழப்பாகும். பல்வேறு சமயப்பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் துடிப்பாக இயங்கிய சமயப்பணியாளர். தமிழ் ஆர்வம் மிக்க பெரியார். வடகொழும்பு இந்து பரிபாலன சபையின் வளர்ச்சிக்கும் மாமன்றத்தின் சமயப்பணிகளுக்கும் பல்வகைகளிலும் துணையாய் இருந்து நற்பணிசெய்தவர்.

அவரின் மறைவால் வாடும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவர்களின் சோகத்திலும் நாமும் பங்கெடுத்துக் கொள்கின்றோம். அவரின் ஆத்மா இறைவனடி சேர பிரார்த்தித்து நிற்கின்றோம்.

## திருத்தம்

2011 ஏப்ரல் தொடக்கம் 2011 செப்ரம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் தையல் இயந்திர நன்கொடைக்காக கிடைத்த அன்பளிப்புக்கள் "இந்து ஒளி" "தீபம் 16 – சுடர் 1 இன்" 40ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டது. இதில் 16-06 –2011 இல் ரூ 10500/= அன்பளிப்புச் செய்த திரு K. ஜெகதீசன், கொழும்பு – 03 என்பவரது பெயர் தவறுதலாக திரு. K. ஜெகநாதன் என பிரசுரிக்கப்பட்டுள்ளது. தயவு செய்து இதனை "திரு. K. ஜெகதீசன்"என திருத்தி வாசிக்கவும். தவறுதலுக்காக இந்து மாமன்றம் தனது கவலையைத் தெரிவித்துக்கொள்கிறது.

## கல்விப் பயிலரங்கு



காலி நாச்சியாதெனிய தலங்கா சரஸ்வதி தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்து சமய பாடப் பயிலரங்கு. மேடையில் அகில இலங்கை இந்து மாமன்ற கல்விக் குழுச் செயலாளரும், ஆசிரியைகளான அ. நிர்மலா, ந. சுபாஷினி, மா. தேவமணி ஆகியோர் அமர்ந்திருப்பதையும், பங்குபற்றிய மாணவர்களில் ஒரு பகுதியையும் காணலாம்.



குருணாகல் இந்து தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்து சமய பாட பயிலரங்கு.
மாமன்றக் கல்விக் குழுச் செயலாளர் த. மனோகரன், வித்தியாலய அதிபரிடம் பாடநூலை வழங்குவதையும் அருகில் ஆசிரியை விஜயலட்சமி தம்பிராஜா அமர்ந்திருப்பதையும் காணலாம்.

## சமூக நலன் குழு அன்பளிப்பு



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் மாமன்ற யாழ் பிராந்திய அலுவலகத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ். பகுதிவாழ் பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்காக தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. அந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரியார், மாமன்ற உபதலைவர் விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா மற்றும் மாமன்ற உப தலைவர் சைவஞானபானு, செஞ்சொற்செல்வர், கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சைவப் பெரியார் இ. நமசிவாயம் அவர்களின் அஞ்சலி நிகழ்வுகள் - 25.12.201



சைவப் பெரியார் இ. நமசிவாயம் அவர்களின் நிழற்படம்



இரத்மலானை சக்தி இல்லப் பிள்ளைகளின் இறைவணக்கம்.







சைவப் பெரியார் நிழற்படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் காட்சி.





சைவப் பெரியார் இ. நமசிவாயம் அவர்களின் மறைறையொட்டி (25.012.2011) ஞாயிற்றுக்கிழமை அகில இலங்கை இந்து மாமன்றம், திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை, இந்துவித்தியாவிருத்திச் சங்கம், கொழும்பு தமிழ்ச்சங்கம் ஆகியவை இணைந்து பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அஞ்சலிக் கூட்டமொன்றினை நடத்திய காட்சிப் படங்கள்.

அஞ்சலிக் கூட்டத்தில் அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் ஆகியோர் உரையாற்றுவதைக் காணலாம்.





அஞ்சலிக் கூட்டத்திற்கு வருகை தந்தோரில் ஒரு பகுதியினரையும், நிறைவாக இறைவணக்கம் இடம்பெறுவதையும் காணலாம்.

# இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் வைரவிழா - 11.02.2012



← கொழும்பு (பம்பலப்பிட்டி) இந்துக் கல்லூரி இளைப்பாறிய துணை அதிபர் திரு. கே. ரி. இராஜரத்தினம் அவர்களின் சேவை நலன் பாராட்டி ஸ்தாபகர் சங்கம் வழங்கும் நினைவுச் சின்னத்தை திருமதி. ஸ்ரீபவன் வழங்குகிறார்.

கொழும்பு (பம்பலப்பிட்டி) இந்துக் கல்லூரியில் சேவையாற்றி 11.02.2012இல் இளைப்பாறிய துணை அதிபர் செல்வி சா. வேலுப்பிள்ளையின் சேவைநலனைப் பாராட்டி ஸ்தாபகர் சங்கம் வழங்கிய நினைவுச் சின்னத்தை பிரதம விருந்தினர் நீதியரசர் க. ஸ்ரீபவன் அவர்கள் வழங்குகிறார். →





← சரஸ்வதி மண்டபத்தின் முகாமையாளராக நெடுங்காலம் சேவையாற்றி இளைப்பாறிய முகாமையாளர் திரு. எஸ். மகாதேவனின் சேவைநலன் பாராட்டி வழங்கிய நினைவுச் சின்னத்தை நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா வழங்குகிறார்.

இந்து வித்தியாவிருத்திச் சங்கப் பெண்கள் விடுதி முகாமையாளரின் நெடுங்காலச் சேவை நலனைப் பாராட்டி சங்கம் வழங்கிய நினைவுச் சின்னத்தை சங்கத் தலைவர் திரு. இராமச்சந்திரன் வழங்குகிறார். →



# இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் வைரவிழா - 11.02.2012



←

சங்க வைரவிழா வெளியீடான 'இந்துக்கல்வி மறுமலர்ச்சி' இதழின் முதற் பிரதியை நீதியரசர் க. ஸ்ரீபவன் அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் இறைசிரோரத்தினம், மனிதநேய மாமணி திரு. வி. கயிலாசபிள்ளை அவர்களுக்கு வழங்குகிறார்.

நூலின் சிறப்புப் பிரதியை நீதியரசர் க. ஸ்ரீபவன் நூலை அச்சிட்ட யுனி ஆர்ட்ஸ் முதல்வர் திரு. பொன். விமலேந்திரன் அவர்களுக்கு வழங்குகிறார்.

→





சிறப்புரையாற்றிய முத்தமிழ்ப் பேரரசி ஞான வித்தகி பேராசிரியை சரஸ்வதி இராமநாதன் அவர்கள்.

# இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் வைரவிழா - 11.02.2012



← கொழும்பு (பம்பலப்பிட்டி) இந்துக் கல்லூரி புதிய அதிபர் திரு. ஐ. இராசரத்தினம் அவர்களை ஸ்தாபகர் சங்கம் சார்பில் தலைவர் திரு. ச. இராமச்சந்திரன் வரவேற்று கௌரவிக்கிறார்.



இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி புதிய அதிபர் திரு. த. கணேசராசாவை ஸ்தாபகர் சங்கம் சார்பில் சபைத் தலைவர் திரு. ச. இராமச்சந்திரன் வரவேற்றுக் கௌரவிக்கிறார். →



← கொழும்பு *(பம்பலப்பிட்டி) இந்துக் கல்லூரி இளைப்பாறிய அதிபர் கலாநிதி த. முத்துக் குமாரசாமி அவர்களை ஸ்தாபகர் சங்கத்தின் சார்பில் பிரதம விருந்தினர் நீதியரசர் மாண்புமிகு க. ஸ்ரீபவன் அவர்கள் சேவை நலன் பாராட்டிக் கௌரவிக்கிறார்.



இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி இளைப்பாறிய அதிபர் திரு. ந. மன்மதராஜனை ஸ்தாபகர் சங்கத்தின் சார்பில் சிறப்பு விருந்தினர் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் மாண்புமிகு நீதியரசர் சு. ஸ்ரீஸ்கந்தராஜா சேவை நலன் பாராட்டிக் கௌரவிக்கிறார். →

இக் காலாண்டிதழ் இல. 48B, புளுமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது